# காற்றுவெளி

கலை இலக்கிய இதழ்

மாசி - 2024



# காற்றுவெளி

**கலை இலக்கிய இதழ்**

மாசி - 2024

படைப்புக்கள் அனுப்ப :

neythal34@gmail.com

mahendran1954@hotmail.com

படைப்புக்களின் கருத்துக்களுக்கு
ஆக்கதாரரே பொறுப்பு.

- ஆசிரியர் : சோபா
- அட்டைப் படம் : Aida Muluneh
- வடிவமைப்பு : நெகிழன்
- ஆலோசனைக்கு/நூல் அனுப்ப :
  R.Mahendran,
  34,Redriffe Road, Plaistow, Londan E13 0JX, Uk
- சந்தா : 12 இதழ்களுக்கு 8.00 பவுண்ட்
- R.Mahendran,
  A/C No: 90759821
  Sort.Code: 20-67-88,
  SWIFTBIC BUKBGB22
  IBAN GB80 BUKB 2067 8890 7598 21
  BARCLAYS BANK (PLAISTOW BRANCH)


**வணக்கம்,**

யாவரும் நலமா? மாசி மாத (2024) மின்னிதழ் தங்கள் பார்வைக்கு வருகிறது. தை இதழ் சற்று தாமதமாக வந்தாலும் பலரிடமும் சென்று சேர்ந்திருப்பது மகிழ்வைத் தருகிறது.

மேலும், அவ்வப்போது காற்றுவெளி சிறப்பிதழ்களையும் தந்துள்ளது.கவிதை,சிறுகதை,மொழிபெயர்ப்பு,நம்மவர் சிறுகதைகள்,சிற்றிதழ்களுக்கான சிறப்பிதழ்களுடன் நமது ஈழத்து அமர எழுத்தாளர்களின் -ஞாபகார்த்த சிறப்பிதழ்களையும் தந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.இவ்வாண்டும் சில சிறப்பிதழ்களையும் கொண்டுவரும் எண்ணம் உண்டு.எமது அடுத்த பங்குனி மாத இதழ் மொழிபெயர்ப்புச் சிறப்பிதழாகவும்,தொடர்ந்து நமது ஈழத்து எழுத்தாளர்.அமரர்.எஸ்.அகஸ்தியர் அவர்களின் ஞாபகார்த்த வெளிவரவுள்ளது.

கூடவே, அமர எழுத்தாளர். அ.ந.கந்தசாமி,அமரர்.காரை.எஸ்.சுந்தரம்பிள்ளை ஆகியோரின் நினைவுச் சிறப்பிதழ்களை வெளிடவுள்ளோம். தொடர்ந்து ஆதரவு தரும் படைப்பாளர்கள் எமது சிறப்பிதழ்களுக்கும் படைப்புக்களைத் தந்து ஆதரவு தரும்படி கேட்டுகொள்கிறோம். காற்றுவெளி அச்சில் வருவதில் தாமதமாகிறது. சந்தா,விளம்பரங்கள் ஏதுமில்லாமல் தனி நபர் உழைப்பில் தான் வெளிவருகிறது.படைப்பாளர்களின்றி ஏதும் சாத்தியமாகியிருக்காது.

புத்தகங்கள் அறிமுகத்திற்காக நூல்களைக் கோரியிருந்தோம்.முன்னர் கடைகளில்,விழாக்களில் வாங்கியே அது பற்றிய குறிப்புக்களை எழுதிவந்திருந்தோம்.அறிமுகவிழாக்கள்,நூல்கள்/சிற்றிதழ்கள் பற்றிய தகவல்களைத் தனியாகவும்,இலக்கியமுயற்சிகளில் ஆர்வம் காட்டும் வானொலிகளின் அறிமுகங்களையும் செய்துவந்திருந்தோம். ஆனாலும் இவைகளின்,இவர்களின் பாராமுகம் தொடர்ச்சியாக வெளியிடமுடியாது போயிற்று. எதிர்காலத்தில் மீளவும் சாத்தியமாகலாம்.

உலகின் போர்,நோய் பற்றிய அச்சுறுத்தல் அதிகரித்துக்கொண்டே வருகிறது.சாந்தியும்,சமாதானம் பற்றிப் பேசிக்கொண்டாலும் வல்லாதிக்கங்களின் அதிகாரப்போட்டிக்களும்,பிராந்தியங்களின் ஊருவல்,ஆக்கிரமிப்பு,வலிமை குன்றிய நாடுகளை வளைத்துப்போடுதல் என்பன தொடரவே செய்கிறது.இதனால் போராடும் இனக்குழுமங்களின் நியாயமான போராட்டங்கள் நீர்த்துப்போகும் சூழலையே நாம் காண்கிறோம். இவை மாறவேண்டும். மக்கள் அனைத்து அச்சங்களுமின்றி சுபீட்சமாகவும்,சுய நிர்ணய உரிமையுடன் இறைமையுடனும் வாழ எதிர்காலம் அமையவேண்டும்.

யாவற்றுக்குமாக பிரார்த்திப்போம்.

நம்பிக்கையுடன்,

சோபா

*01/02/2024*

# படைப்பாளர்கள்

## கவிதைகள்

*1. ச. சத்தியபானு*
*2. பாலரஞ்சனி சர்மா*
*3. ச.ஆனந்தகுமார்*
*4. மீரா (தமிழகம்)*
*5. குமரன்விஜி*
*6. கண்ணன் (விஸ்வகாந்தி)*
*7. தானா விஷ்ணு*
*8. நேசன் மகதி*
*9. தங்கேஸ்*
*10. கவிஜி*
*11. சா. கா. பாரதி ராஜா*
*12. ரகுநாத் வ*
*13. வி.அபிவர்ணா*
*14. க. புனிதன்*
*15. ஏ எம் கஸ்புள்ளா*
*16. அன்புச்செல்வி சுப்புராஜூ*
*17. ரோஷான் ஏ.ஜிப்ரி*
*18. வட்டக்கச்சி வினோத்*
*19. ச. இராஜ்குமார்*
*20. கனகசபாபதி செல்வநேசன்*
*21. சீ.பாஸ்கர்*
*22. இரா.தனவந்தன்*
*23. மெய்யன் நடராஜ்*
*24. யுகயுகன்*
*25. ஜே.வஹாப்தீன்*
*26. மயிலிறகு மனசு (ஷிபானா அஸீம்)*

## சிறுகதைகள்

*27. நௌஷாத் கான் லி*
*28. இரா. மதிராஜ்*
*29. ஸ்ரீவி.முத்துவேல்*
*30. தாமோதரன் சாது*
*31. தி.வள்ளி*
*32. பட்டுக்கோட்டைராஜா*

## கட்டுரைகள்

*33. த.சிவபாலு(கனடா)*
*34. சமயக்கண்ணு, மதுரை*
*35. ச.வாசுதேவன்*




# ச. சத்தியபானு கவிதைகள்

திண்ணையில் காய்ந்த
அரிசிக்கு வேண்டாத
விருந்தாளியாய் காக்காவும்
வேண்டிய விருந்தாளியாய்
சிட்டுக்குருவி வந்து
எடுத்து சென்றது....!
மீதமிருக்கும் அரிசியை
அள்ள மனமில்லாத மகள்
வாசலில் சிதறினாள்
தேடி வந்தது வெகு நாட்களாய்
காணமால் போயிருந்தா
வீட்டுக்கோழி....!

❍

ஒருமித்த சத்தமிட்டு எழுப்புகிறது வனம்
வாசம் செல்லும் பறவைகள்
விடிந்தும் வெளியே வராமல் எட்டிப்
பார்க்கிறது வானில் மறையும் சூரியனுக்காக
இரவு முழுவதும் பூட்டப்பட்ட கதவுகள்
அதிகாலை காற்றை வரவேற்க மெல்ல
திறக்கப்படுகிறது காத்துக் கொண்டிருக்கிறது
வாசல் கோலங்கள் சூரியனை வரவேற்று
புதுவரவை அடைவதற்காக
பனியில் தனித்து காத்திருந்த செடியொன்று
சூரிய ஒளியால் புத்துயிர்
பெறுவதற்காக
எண்ண சிறகுகளை விரிவாக்கி பறக்க
நினைக்கும் கவிஞன்
ஏதோ ஒரு மூலையில் அமர்ந்து
சூரியன் எரிப்பதில்லையென்று கவிதை
எழுதுகிறேன்....



# ஹைக்கூ கவிதைகள்

குளத்தின் முகத்தில் கூடவா
அம்மைத் தழும்புகள்
ஓ! மழைத்துளி

❍

அடுக்கடுக்காய் மின்னல்
ஆற்றில் பாதமுதைத்து
விளையாடும் சிறுவன்.

❍

விரியாத மொட்டே
உன்னில் அமர்ந்திருக்கும்
பனித்துளிகள் பாவம்.
தினம் ஒரு வீடுகட்டி
இடிந்துவிழ ஏமாந்துபோய்
அகதியானது சிலந்தி.

❍


உடைந்த
வர்ண வளையலைக் காணவில்லை
அட,வானில் வானவில்.

கவிதாயினி பாலரஞ்சனி சர்மா
'மனசின் பிடிக்குள்' நூலிலிருந்து
நன்றி:மாத்தளை மகாதேவன்

ச.ஆனந்தகுமார்

# யாருமற்ற சிலுவை

கசப்பு திரவம் நிரப்பிய குப்பியை
நினைவுகள் என.. எறிய முடியாமல்
பரஸ்பரம் உருகுகின்றோம்..
தருக்கின் உச்சத்தில் உமிழ்ந்த
வெம்மையின் தனல் முழுமையாய்
தணிந்து விடவில்லை..
மூச்சுத்திணறும் உன் அருகாமைகள்
வசீகரமாய் புன்னகைத்து நகர
மறுக்கின்றது
நிகழ்வுகளை திசுக்களுக்குள் புகுத்தி
மறதி அமிலத்தில் கழுவ முயற்சிப்பதை
தோல்வி வெட்கமணிந்து சிரிக்கிறது..
இறந்தகாலத்தோடு வாழ்வது
வரமாகவும் சாபமாகவும் இடைவிடாமல்
ஆடுகிற பெண்டுலமென
ஊசலாடுகிறது வாழ்வியல்..
காலங்களாலும் சொற்கள் நிரப்பியும்
வடிவமைக்கப்பட்ட தன்முனைப்பு
அணை உடைகிற நொடிக்காய்..
கையறுநிலையுடன்
நிகழ்வுச்சிலுவை சுமந்து
சுவாசித்திருக்கிறோம்..



# தமிழ் இலக்கியத்தில் ஆதங்கம், அங்கம், சிலேடை

த.சிவபாலு

அங்கதம் என்பது வசை பாடுதல், பழித்துக்கூறுதல் என்னும் பொருளை இலக்கண நூலார் கொள்ளகின்றனர் எனினும் அதற்குப் தோளணி, பாம்பு, பொய், மார்பு, யானையுணவு என்பனவும் பொருளாகக் கொள்ளப்படுகின்றன. அங்கதம் பற்றி தொல்காப்பியர் பொருளியலில் குறிப்பிட்டுள்ளார். அங்கதம் என்பதற்கு பழித்துக்கூறுதல், கேலி செய்தல், நகைத்தல் என்னும் பொருளுடையதாக அமைகின்றது. ஒருவரின் செயலை அல்லது கருத்தை இடித்துக்கூறி குற்றங்களை எடுத்துக்காட்டும் முறையைக் கொண்டனவையாக அமைந்துள்ளன. எள்ளி நகையாடல் என்று நாம் இன்று சுட்டும் பொருள் சங்க இலக்கியத்தில் இருந்தே தொடர்ந்து வந்துள்ளது. தீங்கையும் அறிவற்ற செயற்பாட்டையும் எடுத்துக் காட்டி அவர்களின் கபடத்தனத்தைக் காட்டுவதாக அமைகின்றன.

"வசையொடும் நசையொடும் புணர்ந்தன் றாயின் ஆங்கதச் செய்யுள் என்மனார் புலவர்" (தொல். பொ. 434)

பேராசிரியர் பொருள் தரும்போது 'மேற்கூறிய அங்கதச் செய்யுள் வசையேயன்றி, அவ்வசையானே நசை தோன்றச் செய்வது செவியறிவுறை எனப்படாது அங்கதச் செய்யுள் எனவே படும் என்றுரைக்கின்றார். எனவே அங்கதம் என்பது வசையாக மட்டுமன்றி செம்பொருளர்த்தும் பழிச்சொற்களற்றனவாகவும் வரும் என்றுரைப்பதன் மூலம் அங்கதம் தனியே வசைப்பாடலாக மட்டுமன்றி செம்பொருளிலும் வரும் என்பதை அறியமுடிகின்றது.

இதனைப் பழிப்பதுபோலப் புகழ்தல், வஞ்சிப் புகழ்ச்சி, புகழ்வதுபோலப் பழித்தல் என்னும் கருத்துக்களைக் கொண்டனவாக அமைவதனைக் காணலாம்.

'அங்கதம் தானே அரில்தபத் தெரியின் செம்பொருள கரந்;து இருவகைத்தே",-தொல் 1381

எனத் தொல்காப்பியம் குறிப்பிடுவதன் மூலம் அங்கதம் என்பது இருவகைப்பட்டதாக அமைகின்றது. செம்பொருள் என்பதற்கு வசைப் பாடல் என்பதனையும் கரந்தது என்பதனை அது மொழி கரந்துசொல்லின் அது பழிச்சொல்லை வெளிப்படையாகச் சொல்லாது மறைத்து மொழிதலைக் குறிப்பது எனக் குறிப்பிட்டதின் அடிப்படையில் அங்கதம் என்பது எதிர்முரண் கொண்ட வார்த்தை உபயோகத்தைக் கருதுகின்றது.

நச்சினார்க்கினியர் அங்கதச் செய்யுள் என்று விளக்க ஒரு கதைசொல்கிறார்."நக்கீரனார் சங்கத்தில் வைகுந்தநாளிலே கொண்டான் என்னுங் குயவன் பட்டிமண்டபமெய்தி வடமொழியே சிறப்புடையதென்றும் தமிழ் சிறப்புடைய தன்றெனவு மிழித்துக் கூறினான். அதுகேட்ட நக்கீரர் வடமொழியே தமிழைச் சிறப்புடைய மொழியென்று ஒப்புக்கொள்ளுகின்றது தமிழை இகழ்ந்த நின்னை வடமொழியாலே இறக்கும்படி கூறுகிறேன்; அது நின்னை இறக்கச் செய்யாதாயின் தமிழ் தீதேயென்று சொல்லி முரணில் பொதியின் முதற்புத்தேள் வாழி, பரண கபிலரும் வாழி - அரணிலா, ஆனந்த வேட்கையான் வேட்கோக் குயக்கொண்டான், ஆனந்தஞ் சேர்கசுவா கா" என்று கூறலும் அவன் அவ்விடத்தே வீழ்ந்து உயிர்துறந்தான். (ஆனந்தம்-சாக்காடு) அதனை நோக்கிய ஏனையோர் வந்து வேண்ட"ஆரிய நன்று தமிழ்தீ தெனவுரைத்த, காரியத்தாற் காலக்கோட் பட்டானைச் - சீரிய அந்தண் பொதியிலகத்தியனாராணையாற், செந்தமிழே தீர்க்கசுவா கா" என்றொரு வெண்பாப்பாட அவன் உயிர்பெற்றெழுந்தானென்ப."

அங்கதம் என்பது சங்ககாலத்தில் நகைச்சுவையாகக் கூறும் இயல்பினைப் புலவர்கள் கையாண்டுள்ளனர். அவர்களின் அங்கதச் சுவையின் அணுகுமுறை இரண்டு தன்மைகளைக் கொண்டவையாகவே இருந்துள்ளன. ஒன்று வாழ்த்துவதுபோல தவறை எடுத்தியம்புதல். இன்னொன்று பழித்துரைப்பதுபோன்று பாராட்டுதல். ஒருவரது சாயத்தை வெளுக்க வைக்கவோ அன்றி அதனைத் துலக்கவோ இந்த அங்கதப்பாடல்கள் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. இன்றும் இவற்றை நாம் காணமுடியும்.

"பாட்டு உரைநூல் வாய்மொழி பிசியே

அங்கதம் முதுசொல்லோடு அவ்வேழ் நிலத்தும்

வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்

நாற்பே ரெல்லை அகத்தவர் வழங்கும்

யாப்பின் வழியது என்மனார் புலவர்" - தொல் பெருள். (1336)

தமிழ் நாட்டில் வழங்கிவரும் யாப்பு ஏழு வகையானது. அது மூவேந்தர் ஆட்சிசெய்யும் அரசுகளில் வழங்கி வருகின்றது என்பதனை அவர் குறிப்பிடுகின்றார். அக்காலத்து தமிழகத்தை ஆட்சிசெய்த மூவேந்தரின் எல்லைகளாகக் காணப்பட்ட தென்குமரி, வடவேங்கடம் கிழக்கு வடக்கு எல்லைகளாகக் கடலையும் அவர் காட்டுவதன்மூலம் அங்கு தமிழ் பாடல்கள்நிலைபெற்றுள்ளதாக புலவர்வகள் குறிப்பிடுகின்றனர். அந்த பாவகை ஏழனுள் 'அங்கதம்' என்பதும் பாவினத்தில் ஒரு வகை எனக் கொள்ளப் படுகின்றது. பண்டைய காலந்தொட்டே அங்கதம் என்பது பாடல்களில் இடம்பெற்றுற்றமையைக் காணலாம். ஔவை தொடக்கம் ஒட்டக்கூத்தன், கம்பன் போன்றோர் இவ்வித அங்கதப்படால்களை யாத்தள்ளனர். அது

பாரதியாலும் கையாளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது மட்டுமன்றி இன்றும் அது பல்வேறு வடிவங்களில் இடம்பெறுவதனை காணலாம்.

‘கானமயில் ஆடக் கண்டிருந்த வான்கோழி
தானும் அதுவாகப் பாவித்துத் தன் -பொல்லாச்
சிறகை விரித்தாடினாற் போலுமே
கல்லாதான் கற்ற கவி

கற்றவர்களை அழகிய மயிலுக்கும் கல்வி யறிவில்லாத அறிவிலிகள் தாம் கற்றவர்கள் போலப் பாசாங்கு செய்தால் எப்படி என்பதனை வான்கோழி தனது சிறகை விரித்து ஆடினால் எப்படி அதனை பார்த்து ரசிக்கமுடியாதோ அதே போன்றது எனக்குறிப்பிட்டு கற்றோரின் சிறப்பையும் கல்லாரின் இழிநிலையையும் எடுத்துரைக்கின்றார்.

கவையாகிக் கொம்பாகிக் கானகத்தே நிற்கும்
அவையல்ல நிற்கும் அவையல்ல நல்ல - மரங்கள்
சபைநடுவே நீட்டோலை வாசியா நின்றான்
குறப்பறிய மாட்டதவன் மரம்.

மிக நயன்;பட பாடப்பட்ட ஒரு நையாண்டிப் பாடல். ஔவையார் இன்று தாங்கள் மெத்தப்படித்தவர்கள் எனக் காட்டிக் கொள்ள விளைபவர்கள் பற்றி எடுத்துரைப்பது சிரிப்புக்கு மருந்தாக மட்டுமல்ல சிந்திக்கவும் வைக்கின்றது. ஒட்டக்கூத்தர் ஒரு நையாண்டிப் புலவர் என்பது ஊரறிந்த விடயம். அவர் ஒரு முறை ஔவையாரை ‘அடி’ என்று கூறிவிட்டார். அதாவது அரசபையில் வைத்து“ஒரு காலடி நாலிலைப் பந்தலடி” என்று ஒரு நொடியைப் போட்டார். இதைக் கேட்ட ஔவைக்கோ வந்ததே கோபம். அதாவது ஆரை என்ற ஒரு பூண்டிற்கு ஒரு தண்டும் நான்கு இ்யுமுண்டு. இதனைச் செவியுற்ற ஔவை ஆத்திரமுற்றார். அதாவது தன்னை ஒரு பூண்டாகக் கருதிவிட்டாரே ஒட்டக்கூத்தர் என்பது அவரைச் சூடேற்றியுள்ளது. தேனீருக்கு கொதிக்கவைத்து நீரைப்போலவோ அல்லது வடை சுடுவதற்கு கொதிக்கவைத்த எண்ணையை ஒத்ததாகவே அரவது கொதிப்பு இருந்துள்ளது என்பதற்கு அவரது ஆத்திரத்தோடு கூடிய பாடல் அமைகின்றது. அவருக்கு உச்சந்தலைக்கு ஏறிவிட்டது கோபம். மூக்குச் சிவந்துவிட்டது. வசை பாடியே விட்டார்.

எட்டேகால் இலட்சணமே எமனேறும் பரியே
மட்டில் பெரியம்மை வாகனமே – முட்டமேல்
கூரையில்லா வீடே குலராமன் தூதுவனே
யாரையாடா சொன்னாய் அது.

எட்டே கால் இலட்சணம்- அவலட்சணம், எமன் ஏறும் பரியே- எருமையே, பெரியம்மை- மூதேவி, முட்டமுட்டக் கூரையில்லா வீடு – மேகம், குலராமன் தூதுவனே - குரங்குகே, அடி என்று யாரையடா சொன்னாய் என ஒரு போடுபோட்டுவிட்டார். எவ்வளவிற்கு ஆழ்ந்த அறிவினை அக்காலத்துப் புலவர்கள் கொண்டிருந்தார்கள் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாக அமைகின்றது.

**காளமேகப்புலவரின் ஒரு அங்கதப்பாடலைப் பார்ப்போம்:**

நஞ்சிருக்கும் தோலுரிக்கும் நாதர்முடி மேலிருக்கும்
வெஞ்சினத்தில் பல்பட்டால் மீளாது – விஞ்சுமலர்த்
தேம்பாயும் சோலைத் திருமலைராயன் வரையில்
பாம்பாகும் வாழைப் பழம்

பாம்பில் நஞ்சிருக்கும் வாழைப்பழம் நைந்து இருக்கும். பாம்பு தோலை உரிக்கும், வாழைப்பழத்தை உண்பவர்கள் அதன் தோலை உரித்துத்தான் உண்ணவேண்டும். பாம்பு சிவன்முடியில் இருக்கும் வாழைப்பழம் பஞ்சாமிர்தமாக சிவன்முடியில் இருக்கும். பாம்பு கோபங்கொண்டு கடித்தால் மீட்சி இல்லை வாழைப்பழத்தைக் கடித்துவிட்டால் அது பூசைக்கு உதவாததாகப் போய்விடும்.வுிழைப்பழத்தைக் கடித்தால் அதிலிருந்து பற்கள் பட்ட இடத்தை அறியவும்முடியாது அதனை மீட்டு எடுக்கவும் முடியாது அது உள்ளே சென்றுவிடும் என்னும் கருத்துக்களை மிகத்துல்லியமாக எடுத்துக்காட்டும் பாங்கினை நாம் அறியமுடிகின்றது.

காளமேகத்தின் இன்னுமொரு வியப்பூட்டும் பாடல் ஒன்று புரிகின்றதா? பாருங்கள்.

கத்துக்கடல் நாகைக் காத்தான் தன் சத்திரத்தில்
அத்தமிக்கும் போதில் அரிசி வரும் - குத்தி
உலையில் இட ஊர் அடங்கும் ஓரகப்பை அன்னம்
இலையில் இட வெள்ளி எழும்.

இப்பாடலைக் கேட்ட சத்திரத்தின் சொந்தக்காரனான காத்தான் காளமேகத்திடம் ஓடிச் சென்று மன்னிப்புக் கேட்டுக்கொண்டார் காத்தான். ஏனென்றால் தன் சத்திரத்திற்கு அவப் பெயர் என அவர் எண்ணியமையே யாகும். ஆனால் காளமேகம் சிரித்துவிட்டு அதற்கான விளக்கத்தைக் கொடுத்தார். அதாவது ‘அழகிய கடலோரத்தில் அமைந்துள்ள காத்தான் சத்திரத்தில் அத்தமிக்கும் நேரத்தில் அதாவது நாட்டில் உணவு முடிந்துபோய் பஞ்சம் ஏற்பட்டவேளையிலும் அரசி மூட்டை மூட்டையாக வந்து இறங்கும். அங்கு பரிமாறும் உணவை உண்டு அந்த ஊரே பசியடங்கும், இலையில் விழும் ஒரு அகப்பை அன்னம் வெள்;ளி நட்சத்திரம் போல பிரகாசிக்கும் என விளக்கம் கூறி அவரை வாழ்த்தினார் என்பது கதை. அதாவது அங்கு எந்தநேரத்திலும் உணவு வழங்கப்படுவது மட்டுமல்ல மிகச்சிறந்த உணவைப் படைக்கின்றார் என்பதனை விபரித்துள்ளார்.

சோழமன்னர்களும் தெலுங்கு சோடர்களும் தம்மை கரிகால்வளவனின் வாரிசுகள் என பெருமிதம் கொள்வார்கள். அத்தகைய கரிகாலனையே கிண்டல் செய்தவர் வெண்ணிகுயத்தியார் எனும் ஒரு குயவர் சமூகத்தைச் சேர்ந்த பெண்புலவர் பின்வரும் பாடலால் வெளிப்படுத்தியுள்ளார். (குயவர்- வேட்கோவர்)

*"நளி இரு முந்நீர் நாவாய் ஓட்டி*
*வளி தொழில் ஆண்ட உரவோன் மருக!*
*களி இயல் யானைக் கரிகால் வளவ!*
*சென்று அமர்க் கடந்த நின் ஆற்றல் தோன்ற*
*வென்றாய்! நின்னிலும் நல்லான் அன்றே*
*கலிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை*
*மிகப் புகழ் உலக மெய்திப்*
*புறப்புண் நாணி வடக்கு இருந்தோனே!" (புறம் 1-69 )*

*பாடியவர்:* வெண்ணிக் குயத்தியார்(66). வெண்ணி என்பது திருவாரூர் மாவட்டத்தில், நீடாமங்கலம் என்னும் ஊருக்கு அருகே உள்ள ஓரூர். இவ்வூர் வெண்ணில் என்று இக்காலத்தில் வழங்கப்படுகிறது. சங்க காலத்தில் மண்பாண்டங்கள் செய்தவர்கள் வேட்கோவர் என்று அழைக்கப்பட்டனர். அவர்களில் சிறந்தவர்களுக்கு"குயம்" என்ற பட்டம் அரசர்களால் வழங்கப்பட்டது என்றும் இப்பழக்கம் பத்தாம் நூற்றண்டு வரை இருந்ததாகவும் அவ்வை சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள் தம் நூலில் குறிப்பிடுகிறார். ஆகவே, இப்புலவர் குயக்குலத்தைச் சார்ந்த பெண் என்பது இவருடைய பெயரிலிருந்து தெரியவருகிறது.

*பாடப்பட்டோன்:* சோழன் கரிகாற் பெருவளத்தான். இவனைப் பற்றிய குறிப்புகளைப் பாடல் 7- இல் காண்க.

*பாடலின் பின்னணி:* கரிகால் வளவன், வெண்ணி என்ற ஊரில் நடைபெற்ற போரில் சேரமான் பெருஞ்சேரலாதனையும், பாண்டிய மன்னன் ஒருவனையும், வேளிர்குலத்தைச் சார்ந்த பதினொரு சிற்றரசர்களையும் வென்றான். அப்போரில் சேரமான் பெருஞ்சேரலாதனின் மார்பில் பாய்ந்த வேல் அவன் மார்பைத் துளைத்து முதுகையும் புண்ணாக்கியது. தன் முதுகில் புண்பட்டதால் அவன் நாணமுற்று வடக்கிருந்து உயிர் துறந்தான். அதைக் கேள்வியுற்ற வெண்ணிக் குயத்தியார், இப்பாடலில், சேரமான் பெருஞ்சேரலாதனின் செயலை வியந்து, கரிகாலனை நோக்கி,"வேந்தே, போரில் வெற்றி பெற்றதால் நீ வெற்றிக்குரிய புகழ் மட்டுமே அடைந்தாய். ஆனால், சேரமான் பெருஞ்சேரலாதன் உனக்கு வெற்றியை அளித்தது மட்டுமல்லாமல், உன்னால் உண்டாகிய புண்ணுக்கு நாணி, அவன் வடக்கிருந்து பெரும்புகழ் பெற்றான். ஆகவே, அவன் உன்னைவிட நல்லவன் அல்லனோ?" என்று கேட்கிறார்.

பழந்தமிழ் இலக்கியத்;தில் திணைக் கோட்பாடு வகுத்துக் கூறப்படுவதோடு இலக்யித்தில் அவை முதனிலைப் படுத்தப்படுவதனையும் நாம் காணமுடிகின்றது எடுத்துக்காட்டாக வாகை என்பது வாகைப் பூவைத் தலையில் சூடிப் பகைவரை வென்று ஆரவாரித்தலைப் பற்றிய பாடல்கள் வாகைத் திணையில் அடங்கும். இவை எவற்றை உள்ளடக்கமாகக் கொண்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது. துறை சார்ந்த இலக்கியத்திற்கு எடுத்தக்காட்டாக அரசவாகை என்பது அரசனது இயல்பை எடுத்துரைப்பதாகும். எடுத்துக்காட்டாக.

நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி
*வளிதொழில் ஆண்ட உரவோன் மருக!*
*குளிஇயல் யானைக் கரிகால் வளவ!*
சென்றுஅமர்க் கடந்தநின் ஆற்றல் தோன்ற
வென்றோய், நின்னினும் நல்லன் அன்றே
கலிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை
மிகப் புகழ் உலகம் எய்திப்
புறப்புண் நாணி, வடக் கிருந்தோனே.

### அருஞ்சொற்பொருள்:

*1. நளி ஸ்ரீ செறிதல், குளிர்ச்சி இரு ஸ்ரீ பெரிய, முந்நீர் ஸ்ரீ கடல்; நாவாய் ஸ்ரீ கப்பல். 2. வளி ஸ்ரீ காற்று; உரவோன் ஸ்ரீ வலியவன்; மருகன் ஸ்ரீ வழித்தோன்றல். 3. களி ஸ்ரீ செருக்குறுதல். 4. அமர் ஸ்ரீ போர்; கடந்த ஸ்ரீ அழித்த. 5. அன்றே ஸ்ரீ அல்லவர் 6. கலி ஸ்ரீ தழைத்தல்;, பறந்தலை ஸ்ரீ போர்க்களம்.*

*கொண்டு கூட்டு:* உரவோன் மருக, கரிகால் வளவ,வென்றோய்,வெண்ணிப் பறந்தலைப்பட்ட புறப்புண் நாணி, உலகத்துப் புகழ் மிக எய்தி வடக் கிருந்தோன், நின்னினும் நல்லன் அன்றே எனக் கூட்டுக.

இதன் பொருள் காற்றின் இயல்பை அறிந்து, நீர் நிறைந்த பெரிய கடலில் மரக்கலத்தை ஓட்டிய வலியவர்களின் வழித்தோன்றலே! செருக்குடைய யானைகளையுடைய கரிகால் வளவனே! போருக்குச் சென்று உனது வலிமை தோன்றுமாறு வெற்றி கொண்டவனே! மிகுந்த அளவில் புதிய வருவாய் உள்ள வெண்ணி என்னும் ஊரில் நடைபெற்ற போரில், முதுகில் புண்பட்டதற்கு நாணி, வடக்கிருந்து மிக்க புகழுடன் விண்ணுலகம் எய்திய சேரமான் பெருஞ்சேரலாதன் உன்னைவிட நல்லவன் அல்லனோ? அவனது போரறம் போற்றும் தரமானதன்றோ? முதுகிற் புண்படல் மறவீரனுக்கு ஏற்புடையதன்று. போரில் இறக்கவில்லையானாலும் வடக்கிருந்து தனது

உயிரைப்போக்கிக்கொண்ட மாண்புமிக்க மன்னன் அவன். முயிர் நீர்ப்பின் உயிர்வாழாக் கவுரிமான் போல மார்பிற்பாய்ந்த வேல் புற முதுகிலும் தாக்கிவிட்டதால் முதுகில் விழுப்புண் ஏற்பட்டுவிட்டது. இது தனது வீரத்திற்கு ஏற்பட்ட இழுக்காக கருதி தனது உயிரை மாய்த்துக்கொண்டவனின் வீர உணர்வை வெளிப்படுத்துவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

விருந்து எவ்விதம் இடம்பெறவேண்டும், எவ்விதம் உணவினை படைக்கவேண்டும், எவ்விதம் உண்ணல்வேண்டும் என்பது பற்றி சங்க இலக்கியங்களே கருத்துக்களைத் தந்துள்ளன. இன்றுவுயயடிடந அயபெசெ என்னும் ஆங்கிலப் பதத்தை நாம் இன்று அதிகமாக உபயோகிக்கின்றோம். ஒரு விருந்திற்கோ அன்றி உணவகத்திற்கோ சென்றால் எவ்விதம் உணவு உண்ணவேண்டும் என்பது கற்றுத் தரப்படுகின்றது. ஆனால் அந்தக் காலத்திலும் அது நடைமுறையில் இருந்துள்ளது. அதனைக் காளமேகத்தின் பாடலில் காணலாம்.

காளமேகம் சத்திரத்தில் உணவு உண்ணச் சென்றவேளை அவருக்கு முன்பாக ஒரு பெருங்குடுமிக்காரன் உணவு உண்டுகொண்டிருந்தான். அவனது குடுமி அவிந்து அவன் உண்டு கொண்டிருக்கும் உணவில் அது விழ, குடுமியை பிராமணன் எடுத்து உதற, இருகில் உணவருந்திக் கொண்டிருந்த காமேகத்தின் இலையில் இந்தக் குடுமியில் இருந்த சோற்றுப் பருக்கை காளமேகத்தில இலையில் விழ, கோபங்கொண்ட காளமேகம் கொட்டித்தீர்த்த வார்த்தைகள் செய்யுளாகப் பருணமித்திருந்ததைப் பாருங்கள்.

சுருக்கு அவிழ்ந்த முன்குடுமிச் சோழியா! சோற்றுப்
பொருக்கு உலர்ந்த வாயா! புலையா! – திருக்குடந்தை
கோட்டானே! நாயே! குரங்கே! உனை ஒருத்தி
போட்டாளே வேலையற்றுப் போய்!

இதற்கு மேலாக ஒரு வுயயடிடந அயபெசெ பற்றிப் பேசப்படவேண்டிய நிலைமை உண்டா? அதாவது பந்தி பரிமாறுதல் மட்டுமன்றி உணவு உண்போர் பின்பற்றவேண்டிய நடைமுறைகளையும் பண்டைய தமிழகம் கொண்டிருந்தது எனபதற்கு இது ஒரு நல்ல எடுத்துக்காட்டாக அமைந்திருந்தது. உணவருந்தும் நாகரிகம் தெரியாதவனாக இருந்து ஒருவனை நையாண்டியாகப் பாடிய நையாண்டிப் பாடல் இது. அவனைப் பெற்ற தாயையே வசைபாடிவிட்டார் என்றால் எப்படி இருக்கின்றது. பெற்றெடுத்தல் மனித குலத்தின் பெருமை. ஆனால் போடுதல் விலங்குகளின் தன்மை. இதனை ஒரு விலங்காக அவனின் தாயை சாடுகின்றார் என்றால் இதில் சிந்திக்கத் தூண்டும் கருத்தாளம் செறிந்திருக்கின்றது. அன்னை தாய்ப்பாலோடு ஒழுக்கத்தையும கற்றுத்தருபவள். ஆவள் உன்னை ஒழுங்காக வளர்க்கவில்லை என்றே தோன்றுகின்றது என்பது காளமேகத்தின் இடித்துரையாக மாறிவிட்டது. அங்கதச் சுவையோடு தவறுகளைச் சுட்டிக்காட்டுவதில் அக்காலப் புலவர்கள் மட்டமல்ல இன்றுள்ள பாடலாசிரியர்களும் சளைத்தவர்கள் அல்ல என்பதற்க கண்ணதாசனின் பாடல்கள் தக்க சான்றாக அமைகின்றன.

“ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்” என்று சொற்றொடர் உருவானதற்கான பல்வேறு கருத்துக்கள் கூறப்படுகின்றன. அதில் ஒன்று குலோத்துங்க மன்னனின் மனையாள் இராணி இராஜகுமாரி மன்னன் தனது குருவை சிறையிலடைத்ததை கேள்;வியுற்று விசனமுற்றாள். இதனால் அரசனைக் காணவே அவளுக்குப் பிடிக்கவில்லை அதனால் அரசன் வருகை அறிந்து அறைக்குள் சென்று கதவைத் தாள்பாழ் போட்டுக்கொண்டாள். எவ்வளவோ முயற்சித்தும் முடியவில்லை. எனவே அரசவைப் புலவன் ஒட்டக்கூத்தனை அணுகி அவளின் கோபத்தைத் தணித்து வருமாறு அனுப்பினான். அவர் அங்கு சென்று இராணியைப் புகழ்ந்து பாடினார். அப்பாடலைப் பார்ப்போம்

நானே இனியுன்னை வேண்டுவதில்லை நளினமலர்த்

தேனே கபாடந் திறந்திடு திறவா விடிலோ

வானேறனைய வாள் விரவிகலாதிபன் வாசல் வந்தால்

தானே திறக்க நின் கையிழாகிய தாமரையே!”

இந்தப் பாடலைக்கேட்ட இராணிக்கு மேலும் கோபம் வந்துவிட்டது. உடனே அடுத்து தாழ்ப்பாளையும் தாளிட்டுக்கொண்டாள். இதுதான் ஒட்டக்கூத்தனின் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள் என்றாகிவிட்டது என்ற கருத்தை உரைதந்தவர்கள் கூறுவர்.

அர்த்தம் சொல்லுபவர்களுக்கு ஆயிரம் பொற்காசுகள் என அறிவித்துவிட்டு ஒரு பாடலைப் பாடினார் காளமேகம். இது ஒரு தகரவரிப்பாடலாகும். எல்லாச் சொற்களுமே த வரிசையில் அமைந்திருக்கின்றதைப் பாருங்கள்.

தத்தித் தாதுதி தாதூதித் தத்துதி
துத்தித் துதைதி தித்தித்த தித்தித்த தாதெது
தித்தித்ததெத்தாதோ
தித்தித்த தோது

இ;ப்பாடலைப் பார்க்கும்போது என்னைப்போன்ற சாதாரணர்களுக்கு எதுவுமே விளங்குவதாக இல்லை. இதற்கான பொருளை நுணுகி ஆராயும்போதுதான் அதன் அற்புதம், பொருள்பொதிவு அமைந்துள்ளதைக் காணலாம்.

தாதி தூதோ தீது – பணிப்பெண்ணிடம் அனுப்பப்படும் தூது தீமையை ஏற்படுத்தும். தத்தை தூது ஓதாது – கிளி தூதைச் சிறப்பாகச் செய்யாது. தூதி தூது ஒத்தித்த தூததே- தோழி செல்லும் தூது தள்ளிப் போடப்பட்டுக் கொண்டேயிருக்கும் தூதாகி விடும், தாது ஒத்த துத்தி தத்தாதே – பூந்தாதை ஒத்த பசலை நிறம் கொண்ட தேமல் என் மேல் படராது. தே துதித்த தொத்து தீது – தேவனை (இறைவன்) துதித்துத் தொற்றிக் கொள்வதும் தீதானதே. தீதே தித்தித்தது ஓதித் திதி – தித்திப்பான காதலன் பெயரையே ஓதிக் கொண்டிருப்பேனாக!

பணிப்பெண் மூலம் அனுப்பப்படும் தூது தீங்கானது. கிளியிடம் தூது அனுப்பினால் அது எனது உள்ளத்தைத் தெளிவாக என் உள்ளத்தில் உள்ளவற்றை எடுத்துரைக்காது. தோழியின் மூலமாக அனுப்பப்படும் தூது உடனடியாக நிறைவேறாது பின்னர் பின்னர் எனத் தயக்கம் காட்டப்படும் நிலை அதாவது அவள் இழுத்தடித்துக்கொண்டே போவாள் எனவே அதனால் பயனில்லை. எனது களவுவழியான காதலுக்கு தெய்வத்தை வேண்டிச் செயற்படுவதும் தவறாகும். ஆகவே பூந்தாதினைப்போன்ற தேமல்கள் என் மேனியில் படராது எனக்கு இனிமையான தித்திப்பு நல்கும் என் காதலனின் பெயரை ஓதிக் கொண்டிருப்பதே மேலானது என்பதாக அமைகின்றது இதன்பொருள். யாருக்கும் புரியாமல் பாடுவது அக்காலத்து மரபுதானே. அதில் காளமேகம் கைதேர்ந்தவர் ஆச்சே!

ஆனால் இதற்கு வேறு ஒரு பொருள் கொள்ளும் வகையில் விளக்கம் தரப்பட்டுள்ளதையும் காணலாம்.

தத்தித் தாது ஊதுதி – தத்திச் சென்று (மலர்களில் உள்ள) மகரந்தத்தை ஊதுகிறாய்-குடிக்கின்றாய்.

தாது ஊதித் தத்துதி – குடித்தபின் மீண்டும் தத்திதிச் செல்கிறாய்

துத்தித் துதைதி – துத்தி என்று ஒலி எழுப்பியபடி அடுத்த மலரைத் தேடிப் போகிறாய்

துதைது – அடுத்த மலருக்குச் சென்று

அத்தாது ஊதுதி – அந்த மலரின் மகரந்தத்தையும் குடிக்கின்றாய்

தித்தித்த தித்தித்த தாது எது? தித்தித்தது எத்தாதோ தித்தத்த தாது? - இதுவரை நீ குடித்த மலர்களில்ஃமகரந்தங்களில் மிகவும் இனிப்பானது எதுவோ? என வண்டிடம் வினவுவதாக அமைந்துள்ளது அப்பாடல்.

இதையொத்த ஒரு பாடலை கண்ணதாசன்“வானம்பாடி” திரைப்படத்தில் தந்திருப்பார். அங்கு காதலி தன் காதலிடம் கேட்பதாக இப்பாடலின் பொருள் மாற்றப்பட்டிருக்கும். அதாவது இளம் தேமல் படர்ந்த கன்னி வாழ இனியது கூறு என்பதாக மாற்றி ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே ஒரு நொடியாக அமைத்திருப்பார்.

காளமேகம் ககர வரிசையிலும் இவ்விதமான ஒரு பாடலைப் பாடியுள்ளார்:

காக்கைக் காக உகை, கூகைக்காக காக்கை
கோக்குக் கூ கர்க்கைக்குக் கொக்கொக்க, கைக்கைக்குக்
காக்கைக்குக் கைக்கைக்கா கா!

பகல்நேரத்தில் காக்கையைப் பருந்தால் வெல்லமுடியாது. காக்கைதான் பலம் வாய்ந்தது. ஆனால் இரவு நேரத்தில் ஆந்தையின் பலம் அதிகரித்துவிடும் அப்போது காக்கையால் ஆந்தையை வெல்ல முடியாது. ஆக, நேரம் பார்த்து எதிரியுடன் மோத வேண்டும்.

ஒர் அரசனின் கடமை, உலகத்தை தன்னுடைய மக்களைக் காப்பாற்றுவதுதான். ஆனால் அதற்காக அவன் அவசரப்படக்கூடாது. மீன் வரும்வரையு; அற்றங்கரையில் காத்திருக்கு;ம கொக்கைப்போலப் போறுமையாக இருக்கவேண்டும். இல்லாவிட்டால் பகைவர்களை வெல்வது கடினமாகும்.

ஒட்டக்கூத்தரிடம் ஔையார் ‘மதி’ என்னும் சொல் மூன்றுமுறை வரும்படி ஒரு பாடலை அமைக்கச் சொல்கின்றார். உடனே இப்பாடலைப் பாடினார் ஒட்டக்கூத்தர்;. அப்பாடல் இதோ கேளுங்கள்:

வெள்ளத்து அடங்காச் சினவாளை
வேலிக் கமுகின் மீதேறித்
துள்ளி முகிலைக் கிழத்து மழைத்
துளியோடு இறங்கும் சோணாடா!
கள்ளக் குறும்பர் குலம் அறுத்த
கண்டா! அண்டர் கோபாலா!
பிள்ளை மதி கண்ட எம்பேதை
பெரிய மதியும் இழந்தாளே!

இதில் இரண்டு மதிகளே வந்தமையால் ஔவையார் ‘ஒட்டா ஒருமதி கெட்டாய்’ எனக் கூறி ஒட்டக்கூத்தரின் கொட்டத்தை அடக்கிவிட்டார். அதன் பின் புகழேந்திப்புலவர் மூன்று மதிவரத்தக்கதாக ஒரு பாடலைப் பின்னர் பாடியுள்ளார்.

பங்கப் பழனத்து உழும் உழவர்
பலவின் கனியைப் பறித்தொன்று
சங்கிட்டு எறியக் குரங் கிளநீர்
தனைக் கொண்டு எறியும் தமிழ்நாடா!
கொங்கார்க் கமரர் பதியளித்த
கோவே! ராஜ குல திலகா!
வெங்கட் பிறைக்கும் கரும் பிறைக்கும்

மெலிந்த பிறைக்கும் விழிவேலே!

சொல்வேட்டை மட்டுமல்ல எண்வேட்டை யாடுவதிலும் அதாவது எண்களை வைத்து விளையாடுவதிலும் தமிழ் புலவர்கள் சளைத்தவர்கள் அல்லர். விவேக சிந்தாமணியில் வரும் ஒரு பாடலைப் பார்ப்போம்.

ஒருநான்கும் ஈரரையும் அரையும் கேட்டேன்
இருநான்கும் மூன்றுடனே ஒன்றும் சொல்லாய்
இம் மொழியைக் கேட்டபடி ஈந்தாய் ஆயின்
பெருநான்கும் ஆறுநான்கும் பெறுவாய் பெண்ணே
பின்னஓர் மொழிபுகல வேண்டாம் இன்றே
சரிநான்கும் பத்தும் ஒரு பதினைந் தாலே
சகிக்க முடியாதினி என் சகியே மானே!

ஒரு நான்கும் ஈரரையும் ஒன்றே: ஒரு நாலும் இரண்டு அரையும் ஒன்றும் (4+2ஒ1ஃ2+1ஸ்ரீ6) இராசிகளில் ஆறாவது கன்னி

ஐயரையும் அரையும்: ஐந்து அரையும் அரையும் (5ஒ1ஃ2+1ஃ2ஸ்ரீ3) வாரத்தில் மூன்றாவது நாளான செவ்வாய்.

இருநான்கும் மூன்றுடனே ஒன்றும்: இரண்டுமு; நான்கும் மூன்றும் ஒன்றும் (2ஒ4+3+1ஸ்ரீ12) பன்னிரண்டாவது நட்சத்திரம் உத்தரம்.- உத்தரவு விடை, பதில்

நான்கும் ஆறுநான்கும்: நான்கும் மேலும் ஆறு நான்குகளும் (4+6ஒ4ஸ்ரீ28) இருபத்தெட்டாவது ஆண்டு 'ஜெய' ஆண்டு.

சரிநான்கும் அறுநான்கும்: நான்கும் மேலும் ஆறுநான்குகளும் (4+10+15ஸ்ரீ29) 29 பதாவது ஆண்டு மன்மத ஆண்டு.

கன்னியே கேளாய் உண்மையில் உன் செவ்வாயைக் கேட்டேன். பதிலைச் சொல்வாய், இம்மொழி கேட்டபடி ஈந்தாயாயின் ஜெயம் பெறுவாய் பெண்ணே. பின்னர் ஓர் மொழியும் சொல்லத் தேவையில்லை. மன்மதத்தாலே உண்டான காதல் உணர்வினை இனித்தாங்க முடியாது என் தோழியே மான்போன்றவளே!

திருக்குறளில் ஆங்காங்கே அங்கதச்சுவை ததும்பும் வரிகளைக் காணமுடிகின்றது.

'நாளென ஒன்றுபோற் காட்டி உயிரீரும்
வாள துணைர்வார்ப் பெறின்' -

நாளொன்று எமது வாழ்நாளை வாள்போல அறுத்துக்கொண்டிருக்கின்றது என்பதனை அறியமுடியாமல் மகிழ்ச்சியாக உள்ளது என நினைப்பவர்களே அதிகம். அன்று அவர் தரும் கருத்து எத்துணை ஆதங்கத்தைக் கொண்டது என்பது புலனாகும். பரிமேலளகர் இதற்குத் தரும் பொருளைப் பார்ப்போம். நூளென்று அக்கப்படுவதொரு கால வரையைறைப் போல் தன்னைக் காட்டி, ஈர்ந்து செல்கின்ற வாளின் வாயது உயிர், அஃகு உணர்வாரைப் பெறின்' அதாவது கண்ணுக்குப் புலப்படாத வாளாக இந்த நாள் எமது வாழ்வை அறுத்துக் கொண்டிருக்கின்றது. என்பதை மனித வாழ்வு நிலையில்லாதது அது நாளாந்தம் அறுபடுகின்றது என்பதனை தெளிவுபடுத்துகின்றார்.

'நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு'

என்பதன்மூலம் மனித நிலையாமையை எடுத்துரைத்து மனித வாழ்வுக்கு இந்த உலகின் நியதியை உணர்ந்து நல்லவற்றைச் செய்யவேண்டும் என்னும் ஆதங்கத்தையும் மனித நிலையாமையின் உண்மைத்தன்மையையும் உணர்;த்துகின்hறர்.

'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்'

என உழவின் சிறப்பை எடுத்துரைப்பதோடு பயிர் செய்து பகுத்துயிர் ஓம்புதலைத் தலையாகக் காட்டுகின்றார். உழவன் உணவளிக்கவில்லை என்றால் இவ்வுலகு வாழாது. எனவே வேறு எந்தத்தொழில் செய்து வாழ்வதாயினும் அனைவருக்கும் உணவு மிக முக்கியமானது. அது இல்லாதவர்கள் உழவனின் உணவின் பின் செல்பவர்களே என்னும் கருத்தை கூறுவதன் மூலம் மற்றவர்களை ஏழனமாக எடுத்தரைப்பதையும் நோக்கமுடிகின்றது. தாமுண்டு வாழ்வதோடு பிறருக்கும் உதவும் பாங்கு உழவனிடம் உண்டு ஆனால் ஏனையோர் வேறுயாரிடமாவது பணிசெய்து தமது வாழ்வை ஒட்டுபவர்களே என நயப்போடு குறிப்பிடுகின்றார்.

'மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின்'

இக்குறள் மூலம் தலையை மொட்டையடிக்கும் பௌத்தவர்களையும் தலைமுடியை வெட்டாமல் வளர்த்துவரும் சமணர்களின் மூட நம்பிக்கைகளைப் பார்த்து நையாண்டி செய்கின்றார் எனத் தோன்றுகின்றது. தவறு செய்யாமலிருப்பதே சிறந்தது என்பதனைச் சுட்டிக்காட்டுகின்றார் வள்ளுவர்.

இன்று அங்கதம் என்பது எள்ளல், ஏசல், கிண்டல், நையாண்டி, தூற்றல் எனப் பல கருத்துக்களைக் கொண்டதாகப் பயன்படுத்தப்பட்டுவருகின்றது.

◎



# அப்பாவின் கடைசி டைரி...

நௌஷாத் கான் லி, அபுதாபி

அன்புள்ள மகன் சௌந்தரபாண்டிக்கு அம்மா ராஜாத்தி முதலும் -முடிவுமாய் எழுதிய மடல்..

இந்த கடிதம் படிக்கும் தருணங்களில் நான் உயிரோடு இல்லாமல் போவதற்கு கூட வாய்ப்புண்டு..உன் மாமா சின்னா எவ்வளோ சொல்லியும் கூட,என் உடல்நிலை அறிந்தும் கூட நீ இன்னும் ஊர் வரவில்லை.. நீ என் மேல் வெறுப்பதற்கு என்ன காரணம் என்று எனக்கு தெரியும்.

சின்ன வயதில் உன்னை கொடுமை படுத்தியதாய்,உன்னை அடித்து துன்புறுத்தியதாய் நீ நினைக்கலாம்.. உன்னை கொடுமைப்படுத்தியது,அடித்தது எல்லாமே உண்மையாக இருந்த போதும்,செய்தது நானாக இருந்த போதும் அவையெல்லாம் எதற்க்காக செய்தேன் என்பதை நீ உணர்ந்தால் இந்த தாயை ஒரு போதும் வெறுக்க மாட்டாய்..

உன் உலகம் உன் அப்பா..உன் ஹீரோ,கதாநாயகன்,ரோல் மாடல்,கடவுள் எல்லாமே உன் அப்பா தான்.. இதுநாள் வரை ஏன் உன் தந்தை இறந்து போன பின்பு கூட இதுநாள் வரை பொய்மையின் வடிவமான உன் தந்தையின் மீது நீ கட்டி வைத்திருக்கும் நம்பகத்தன்மையை நான் கெடுக்க நினைத்ததில்லை..அந்த

பாழாய் போன மனுஷன் இருந்த வரையில் கூட அவரது உள்வேஷத்தை யாரிடமும் தம்பட்டம் அடித்து நான் சொல்லியதில்லை..இதுநாள் வரை நீ யாரை கதாநாயகனாக,கடவுளாக நினைத்தாயோ அவையெல்லாம் உண்மையில்லை..உன் நம்பகத்தன்மைக்கு அந்த மனுஷன் தகுதியானவரும் கிடையாது..உன்னை பத்து மாதம் சுமந்த தாயை வில்லியாக,உன்னை பெற்றெடுத்த சனியனாக நீ நினைக்கலாம்..

உன் அப்பா மீதுள்ள வெறுப்பில் உன் சின்ன வயதில் பாசம் காட்டாமல், அடித்து துன்புறுத்தி இருக்க கூடாது தான்..உன் முக அமைப்பில் இருந்து உன் சின்ன சின்ன பழக்க வழக்கம்,செயல்பாடு எல்லாமே அந்த மனுஷனை உரித்து வைத்தது போல் இருந்தது.. உன் அப்பனே என் வயிற்றில் மறுதடவை பிறந்து வந்து விட்டானா என்று நானே ஆச்சரியத்தோடு வருத்தமும் பட்டேன்..

ஒரு காலத்தில் எந்த முகத்தை ஆசைமுகம் என்று நினைத்து உருகி,உருகி காதல் செய்தேனோ அந்த முகத்தைத்தான் ஒரு காலத்தில் அளவுக்கதிகமாய் வெறுத்தேன்..என் வெறுப்புக்கு பின்னாடி இருக்கும் துரோகங்கள்,வலிகள் ஆகியவற்றை உன்னோடு மட்டும் சொல்லிவிட்டு மண்ணோடு மண்ணாக போக விரும்புகிறேன்...கர்த்தரிடம் பாவமன்னிப்பு கேட்கும் ஒரு அபலை போல ஒரு தவறும் செய்யாத என் மகனை அடித்து துன்புறுத்திய ஒரே காரணத்துக்காக மன்னிப்பு கேட்கிறேன்..நான் சொல்ல போகும் இரகசியத்தை நீ அறியும் போதும் இந்த தாயை நீ மன்னித்து விடுவாய் ஆனால் இதுநாள் வரை உன் தந்தையின் மீது கட்டி வைத்திருக்கும் நம்பிக்கை கோட்டை நிச்சயம் உடையும்..

உடைந்தால் என்ன ????

அந்த பாவி மனுஷன் தான் உயிரோடு இல்லையே... உயிருள்ள சில உறவுகள் கஷ்டப்படுவதற்கும்,நீ என்னை ஜென்மவிரோதியாய் பார்ப்பதற்கும் அந்த மனுஷன் தானே காரணம்...

இதுவரை சொல்லாதவள் இறக்கப்போகும் தருவாயில் சொல்வதற்கு முக்கிய காரணம் என் மகன் கடைசி வரையிலும் இந்த தாயை வெறுத்து விட கூடாது என்பதற்க்காக தான்...நான் சொல்வதை உன் இதயத்தின் கடைசி மூலையில் போட்டு விட்டு உன் சிந்தையில் இருந்து மறப்பது நல்லது...

காதலித்து தான் உன் தந்தையை கரம் பிடித்தேன்.. முதலில் உன் தாத்தா எங்கள் காதலுக்கு மறுத்தாலும் அதன் பின் என் காதலின் தீவிரத்தை கண்டு நான் காதலித்த உன் தந்தையையே திருமணமும் செய்து வைத்தார்.

எங்கள் காதலின் பரிசாக உங்க அக்காவும் -நீயும் பிறந்தாய்..இது வெறும் காதல் கதையாய் மட்டும் இருந்திருந்தால் உன் தாயை அன்னை தெரசாவாக நீ பார்த்திருக்கலாம்..விதியும் சரி இந்த பாழாய் போன சில மனிதர்களும் சரி காலத்தை விட மோசமானவர்கள்.. சிலர் அவரவரின் தற்காலிக சந்தோஷத்துக்காக என்ன வேண்டுமானாலும் செய்வார்கள்..மூலக்கதையை சொல்வதற்கு முன் கிளைக்கதையை சொல்லி விட்டு முடிவை கடைசியாய் சொல்வதே உத்தமம்..

உன் அக்கா வேதவல்லி உன் மாமா பையன் விநாயகத்தை காதலிக்கும் போது உன் அமைதியான அப்பா வானத்துக்கும் -பூமிக்கும் ஏன் குதித்தார்..?? எப்போதுமே பாசமாக பழகும் உன் அத்தை ஆனந்தி உன் அக்கா ஏன் அவ வீட்டு மருமகளாக வரக்கூடாதுன்னு உன் மாமா சின்னாவிடம் சண்டை போட்டாள்..??

உன் அக்கா வேதவல்லி -மச்சான் விநாயகம் சொந்தம் என்ற முறையில் கல்யாணத்துக்கு முன்னாடியே அத்துமீறியதால் உன் அக்கா கர்ப்பம் ஆனதால் வேறு வழியின்றி வீட்டின் பெரியவர்கள் வற்புறுத்தலின் பேரில் உங்க அப்பாவும் -அத்தையும் வேண்டாவெறுப்பாக வேறு வழியின்றி அடுத்தவர்களின் கட்டாயத்தின் பேரில் திருமணத்தை நடத்தி வைத்தனர். மாமன் பையன் -அத்தை பொண்ணு உரிமையில பழகுனாங்க,கொஞ்சம் அவசரம் பட்டாலும் முறையா கல்யாணம் பண்ணிக்கிட்டாங்க..இதுல என்ன தப்பு இருக்கு..

இந்த அப்பாவுக்கும் -அத்தைக்கும் என்ன ஆச்சு.. மூஞ்ச தொங்கப்போட்டிட்டு அலையுறாங்கன்னு நீ வருத்தப்பட்டு தனியா புலம்பியதை நானும் கேட்டேண்டா

உங்க அக்கா கல்யாணத்துக்கு அப்புறமா தான் உங்க அப்பன் கவலையாலயே கண்ணீர் சிந்தி சிந்தி செத்தான்..நல்லா இருந்த உங்க அத்தையும் திடீர்ன்னு மாரடைப்புல போயிட்டா.

இவையெல்லாம் உனக்கு தற்செயலா தெரியலாம்.. எல்லாமே அவங்க,அவங்க செஞ்ச பாவம்டா,விதி வலியது இது ஒரு தப்புமே செய்யாத நீயும்,நானும் அப்புறம் உங்க அக்கா, உன் மச்சான் விநாயகம் பாதிக்க பட்டு இருக்கோம்..

என்னடா சாக போகுற தாய்க்கிழவி புதிர் போடுறேன்னு நினைக்குறியா??

ரொம்ப நேரம் தெரியாத புதிருக்கு விடை சொல்லலைன்னா குழப்பம் வந்திடும் இல்லைன்னா சுவாரஸ்யம் போயிடும்..புதிருக்கு விடை சொல்லுற நேரம் வந்திடுச்சு ஆனா இந்த புதிரோட விடையை அப்பாவியான உன் மாமன் சின்னாக்கிட்டயும்,பாவத்தின் சம்பளத்துக்கு பரிசாக கிடைத்த உன் மச்சான் விநாயகத்துக்கு கிட்டயும்,உங்க அக்காவின்

நல்வாழ்விற்க்காக சொல்லிடாதே...மூச்சை விடுவதற்கு முன் உனக்கு பாரத்தை தந்து விட்டு போகிறேனே என வருந்துகிறேன்..என் பாசம் தராத பிள்ளைக்கு பரிசுக்கு பதிலாக சிலுவைகளை சுமக்க விட போகிறேனே என வருந்துகிறேன்.என் பாரத்தை விரைவில் மண் சுமக்க போகிறது..உன் பாரத்தை யார் சுமப்பாரோ??

நான் இத்தனை வருடம் சுமந்த வலிகளை உன் மீது விட்டு விட்டு செல்வதற்கு முக்கிய காரணம் நான் இறக்கும் போது நீ பாசத்தோடு எனக்காக சிந்தும் ஒரு துளி கண்ணீர் மட்டுமே..நான் இதுநாள் வரை காட்டாத அன்புக்கு உன்னிடம் மன்னிப்பு கேட்டு கொள்கிறேன் அடுத்த ஜென்மத்திலாவது நீ என் முகசாயலில் பிறக்க வேண்டும் இந்த உலகத்தின் ஒட்டு மொத்த அன்பையும் உன் மீது காட்ட வேண்டும்..

கடைசியாய் உன் இருதயத்தை இரும்பாய் ஆக்கிக்கொள், உன் அப்பா நீ நினைக்கும் அளவுக்கு நல்லவர் இல்லை..

உன் அக்காவின் கணவன் விநாயகம் உன் தந்தைக்கு பிறந்தவன் இந்த உண்மை உன் அப்பாவின் டைரியை படித்த போது தான் எனக்கே தெரிந்தது அதன் பிறகுதான் தாத்தாவின் கூட்டுகுடும்பத்திலிருந்து விலகி தனியாக வாழத்தொடங்கினோம்..ஒரே குடும்பத்தில் நீ,நான் அக்கா,அப்பா என்று ஒன்றாக இருந்திருந்தாலும் உண்மையை உணர்ந்த தருணத்திலிருந்து உன் அப்பாவிடம் பேசுவதையே நிறுத்தி விட்டேன்..இந்த பாழாய்ப்போன உடலில் இத்தனை காலம் உயிரை வைத்திருந்தது உனக்காகவும், என் மகளுக்காகவும் மட்டுமே..தயவு செஞ்சு இந்த அம்மாவை ஒரு போதும் வெறுத்து விடாதே...முடிஞ்சா நான் செத்ததுக்கு அப்புறம் கொல்லி போடு அப்ப தான் இந்த அம்மாவின் ஆன்மா சாந்தியடையும்..

(இந்த கடிதத்தோடு சேர்த்து உங்க அப்பாவின் டைரியையும் அனுப்பியுள்ளேன்..நீ படித்து முடித்ததும் யாரும் கண்காணாதவாறு அந்த டைரியை கொளுத்தி விடு..கடைசிவரை உன் அப்பன் உத்தமன் என்ற போர்வையில் இந்த சமூகத்தின் பார்வையில் இருந்து விட்டு போகட்டும்..

இப்படிக்கு

நீ எனக்காக சிந்தும் ஒரு துளி அன்புக்காக மருத்துவமனையிலோ,சுடுகாட்டிலோ

காத்திருக்கும் அம்மா

-ராஜாத்தி -

கண்ணீர் துளியோடு ஊர் செல்லும் பஸ்ஸை நோக்கி பேருந்துநிலையம் ஓடினான் சௌந்தரபாண்டியன்.

◎

மீரா (தமிழகம்)

# வசியக்காரா

அந்த உணவகத்தில்
எதிரெதிராய் நாம்
அமர்ந்த நாட்கள்
இன்னும்
அகலவில்லை.
இருசக்கர
வாகனத்தில் நாம்
பயணித்த
இடமெல்லாம்
இன்னும்
உன்னையே நலம்
விசாரிக்கிறது.
உன் காதல்
கடிதங்கள் இன்றும்
என் வாசிப்பில்
உயிர் பெற்றுக்
கொண்டிருக்கிறது.
இருவருமாய்
இருந்த அறையில்
இப்போது நானும்,
தனிமையும்.
அன்பு மொழி பேசி
எனை வசியம் செய்தாய்,
அலாதியானேன்.
சொல்லாமலே
விலகிச் சென்றாய்,
நான் அபலை ஆனேன்.

◎




# ஊரும், உறவும்

இரா. மதிராஜ்

அந்தக் கீழத் தட்டப்பாறைக் கிராமத்தில் அவருடைய மானாவாரி இடத்தில் பருத்திப்போட்டு இருந்தார் பெரியவர்

"ஏலே அங்கு யாரோ வராங்க லே"

"......"

"குட்டியா லே அது"

"ஏலே எங்க மாமா பேரு வச்சா வந்திருக்கான் டோய்"

"அப்ப எல்லாம் காட்டு விவசாயம்தான். பண்டமாற்று முறை தான்"

"ஐயோ என் மாமா பேரு வச்ச உனக்கு என்கிட்ட கொடுக்குறதுக்கு ஒன்னும் இல்ல இப்ப என்ன செய்வ?"

"சரி சரி மருமகனே நீ வீட்டுக்குப் போங்க"

"மாமா அப்படியே செத்த நேரத்தில காட்டுல இருந்து வீட்டுக்கு வந்துறேன்"

"சரிங்க மாமா"

"அடியே இங்க வாடி"

"மருமகன் பிள்ளை வந்திருக்கான்

டியோ,திங்க ஏதாவது இருக்காடி"

"என் தங்கச்சி மகன் என் மாமாப் பேரு வச்சவன் வந்து இருக்கான்டி"

"அவனுக்கு காபி போட்டு கொடுடி"

"திங்கறதுக்கு ஏதாவது?"

"பயிர் ஏதாவது?"

"ஏங்க ஒன்னும் இல்லையே இருந்தது வந்து,

"என் தங்கச்சி காலைல வந்ததும் அவளுக்கு அவிச்சி கொடுத்துட்டேன்"

"சரி சரி இருக்கட்டும் போவுது"

"அங்கு அற வீட்டுக்குள்ள ஒரு கொத்து பருத்தி கிடக்கும் பாரு அதை கெட்டியா பிடிச்சு எடுத்துட்டு வா லேய்"

"சரிங்க"

"ஐயா ராமசாமி

நீ எதுவும் நினைச்சுக்காதீங்க

மாமா வீட்ல காபி தான் இப்போ இருக்கு

"

"....."

"மாமா ஒரு கை பருத்தித் தாரேன்

அது அந்த செட்டியார் கடையில் கொடுத்து ஏதாவது வாங்கி சாப்பிட்டு வாயா"

"ராமசாமி படுத்தியை பக்குவமாக பிடித்துட செட்டியார் கடைக்கு செல்கிறார்"

"ஏய் நீ புதுக்கோட்டைக்காரன் தான் லே தளவாக் கோனார் மகன் தானே இங்கே எங்க வந்த"

"செட்டியாரே மாமா வீட்டுக்கு வந்தன் செட்டியாரே"

"சரி சரி என்னையா வேணும்?"

"மாமா தந்து விட்டாவோவ '

"இந்த பருத்திய வச்சிட்டு ஏதாவது பயறு இருந்தா தாங்கய்யா"

பருத்தி செட்டியாரிடமும்

அவிச்சத் தட்ட்டாம் பயிறு ராமசாமிக் கைக்கு இடமும் கைமாறுகிறது,

இன்னொரு நாள்,

புதுக்கோட்டை ஊர்ல பத்து, பதினைச்சுத் தோட்டம் தான் இருக்கும் எல்லாம் கிணத்துப் பாசனம் தான்,

பருவத்துக்கு தான் பயிர் போடுவாங்க

அதுல முக்கியமான ஒருத் தோட்டம்

நம்ம ஜெயராஜ் நாடார் தோட்டம்,

ஜெயராஜ் நாடார் நாலஞ்சு வருஷமா கொஞ்சம் படுக்கையில தான் இருக்கிறாரு,

ஆனா அன்னத்தாய் பாட்டி வந்து அவ்ளோ நல்லா வேலை செய்யும்

இன்னைக்கு வேற அவியத் தோட்டத்துல கிழங்கு எடுக்குறாங்க, அதாங்க சீனிக் கிழங்குன்னு சொல்லவாங்க, வெள்ளை வெளர்ன்னு இருக்கும் சக்கரைவள்ளிக் கிழங்கு தாங்க, கருப்பட்டிப் போட்டு அவிச்சித் தின்னா அவ்வளவு நல்ல இருக்கும்,

கிழங்கு எடுத்து சந்தைக்கு போறதுக்கு முன்னால அவங்களுக்கு ஒரு

இந்த, சித்திரை,தை மாசம் அறுவடைல

நல்ல கிழங்கு முதல எடுத்துட்டு

அதை யாரெல்லாம் அறுப்புக்கு வேடிக்கைப் பார்க்க வராங்களோ அவங்களுக்கெல்லாம், காசு வாங்காம இலவசமா

தலையில கட்டி கொடுத்துடுவாங்க,

“ஐயா கோனார் மவனே இங்க வாலே”

ஜெயராஜ் நாடார் பொண்பாட்டி அன்னத் தாய்ப் பாட்டி மக்கமார் இடத்துல பேசுது

“ஏல இரத்தினசாமி, பொன்னுச்சாமி

ராமசாமி வந்திருக்கிறான்”

“இதுல நல்ல கிழங்காப் பார்த்து, வெட்டு விழாதக் கிழங்கைப் பார்த்து எடுத்து நல்ல அரிசிச் சாக்குலக் கட்டி பக்குவமா கொடுத்து விடுய்யா”

“சரிங்கம்மா”

சீனிக் கிழங்குனு சொல்லுவாங்க

சித்திரை மாசம் தை மாசம் அறுவடை நடக்கும்

அவ்வளவு கிழங்கு எப்படி வளந்துசுச்சுன்னு வெளியே தெரியாது

ஒரு கிழங்கு ஒன்னு, கால், அரைக் கூட கிலோ எடை வரும்,

சணல் அரிசி சாக்ல கிழங்கைக் கட்டி

வச்சு முடிச்சு போட்டு

சிறுவன் ராமசாமி தலையில் கட்டி வைத்துதாங்க இரத்தின சாமியும், வெள்ளைச் சாமியும்,,

“ஐயா பாத்து மெல்ல நடந்து போயா”

இப்படி ராமசாமிக்கு மட்டும் இல்ல

வேடிக்கை பார்க்க வந்த பத்து, இருபது பேருக்கும் வெட்டிக் கொடுத்து முடித்த பிறகுதான்,

அடுத்து வந்து கிழங்கை சாக்ல கட்டி தூத்துக்குடி, ஏரல் சந்தைக்கு அனுப்புவாங்க,

“காந்திமதி ஆச்சி விவசாயம்தான்”

மாடு,காடு எல்லாம் பாத்துட்டு இருக்குது, மாட்டுக்கு பாஞ்சாலின்னுப் பேர் வச்சிருந்தா,

பக்கத்துல ஒரு கஷ்டப்பட்ட அம்மா ஒன்னு இருக்குது

அந்த முனியம்மாவும் காந்திமதிக்குச் சொக்கார முறைதான்,

நல்ல காட்டு வேலை செய்யும்

காந்திமதியும் முனியம்மாவும் ஒருத்தருக்கு ஒருத்தரு ஒத்தாசையா இருந்தாங்க,

தெனமும் காபிக் குடிக்கும் போது

முனியம்மாவோவும்,காந்திமதியும் சேர்ந்து தான் காபி குடிப்பாங்க,

அப்பல்லாம் அடுப்பு வீட்டுக்கு வெளியே தான் இருக்கும்

முனியம்மாவே காந்திமதி வீட்டிலேயேத் தான் தினமும் சோறுப் பொங்கி தான் ஒத்தப் பையனுக்கு எடுத்துட்டு போகும்

காபி குடிக்கிற இடத்துல சாயங்காலம்

வறுத்த கானப்பயிறு அதாங்க கொள்ளு உண்டு,

ராமசாமி பெரியவனா ஆனப் பின்பு சீக்கிரமாப் படிச்சு முடிச்சு ஒரு அரசாங்க வேலைக்கு போயிட்டான்

அப்போ ஒரு நாள்

ரத்தினசாமி ராமசாமியைத் தேடி வாராரு

“நமக்கு ஒரு உதவி செய்யணும் அண்ணன்”

“என்னலே தம்பிச் சொல்லுல”

“அரசாங்கத்தில் ஒரு வேலைக்கு எழுதி போட்டு இருக்ககேன்”

“….”

“வேலை போட்டுக் கொடுக்க

பெரிய அதிகாரிட்ட நீ தானே எனக்காக எப்படியாவது பேசணும்”

அரசாங்கத்தில் உயர் பதவியில் இருக்கிற அதை தேவர் போய் பார்த்து

“வணக்கம் ஐயா”

“தம்பி தளவா மகன் தானே நீ?

“ஆமாம் அண்ணாச்சி”

“சொல்லுய்யா”

“வேலை எல்லாம் எப்படி போகுது?”

“நல்லப் போகுது ஐயா”

“அண்ணாச்சி உங்கள வச்சு நமக்கு ஒரு உதவி வேணுங்க அண்ணாச்சி”

“என்னப்பா சொல்லுப்பா உனக்குச் செய்யாம யாருக்குப்பா செய்யப் போறேன்?”

“எங்க சித்தப்பா மகன் ஒருத்தனுக்கு வேலைப் போட்டுக் கொடுக்கணும் ஐயா”

“சரி சரி பார்த்து கண்டிப்பாக

பாரம் எல்லாம் வந்து என்கிட்ட குடுக்க சொல்லு”

வேலைக்கான நேர்முக தேர்வு நடந்துட்டு இருக்கு

அண்ணாச்சி ராமசாமி வர சொல்றாரு

“என்னப்பா உன்ன நல்ல ஆளுன்னு நினைச்சா நீ என்னப்பா இப்படி பொய் சொல்லி இருக்க”

“ஐயா என்னன்னு சொல்லுங்க ஒன்னும் புரியலை அண்ணாச்சி”

“ரத்தினசாமி உனக்கு சித்தப்பா மவன்னுச் சொல்ற ?”

“அவன் டிசி ல அங்க அப்பாப் பேரு ஜெயராஜ் நாடார் இருக்கு?”

“என்னலே சொல்ற நீ”

நீங்க உங்க அப்பா வந்து அங்க கோவம் காட்டுலயிருந்து ஆடு யாவாரம் தான்ப்பா செய்றாங்க,

“....”

உங்க அம்மா உன் தங்கச்சி உங்க சொக்காருங்க எல்லாம் ஆடு தானப்பா மேச்சிட்டு இருக்கீங்க?

“ஆமா அண்ணாச்சி”

“நீ கோங்கமாரு தானப்பா ?”

“.....”

“அந்த பையன் நாடாக்குமாருப் பையன் தானேப்பா ?”

பின்ன எதுக்குத் தம்பி சித்தப்பா, தம்பி,அப்படியெல்லாம் சொன்ன ?

“....”

“உண்மைய சொல்லலாம் இல்லப்பா?”

“ஐயா அது வந்து”

“தம்பி மனுசனுக்கு நாக்கு தான் ரொம்ப முக்கியம்”

“ஐயா நீங்க சொல்றது உண்மையா இருந்தாலும்,

நான் சொன்னது ஒன்னும் பொய் கிடையாது”

“......”

“ரத்னசாமி வேற யாரும் இல்ல, எனக்கச் சித்தப்பா மவன் தான்”

“அவங்க அப்பா வந்து எங்க அப்பாவ அண்ணன்னு தான் கூப்பிடுவாங்க

அவங்க அம்மாவை நான் வந்து

சித்தின்னு தான் கூப்பிடுவேன்”

“நீங்க வேணா ஊருக்குள்ள கேட்டு பாருங்க”

அது பெரிய ஒரு தேவர் மேலேயும், கீழேயும் முழிக்கிறார்

அப்போ உறவுக்கு ஜாதி கிடையாது போல நினைச்சுட்டு

மத்தியானம் நாலு மணி இருக்கும் ஆபிஸை பூட்டுற நேரம்

அந்த பச்சை நிற சுழல் தொலைபேசியில் அழைப்புமணி ஓங்கி ஒலிக்கிறது

அந்த தொலைபேசி முனையை எடுக்கவில்லை தேவரய்யா

அண்ணன், தம்பி உறவுக்கு முன்னால ஜாதி ஒன்னும் பெரிதல்ல என்று உணர்ந்த தேவர் ரத்தினசாமிக்கு உடனே வேலையில் கையெழுத்து போட்டு

“சரியா போய்ட்டு வா என்று சொல்லி சொல்கிறார்”

பெரிய கும்பிடுப் போட்டு நன்றி சொல்லுகிறார்கள் ரெண்டு சாமிகளும்,

சந்தோசமா ரத்தினசாமியும், ராமசாமியும்

ஒன்றிய அலுவலகத்தில் இருந்து வெளியே வராங்க.

# நிசப்தம்...

ஸ்ரீவி.முத்துவேல், துபாய்

திருநெல்வேலி நகரத்தின் பேருந்து நிறுத்தத்திற்கு அருகில் இயங்கி வரும் பிரபலமான உணவகத் தின் உரிமையாளர் மிகவும் கோபக்காரர். உணவகத்தில் வேலையாட்கள் சிறு தவறுகள் செய்தாலும் மிகக் கடுமையான வார்த்தைகளால் திட்டி,அவர்களது மனம் நோகும்படி நடந்து கொள்வதை நீண்ட காலமாக தொடர்ந்து வந்தார்.அங்கு வேலை செய்பவர்களில் பலர் ஏழ்மை நிலை காரணமாக எல்லாவற்றையும் சகித்துக் கொண்டு வேலை செய்து வந்தனர்.

ஒரு நாள், வாடிக்கையாளர் ஒருவர் உணவின் தரம் சரியில்லை என்று உரிமையாளரிடம் புகார் கூற, உரிமையாளரோ சரியாக பதில் அளிக்கவில்லை. அதனால் அவர் மீது கோபப்பட்டு தகாத சொற்களால் வசைபாடினார்.மனம் நொந்து போன உணவக உரிமையாளர் அன்றிரவு தூக்கதைத் தொலைத்தார். அவரது வேலையாட்கள் தன்னால் அடைந்த மனஉளைச்சலை இப்பொழுது தான் அனுப்பவிப்பதை நன்கு உணர்ந்தார்.

சில நாட்கள் யாரையும் புண்படாமல் பேசி பழகி வந்தார். ஆனால் அவனது மனதிற்குள் திட்டிக் கொண்டு தான் இருந்தார்.வேலையாட்கள் அனைவரும் அவரின் மாற்றத்தைக் கண்டு வியப்படைந்தனர்;அவர்களது வேலைகளை மகிழ்ச்சியாக செய்து வந்தனர்.

சில நாட்கள் கழித்து மீண்டும் அவரது வேலையாட்களைத் தகாத வார்த்தைகளால் வசைபாட ஆரம்பித்ததும் அவரது மனம் அமைதியடைந்தது. அவர் இதிலிருந்து எப்படி மீள்வது என்ற கேள்வியை தன் மனதிற்குள் கேட்டுக் கொண்டே இருந்தார். இந்த மனநிலை தனக்கு புதியதாக இருப்பதை உணர்ந்தார்.

அவர் தனது குடும்பத்தோடு குற்றாலம் சென்றார். மெயின் அருவியில் குளித்துவிட்டு தேனருவியை நோக்கிப் பயணத்தைத் தொடந்தனர். தூரத்தில் விழும் அருவியின் சத்தம் நெருங்க நெருங்க அதிகரிப்பதையும் அடர்வனத்தின் நிசப்தம் கலைவதையும் உணந்தார்.தேனருவியை அடைந்ததும் அதன் சத்தம் காதைப் பிளந்தது.அவர்கள் நீண்ட நேரம் குளியலிட்டு மலைஅடிவாரத்தை நோக்கி நடந்தனர். இப்பொழுது அவர் அருவியின் சத்தம் குறைந்து கொண்டு வருவதையும் அடர்வனத்தில் நிசப்தம் உருவாகுவதையும் ஆழ்ந்து புரிந்து கொண்டார்.

"அருவியின் சத்தம்

குறையக் குறைய

அடர்வனத்தில் நிசப்தம்!"

என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டார்.கடுஞ்சொற்களைப் பேசுவதை நிறுத்தவும் அவரது மனதில் அடர்வனத்தின் அதே நிசப்தம்...

◎

குமரன்விஜி

# ஏதும் சொல்வதற்கில்லை

நேற்று கலைந்த மேகம்
நேற்று கலைந்த தேன்கூடு
நம் உறவு நிலை

இலைகளையுண்ணும் புழுக்களைப்போல
நாள்களால் கடித்து உண்ணப்பட்டது மனம்.

எதற்கும் தாமதமாய்
வந்திருக்கலாம்
சினமின்னல்.

கடலடிப் பாறைத்திட்டுகளின் விலகலால்
உண்டாகும் அலைகள்
நமது

விட்ட இடத்திலிருந்து இழுத்திருக்கலாம்
விட்டுவிட்டதால்


நிற்கிறது
நடுத்தெருவில் தேர்.


கண்ணன் (விஸ்வகாந்தி)

# புத்தகத் திருவிழா

தாயைத் தேடி
தலைதெறிக்க ஓடிவந்து
மடிமுட்டிக் குடிக்கும்
பட்டியாட்டுக் குட்டியாய்
தொகுப்பைக் கண்டடையும்
கவிஞனின் கண்கள்
அடுத்த நொடி
மலையேறிய களைப்பில்
தசைநார்கள் இழுக்க
ஓரமாய் உட்கார்ந்து
ஓலமெடுத்து அழுவான்
உள்ளுக்குள்.

ஊசி போட்டு முடித்த பின்பும்
வலி நினைத்து
அழும் சிறு குழந்தையாய்
கடந்த நாட்களை நினைத்து
தேம்பியழும் மனசு.





தானா விஷ்ணு

# மனதைத் தின்ற பூதம்


நொருங்கிய கண்ணாடியின் விம்பங்களில்
தலை சீவுகிறது காலம்
காலபூதம் உனக்குமெனக்குமிடையில்
எழுப்பிய சுவரில் முட்டிமோதுகிறது தும்பி
பனிப்பெய்யும் இரவில் கூதல் காயும் பூனையென
குறிகிப்போகிறது
உன் நினைவுகளுடன் உயிர்
கனவுகள் உதிர்ந்துகிடக்கும் இரவில்
மின்மினிப் பூச்சியின் ஒலிபோல்
ஒட்டிக் கொள்கிறது
உன் மெல்லிய பிரியம்.
நிலவற்ற ஒவ்வொரு இரவும்
அமைதியெனும் பூதம் கொத்திச் செல்கிறது மனது
சீழ்வடிய, சீழ்வடிய
துடைத்தெறியும் காகிதமாச்சு
மனதுள் ஆடும் நினைவுச்சு சுமை.
காற்றில் விளக்கணைய, விளக்கனைய
ஒலியூட்டும் முயற்சியெ
தொடர்கிறது எனக்குள்ளான புன்னகை.
கைதவறிய பிரம்பை
தேடியலையும் குருட்டுக்கிழவனைப் போல்
மனம் நாடியலைகிறது வாழ்வை.

நன்றி:இணையம்

நேசன் மகதி

# விளையாடும் காற்று

திருவிழாவில் ஒன்றில் வாங்கிய
காற்றுக்குமிழிகளை உற்பத்தி செய்யும்
நுரைத்த வேதித்திரவம் நிரப்பப்பட்ட
சிறு பிளாஸ்டிக் புட்டியில்
பூதக்கண்ணாடியின் சாயலை ஒத்த
சிறுகோல்கொண்டு நுழைத்தெடுத்து காற்றை
ஊதிவிடுகிறாள் அச்சிறுமழலை
சூரியகதிரின் ஏழுவண்ணம் பூசிக்கொண்டு
சிறிதும் பெரிதென மெல்லியகண்ணாடி
உடல்வாங்கி காற்றில் பறக்கின்றன குமிழிகள்
அவற்றை ஒவ்வொன்றாகத் தொட்டு விட
நுனிக்காலில் நின்றும் குதித்தும் பார்க்கிறாள்
உடைபடும் தருணங்களுக்குள்
அவளோடு விளையாடிவிட
போக்குக் காட்டி உயர உயரப்
பறக்கின்றனஅக்குமிழிகள்...



தங்கேஸ்

# இலக்கற்ற பயணி

நினைவு தப்பிய பயணிக்கு
கால்கள் சிறகுகள் அல்ல
வானில் நீந்திச் செல்வதற்கோ
பிசகில்லாத மனமுமில்லை

ஒரு கண்ணீர் துளியைப் பற்றிக்கொண்டே
இலக்கை
சென்றடையலாம் என்றால்
அதுவும் நின்று போய்
நீண்டநாள் ஆகிவிட்டது

பற்றுதற்கு பற்றற்ற அவன்
இந்த இரவின் இழையை பிடித்துக் கொண்டே
மேலே செல்கிறான்
சிவன் தலையிலிருந்த உதிர்ந்த தாழம் பூவைத்தான்
அவன் கடைசியாகப் பார்த்து.

புறப்பட்ட இடத்தைமறந்து விட்டது பற்றியும்
போகுமிடத்தை மறந்து விட்டது
பற்றியும்
அவன் கவலை கொள்ளவில்லை

ஆனால் துடிக்கும் ஒவ்வொரு
நொடிக்குள்ளிருந்தும்
அவனை அழைத்துக் கொண்டிருக்கும்
அந்த குரல் எங்கிருந்து வருகிறது
என்பது மட்டும்
அவனுக்குப் புரியவில்லை
அது யார் என்பதும் கூடஅவனுக்குத்
தெரியவேயில்லை

❍

# ஒரு குவளை தேநீரில்...

ஒரு குவளை தேநீரில்
வானத்தை பிட்டு பிட்டு போட்டு கரைக்கிறேன்
கசப்பும் துவர்ப்பும் உவப்பற்ற சுவையும்
தொண்டைக்குள் இறங்குகின்றது

குவளைக்குள்ளிருந்து
முளைக்கிறது
வெண்தாமரைப்பூ
ஆனால் நான் எதிர்பார்த்ததோ சங்குப்பூ

தாமரைப் பூவின் புறத்தோலில்
முதிர் புறாவின் அடர் சிறகுகளின்
ரேகைகள்
ரேகையின் மிருதுவத்தை
கண்மூடி உரசிப் பார்க்கிறேன்
இப்போது தேநீரோடு குவளை
சிறகடித்துப் பறந்து கொண்டிருக்கிறது
வானில்.

◎

கவிஜி

# ஞான தேசம் போகிறவன்

புது வழி செய்பவன்
தத்தி தத்தி நடப்பது
இயல்பு தான்
இலையென ஆன பின்
நுனிப்பற்றை
சுமந்தலைய தெரியாத
சுவடுகள்
கனமானவை
சுகமானவையும்
மலை வழிப்பயணம்
மன வழிப்பயணம்
ஒரு சேர நடப்பதில்
இருக்கும் சித்து இது
கடலை செலுத்த
முடிவெடுத்தவனுக்கு
கப்பல் பொருட்டல்ல
எதிர் காற்றில் இசை
தேகத்திலிருந்து விடுபடும்
சிறகுகளின் வரை படத்தை
வழி நெடுக விதைக்கும்
ஒளி அது
கானலோ காலமோ
ஞான தேசம் போகிறவன்
காணாமல் போவது தான்
கவிதை....!




வி.அபிவர்ணா, முல்லைத்தீவு.

# செழிக்கட்டும் இயற்கை வளம்

மண்வெட்டி கைபிடித்து
வரம்பு கட்டி நீர் நிறுத்தி
உழவடித்து நெல்லெறிந்து
பயிர்வளர பாடுபட்டு
கதிர்முற்ற நெல்லறுத்து
பதர் போக்கி மூடை கட்டி

நாளாந்த சோற்றுக்கு மட்டும்
சில மூடை வீட்டுக்கு ஒதுக்கி வைத்து
மீதி மூடை விற்கையிலே
சேர்ந்த பணம்
உணவுக்கு பாதி
உரத்துக்கு பாதி
அறுப்புக்கு பாதி
அலுப்புக்குப் பாதி போக
மீதி என்ன இருக்கின்றது.
அப்பன் உடல்தான் தேய்ந்து
கிடக்கின்றது.
ஆதலால் செழிக்கட்டும் இயற்கை.



மரபுவழி வந்த பொங்கல்
மகிழ்ந்திருக்க சொல்லும்
முக்கனிகள்
முற்றிய கரும்பு
நவதானியங்கள்
நஞ்சற்ற உணவு
தந்திடும் பொங்கல் என்று
சூரியனுக்கு படையல் வைத்த
பழைய கதை
வாய்வழியாய்.

முற்றிய கரும்பு
கடைத்தெருவில் முந்நூறுரூபாய்
முக்கனிகள் பலநூறு ரூபாய்
நவதானியங்கள் நாவால் சொல்ல
முடியாது.
பட்டாடைகள்
புத்தாடைகள்
புது வரியுடன் சேர்த்து
எத்தனை எத்தனை ஆயிரம்.

நஞ்சற்ற உணவு
எழுத்திலே மட்டும்
எழுந்து மறையும் சூரியன்
நிஜத்திலே மட்டும்
ஆதலால் செழிக்கட்டும் இயற்கை.

பக்கத்து வீட்டுக்கு
பொங்கல் கொடுத்து
பாடி ஆடிய பல கதைகள்
பாட்டியுடன் முடிந்தது.

ஊர் கூடி பொங்கலிட்டு
உசுப்பேற்றும் கதைகள் சொல்லி
வீண் விரயம் செய்யும்
எங்கள் அன்பு
புகைப்படங்களுடன் இணையங்களில்

இன்று
யாரோ சொல்லி
மரம் நாட்டும்
மகிழ்வைத் தானேப் பகிர்கின்றோம்
மாடு இறக்கி நெல் விதைத்த
பாரம்பரியம் தொலைத்திட்டோம்.

வேலிபோட்ட வாழ்க்கையிலே
கூட்டுக்குள்ள நாய் வளர்த்து
நாயிருக்கு கவனமென்று
விளம்பரங்கள் இடுகின்றோம்.

அப்பப்போ
நாங்கள்
மனிதரென்று
வெட்கமின்றியும் சொல்கின்றோம்
ஆதலால் செழிக்கட்டும் இயற்கை.

வீட்டுக் குருவிக்கொரு
கூடு கொடுக்க முடியவில்லை
மின்சார கம்பிகளால்
பல மரங்களுக்கு
கிளையில்லை
பூங்காவில் மட்டும்
நிழல் என்று நடைமுறையில்.

பாவம் இந்த பூமி
மனிதர்கள் நாம்
அறிவை வீண்விரயம் செய்கின்றோம்.

நவீனங்கள் வளர்ந்த பின்பு
கையோடு தொலைபேசி
நாகரிகங்கள் சேர்ந்த பின்பு
வாழ்வென்பது நீ யோசி
இயற்கையை இழந்து வாழ்வது தகுமா?
ஆதலால் செழிக்கட்டும் இயற்கை
ஆதலால் செழிக்கட்டும் இயற்கை
ஆதலால் செழிக்கட்டும் இயற்கை.

◎

சா. கா. பாரதி ராஜா

# தமிழ் காட்டும் வாழ்வு

உயிரையும்
மெய்யையும்
கொண்டது மட்டுமல்ல
ஆயுதத்தையும் கொண்டது
தமிழ்

பூமியின்
ஒரு புள்ளியில் நுழைந்து
ஒவ்வொரு புள்ளியிலும்
விருட்சமாக கிளர்ந்தெழுந்துள்ளது

காலில்
கட்டிய சிலம்பை
நீதிக்காக
கையிலெடுத்தவள்

மூவடியில்
உலகை அளந்தவன்
அதிசயித்திருப்பான்
இரண்டடியில்
உலகை அளந்தது
தமிழ்

மொழிபெயர்ப்பிலும்
மூலத்திற்கும்
முன் நிற்கும் தமிழ்
கம்பனின் ராம காதையாய்

மனித மேகங்கள்
கலைந்திருந்தாலும்
தன் ஈரக்காற்றால்
கார்மேகமாய்
ஒன்றாய்த் திரட்டும்

தமிழ்
தாய்மொழி தான்
தமிழருக்கு மட்டுமல்ல
மொழிகளுக்கே
தாயானவள் இவள்

கடவுளின்
உருவைக் காட்டியது
பெற்றோரே
முன்னறி தெய்வம் என்றது

அறத்தைப் பாலாக்கி
குருதியில்
கலக்க விட்டது
தமிழ்

அறம் செய்
என்று பணிக்கவில்லை
அறம் செய விரும்பு
என போதித்தது

ஓடி விளையாடச் சொல்லி
சாதிகள் இல்லையடி யென
சமத்துவ நீரை
வேரில் ஊற்றியது

கும்மியடிக்கச் சொல்லி
அடிமை விலங்குகளை
உடைக்கச் செய்து
அண்ணாந்து
பறக்க விட்டது
தமிழ்

உயர்ந்தால்
நிழல் தரச் சொல்லும்
விழுந்தால் விதையாகி
மீண்டும் விருட்சமாக
எழச் செய்யும்
எங்கள் தமிழ்!

◎



# அவனும் நானும்

தாமோதரன் சாது, சவூதி அரேபியா.

அவன் என்னை விட்டு போய்விட்டான் இனிமேல் திரும்ப வரமாட்டான்.

அவனிடமிருந்து நான் இதை எதிர்பார்க்கவில்லை.

எல்லாமே என் தப்புதான். அவனை முழுசா நம்புனது என்னோட தப்புதான்.

‘கனவில் கூட அவன் இப்படி செய்வான்’ என்று நான் நினைத்துப்பார்க்கவில்லை.

‘ஆட்டை வெட்டும் போதுதானே! ஆட்டிற்கே தெரிய வரும். தன்னோடு எஜமான் எதற்காக பழகினார்’ என்று.

அது போன்று அவனும் சிரிச்சி..சிரிச்சி.. பேசி.. பேசி..மயக்கி நம்பிக்கை துரோகம் செய்துவிட்டான் படுபாவி.

இதற்கு மேல் உயிர் வாழ்ந்து நான் என்ன செய்ய? அவன் இல்லாத இந்த வாழ்க்கை வாழ எனக்கு விருப்பமில்லை. துக்கம் குடிக்கொண்டு மனம் எழுந்திருக்க முடியாமல் உட்கார்ந்துக்கொண்டது.

‘என்ன செய்ய?... என்ன செய்ய?...’ என்று உள்ளுக்குள் முளைத்த கேள்விக்கு விடை தெரியாமல் விழித்துக்கொண்டிருந்தேன்.

இப்படி விடிய.. விடிய..கண் விழித்து.. கண் விழித்து..அவனோடு

பேசி.. பேசி.. எனக்கு பழக்கமானான்.

‘அவன் அவனே.. பெயரில் என்ன இருக்கிறது?

அது அவனுடைய உண்மையான பெயரா?’ என்று கூட தெரியாது.

திரைக்கு தேவை ஒரு பெயர். அவன் ஜோக்கர்_143 என்ற பெயரில் தான் அறிமுகம் ஆனான்.

அறிமுகம்.. அறிமுகம்.. எப்படி அறிமுகமானான்? யோசிக்க ஆரம்பித்தேன்.

சட்டென்று லேப்டாப் ஓப்பன் செய்தேன். ‘இன்ஸ்டாவில் ஜோக்கர்_143’ என்ற ஐடியின் தாபல்பெட்டியை கிளிக் செய்தேன்.

தாபல்பெட்டி என்றால் வேறு ஒன்றுமில்லை அதாங்க மேசேச்..

நாங்கள் பேசியதை பார்த்துக்கொண்டு வந்தேன்.

கனவுகளில் நினைவடுக்குளை பார்ப்பது போல,

இதோ இந்த இருக்கு! அவனுடைய முதல் செய்தி.!

“குட்மார்னிங் டியர்...”

‘அவனுக்கு உடனே பதில் கொடுக்கவில்லை. மாறாக நான் என்ன செய்துக்கொண்டிருந்தேன்’ என சிந்திக்க தொடங்கினேன்.

“குட்மார்னிங் டியர்...” அவன் சொன்ன தேதியை குறித்துக் கொண்டு டைரியில் அந்த தேதியை பார்த்து அதிர்ந்து போனேன்.

அன்று.. அன்று..எனக்கு பீரியட்ஸ். அம்மா அப்பா வேறு ஊரில் இல்லை.

அதனால் தனிமை... தனிமை... தனிமை என்பது கொடுமை.. அதுவும் வலியும் சேர்ந்துக்கொண்டால்? ஒவ்வொன்றாக ஏதோ புரிய தொடங்கியது.

‘யோசி... யோசி...’ என்று மீண்டும் நினைவுகளை மீட்டத்தொடங்கினேன்.

‘செக்ஸ்’

‘கவர்ச்சி’

இல்லை இதில் எதுவுமில்லை.

‘இப்பருவத்தின் போதையோ?’

அன்று பீரியட்ஸ் மன அழுத்தம் அதையும் மீறி தனிமை வேறு. இது தான் காரணமோ?

வலியை பற்றி சிந்திக்காமல் இருக்க? வேறொன்றில் கவனம் செலுத்த வேண்டும். அது இதில் செலுத்தினால் என்னவென்று காரணம் தோன்றியது.

அவனுடைய ஐடிக்குள் போய் போட்டோக்களை பார்த்தேன்.

மறக்க நினைக்கும் நினைவுகளை

மனதிற்குள் பூக்க வைக்கும்

மந்திரம் அறிந்த ஒன்னு - புகைப்படம்

ஆளு பார்க்க ஹண்ட்சமாக இருக்கான். ஒரு மெசேச் அனுப்பி தான் பார்ப்பமே...! என்ன நடந்துவிட போகுது? அந்த சிந்தனையில் இருக்கும் போதே ”குட்மார்னிங்” என பதில் கொடுத்தேன். வலியை மீறி வயிற்றுக்குள் அமிலம் சுரப்பது போலிருந்தது.

அவன் அதை பார்த்துவிட்டு பதில் கொடுக்காமல் இருப்பது நெஞ்சில் சுருக்கென்று தைத்து போன்று இருந்தது. வலிக்கு வலிக்கொடுத்தது.

சற்றும் எதிர்பாராத நேரத்தில்“சாரி டியர்.. சமைத்துட்டு இருந்தேன்.”

“ஐய்யோ...இதுக்கு எதுக்கு சாரி“

“பார்த்துட்டு பதில் கொடுக்காமல் இருந்ததற்கு”

❍

“....”

“உங்களுக்கு சமைக்கலா தெரியுமா?”

“ஏதோ கொஞ்சம்.. நான் ஒன்னு சொல்லவா?”

“ம்ம்....சொல்லுங்க”

“ஒரே ஒரு நாள் நீங்க சமைச்சீங்க”

“ம் நானு...சரி அப்புறம் என்னாச்சு?”

“டோட்டல் பமிலி க்லோஸ்”

“ஹா ஹா நாட் ஃபன்னி“

என்னை சிரிக்க வைப்பதும், அவன் சிரிப்பதும்,

நான் யோசிக்க ஆரம்பிக்கும் முன் அவன் பேச ஆரம்பித்துவிடுவதும்.

இப்படிதான் தினமும் ஏதோ ஒன்று பேசி.. பேசி.. அப்புறம் அது பெரும் பேச்சாகியது. மனசும் அதிலே பயணித்து இருக்கிறது.

‘எது பயணம் செய்ய தூண்டியது?’ என்று என்னால் காரணம் கண்டுபிடிக்க முடியவில்லை. இதுதான் மனகுறைவோ?

ஒரு வேளை வயசு காரணமா இருக்குமோ?

வெளிப்பார்வை இல்லாமலும் கண்ணுக்கு தெரியாத திரை இருப்பதாலும் கண்ட தோற்றங்கள் மனக்கிளிர்ச்சிக்கு காரணமாயிற்றோ?

காரணமற்றது என்றாலுமே மனக் குறைவு ஏற்படுகிறது.

காரணமற்றே நடந்த நிகழ்வும்,காரணம் கொள்வதற்கு வேண்டி

காரணம்தான் போலுமோ?

முக்கால் வாசி அவன் அம்மாவை காரணம் காட்டி- பேசி.. பேசி.. அம்மாவை தூண்டிலில் புழுவா மாட்டி இரையை தேடி இருந்திருக்கிறான். நான்தான் தெரியாமல் அதில் சிக்கிக்கொண்டேன்.

அவனுடைய தூண்டில் இழுத்த இழுப்புக்கெல்லாம் நானும் பின்னால் சென்றிருக்கிறேன்.

ஒரு நாள் சாயங்காலம் ப்ரொவ்சிங் சென்டரில் அவன் என் பின்னால் நின்றுக்கொண்டிருந்தான். எனக்கு ஐஸ் கட்டிகளை வாரி வயிற்றில் கொட்டியது மாதிரி இருந்தது.

‘இது எதிர்பாரத சந்திப்பா? இல்லை திட்டமிட்ட சந்திப்பா?’ என்று அன்று யோசிக்க மனம் இடம் கொடுக்கவில்லை.

அவனை பார்த்த ஆனந்ததிலும், இன்ப அதிர்ச்சியிலும் ஒரே குதூகலமாக இருந்தது.

ப்ரொவ்சிங் சென்டரில் ஒரே அறையில் அவனும் நானும்.

அவனுடைய கண்களை ஒரு நிமிஷம் கூர்ந்துப் பார்த்தேன். அவனுடைய பார்வை மகத்தானதாக இருந்தது.

ஏதோ ஒரு வகையில் அவனோடு பேசிய வார்த்தைகள் உன்னதமாக என் மனதில் ஓடிக்கொண்டிருந்தது.

‘பேச்சினால் உணர்வுகளை வெளிச் சொல்ல முடியாது என நினைத்தனோ? ‘இல்லை’ ‘குருட்டு தைரியமோ’ என்று தெரியாமல்

‘பளிச்’ என்று கையைப் பிடித்துவிட்டான்.

அந்த கணம் என் தேகம் முழுவதும் மயிர்க்கூச்செரிந்தது.

‘அவன் கையை பிடிப்பான்’ என்று நினைத்தது கிடையாது. என்ன நம்பிக்கையில் நான் தட்டிவிடாமல் இருந்தேன்? செயல்களை நினைத்துப்பார்க்கவில்லையோ? பின்னால் செய்ய போகிற நிகழ்வையும் நினைத்துப் பார்க்கப் போவதுமில்லை. செயலை வைத்துதான் திட்டங்களும், சிந்தனைகளும் தோன்ற காரணமாயிற்றோ?

‘இப்படி பிடித்த கையை கடைசி வரை விடமாட்டேன் டி’ என்று அவனுடைய பார்வை சொல்லியது. அவன் கண்கள் பிரகாசத்தோடு ஜொலித்தது.

இந்த பார்வையை பார்க்க முடியாமல் வெடுக்கென்று கையை விடுவித்துக் கொண்டு தலையை அந்த பக்கம் திருப்பிக்கொண்டேன்.

அவன் என் முகத்தை அவனுடைய முகத்திற்கு நேராக திருப்பினான். அவனுடைய பார்வை என்னை ஊடுருவி துளைத்துச் சென்றது.

பூமியில் மின்னல் பாய்ந்தால் என்ன நிகழுமோ! அது எனக்குள் நிகழ்ந்தது.

அவனுடைய கை என் முகத்தில் ஏற்பட்ட ஸ்பரிசம் எனக்குள் ஆயிரம் மின்னல்கள் பாய்ந்தது போலிருந்தது.

‘இது என்ன உணர்வு’ என்று உணர்வதற்குள் தீடிரென்று என் நெற்றியில் முத்தமிட்டான்.

மனமோ 'இது துன்பம்.. இது துன்பம்' துன்பத்தை மனக்கண் திறந்து

எச்சரித்துக்கொண்டிருந்தது.

உடம்போ 'இது இன்பம் இது இன்பம்..' இன்பவேதனையை கண்மூடி

அனுபவித்துக்கொண்டிருந்தது.

முத்தமா இது? இல்லை உயிரின் திறவுகோலா? சுகானுபவம் நீர்போல பெருக்கெடுத்தது. அடக்கிவைத்திருந்த நீர்தேக்கம் மடைதிறந்த வெள்ளம் போல் வெளியே பாய்ந்து ஓடியது.

அறையை விட்டு வெளியே வந்தோம். ஒருவரையொருவர் பார்க்க முடியாமல் தலை திருப்பிக்கொண்டோம்.

அவன் பதித்த முத்தங்களும், நடுநடுவே நிகழ்ந்த சில்மிஷங்களும் என் மனதில் திருப்பி புரட்டி பார்த்துக்கொண்டிருந்தது. அதை நினைத்து இரவு என்னவோ மிகவும் சந்தோசமானதாக தோன்றியது. ஆனால் எல்லாச் சந்தோசமும் மறுநாள் புகை போலாயிற்று.

'அன்று தான் எங்களுடைய கடைசி சந்திப்பு' என்று எனக்கு தெரியாமல் போயிற்று.

'இது வெளியே தெரியகூடாது' என்ற ஜாக்கிரதை எனக்குள் மீண்டும் மனக்கண் திறந்து எச்சரித்தது.

இப்பொழுதொல்லம் அவன் ஆன்லைனில் வருவதில்லை. நாங்கள் கூடிவிட்டு பிரிந்து விட்ட அவன் ஞாபகம் அடிக்கடி வராமல் இல்லை.

சில நாட்களில் அவனிடமிருந்து எந்த தகவலும் வரவில்லை.

எனக்குக் கொஞ்சம் கஷ்டமாக இருந்தது. ஆனாலும் நிமிஷத்துக்கு நாற்பது தடவை அவனுடைய ஐடியை போய் பார்த்து.. பார்த்து.. மனதை சமாதானம் செய்துக்கொண்டேன்.

'அவனுக்கு ஏதாவது வேலை இருக்கும்' என்று மனதை சமாதானம் செய்தாலும் நாட்களாக.. நாட்களாக.. ஏதோ ஒரு வித பயம் தொற்றிக்கொண்டது. கொரோனாவை போல,

வீட்டில் யாரோடும் ஒன்றும் பேசவில்லை. பேச தோன்றவில்லை. என்னை நானே தனிமையில் அடைத்துக்கொண்டது போல உணர்ந்தேன்.

துக்கம்.. துக்கம்..சில நேரங்களில் துக்கம் தாங்க முடியாமல் அழத்தோன்றும். 'ஓவென பாத்ரூமில் எத்தனை தடவை அழுதேன்' என்று தெரியாமல் அழுதுக்கொண்டிருந்தேன்.

எதிர்பாராது நேர்ந்த இந்த சந்திப்பினால் அவனிடம் ஒருவகை வெறுப்புக் கொண்டேன். அது எனக்கு உலகமே வெறுப்பாயிற்று.

அவன் என்னை விட்டு போய்விட்டான் இனிமேல் திரும்ப வரமாட்டான்.

அவனிடமிருந்து நான் இதை எதிர்பார்க்கவில்லை.

இந்த எண்ணம் தோன்ற.. தோன்ற.. என் வாழ்வில் ஏதோ இடி விழுந்துவிட்டது. அவனுடைய நினைவுகளில் இடி, இடி பட்ட இடத்தில் அடி, இடியும் அடியும் மாறி..மாறி..பதிவு செய்துவிட்டது. கூட்டிகழித்து பார்த்தால் மாறி..மாறி..இடிதான் விழுந்துக்கொண்டிருந்தது.

இடிந்து போய் உட்கார்ந்து இருப்பது பிரயோசனமில்லை.

'அவனுடைய நினைவு இருக்க வேண்டிதான் எப்பவும் அவன் செய்ததையே நினைத்துக்கொண்டு இருந்தால் நான் எப்போது வாழ்றது?' துக்கம் வெளியேறி உட்கார்ந்திருந்த மனம் எழுந்து நிற்க முடிவு செய்தது.

இனி நடக்க வேண்டியதை சிந்திக்க வேண்டும். அடிப்பட்ட இரை பழிவாங்க துடித்தது.

இவனை போன்ற ஆண் என்ற அகம்பாவம் பிடித்த ஆண்களுக்கு புத்தி கற்பிக்க வேண்டும் என்ற எண்ணம் என் உள்ளத்தில் அழுத்தமாகப் பதிந்தது.

'நான் தான் கடைசி இரையாக இருக்க வேண்டும். இனிமேல் யாரும் சிக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட அயோக்கியனை சும்மா விடக்கூடாது' என்ற எண்ணங்கள் ஓடிக்கொண்டிருந்தது.


நான் என்ன செய்ய முடியும்? சட்டத்தின் பக்கம் போனாலும் கடைசியில் அவமானம் எனக்குதானே? பெண் ஆச்சே என்ன செய்ய முடியும்? அந்த தைரியத்தில் தானே அவன் என் வாழ்க்கையில் விளையாண்டுட்டு போய்விட்டான்.

மகாபாரதத்தில் திரௌபதி வாழ்க்கையில் விளையாட முயன்ற கீசகன் என்ற காமுகனை போல நிறைய பேர் திரையில் உலவிக்கொண்டிருக்கிறார்கள்.

இவர்களை சும்மா விடக்கூடாது?

என் மனதில் மின்னல் மாத்திரம் அடித்துக்கொண்டிருந்தது. அது நிழலாகவும் இருளாகவும் மாறினாலும் அதன் ஈர்ப்பில் அவனே ஆட்பட்டான்.

◎



# மூடநம்பிக்கைக்கான சாட்டையடி – சுந்தரிமணியனின் கடைசிப்பிறவி சிறுகதையை முன்வைத்து

சமயக்கண்ணு, மதுரை

*"கடைசிப் பிறவி" என்ற கதை, எழுதிய ஆசிரியர் சுந்தரிமணியன் அவர்கள் கதையைப் படிக்கும் அத்தனை பேர் நெஞ்சங்களிலும் அவர் அகல் விளக்காகி ஒளி விடுவார் என்பது திண்ணம்.*

தமிழ்நதி - மலரன்பன் தம்பதிகள் திருமணம் பல்வேறு தடைகளைத் தாண்டி... நடந்த திருமணம்.

தமிழ்நதியின் இருபத்தாறாம் வயதில் நடந்து முடிந்த திருமணம் அது.!!

திருமண வாழ்வில் தான் மகிழ்ச்சி அடைந்த நாட்களை விட....

மனம் கலங்கிக் கண்ணீர் சொரிந்த நாட்களே அதிகம் என்பதை அறிந்து வாசகர் உள்ளமும் வாடுகிறது.!!

ஏனெனில் மலரன்பன் நோய் மனைவியை வருத்தியது என்பதைவிட....

மூட நம்பிக்கையில் மூழ்கிய மலரன்பனின் தாய் அவனை"அங்கே கூட்டிப் போ... இங்கே கூட்டிப் போ..." மந்திரங்கள் கூறுபவரிடம் போய் மந்திரித்து வா..'தொக்கம்' என்ற மருந்து எடுத்து வா" என்று கொடுத்த அலைக்களிப்பும் தொந்தரவும் தாங்கமுடியாது இருந்து வந்தது. அப்படி ஒரு மூடநம்பிக்கை ஒட்டுமொத்த குடும்பத்தையே ஆட்டிப்படைத்த கொடுமையை ஆசிரியர் படம் பிடித்துக் காட்டுகிறார். மனம் பதறுகிறது.!!

மேலும் ஜோசியர் தன் பங்குக்கு கும்பகோணம் பக்கத்திலுள்ள கோவிலுக்குக் கூட்டிப்போய் வா என்று அறிவுரை நல்கியது புதுமை அல்ல எனினும்.... இன்னும் நாட்டில் ஜோசியர் போன்றாரால் மக்கள் மனம் மூடநம்பிக்கையில் புரையோடிப்போய்க் கிடக்கின்ற அவல நிலையையும் மற்றும் மாற்றமே காணமுடியாத சமுதாயச் சீரழிவையும் காட்சியாய்க் காணமுடிகிறது.

மணாளான் மலரன்பனின் வயிறு வலி நோய் ஆரம்ப நிலையில் கட்டுப்படுத்த முடியாது போய்விட்டது. அதற்குக் காரணம் அவனது தாயின் மூட நம்பிக்கை அறிவுரையால் தான்."தமிழ்நதி" இறை அன்பில் எப்போதும் நம்பிக்கை கொண்டவள்.... எனினும்.... மூடநம்பிக்கைக் கொள்கையில் முற்றும் ஏற்காத கருத்தைக் கொண்டவள்!!

எனினும் மாமியார் சொல்லைத் தட்ட முடியாததால்... தன் மனதை அதற்கு ஏற்ப மாற்றிக்கொண்டு.. செயல்பட்டதில் இருந்து அவள் வளர்ந்த விதமும் பெரியோர் சொல்லைத் தட்ட முடியாது அவள் துன்பப்பட்ட விதமும் நம் மனதைத் தொடுகிறது.!!

வயிறு வலி... நாளடைவில் வளர்ந்து...

மருத்துவ ஆராய்ச்சியின் போது கல்லீரலில் புற்றுநோய் என்று தெரிந்த போது...

தமிழ்நதி உள்ளம் நெருப்பில் காட்டிய வெண்ணை போல் உருகியதிலிருந்து...

கணவன் மனைவியின் உண்மைப் பந்த பாசம்

மின்னலாய் மிளிர்வதைப் பார்த்து, படிப்போர் உள்ளமும் பதை பதைப்பதை உணரமுடிகிறது..

இந்நிலையை அறிந்த...

தமிழ்நதியின் தாய்....

"தனக்குப் போட்ட எழுத்து....தன் பிள்ளைக்கும் போட்டுவிட்டதே.." என்று மனம் நொந்தது....எல்லாத் தாய்மார்களின் இதயக் குமுறலைப் படம்பிடித்துக் காட்டுவதையும் உணர்வோடு பார்க்க முடிகிறது.

"தமிழ்நதி" தன் குடும்பத்தில் உள்ள நாத்தனார் ஜெயா...மற்றும் மாமியார் போன்றோர் சூறாவளி எண்ணத்தோடு தான் ஈடு கொடுத்துப் போகமுடியாது போய்விட்டாள். நாளடைவில் தனிக்குடுத்தனத்திற்கே தள்ளப்பட்ட தமிழ்நதி தன் கணவனைத் தேற்றிட மருந்து வகையுடன்...மாறாத அன்பையும் உணவில் சேர்த்துக் கொடுத்துச் செயல்படுகிறாள்..." இது தான் 'கடைசிப் பிறவி' என்று ஜோசியர் சொன்னது எல்லாம் ஒன்றும் அறியா பாமர மக்களிடம் பிழைப்புக்காக, ஜோசியர் போன்றோரால் கட்டவிழ்த்து விடப்பட்ட புதுக்கரடி என்பது பற்றியும் அவள் நன்கு அறிந்ததை நம்மால் உளமார ஏற்றுக்கொள்ள முடிகிறது.

காலங்கள் நகர்கிறது...

கனிவுடன் கவனித்து வந்த மலரன்பனின் உடல் நலமும் உள்ள நலமும் பிரகாசிக்கிறது....

ஆரம்பத்தில் இனிமையைத் தகர்த்து அவளது வாழ்வை எட்டிக்காய் போல் மாற்றிக் கசப்பைத் தந்த அந்த வாழ்வு...இப்போது கனவைப் போல் மாற்றமாகி குதூகலம் தருகிறது.!!

அந்த மகிழ்ச்சி வாழ்வு அவர்களுக்கு ஓர் மகவை உருவாக்கி நல்ல வாரிசைத் தரப்போகிறது என்பதை இருவரும் அறிந்து இன்பத்தில் மூழ்குகின்றனர். 'கடைசிப் பிறவி' என்ற தலைப்பில் மனதில் இருந்து மாறாத பல பாத்திரங்களைப் படைத்து மனித வாழ்வின் பல எண்ணங்களை, கோணங்களை, பிரதிபலித்து... நம்மை மகிழ்வித்து...

மேலும் உலக அளவில் பாராட்டைப் பெற்ற உன்னத ஆசிரியர் சுந்தரிமணியன் அவர்கள் மேலும் மேலும் பல கதைகள் எழுதி எல்லோர் மனதையும் நாளும் ஈர்க்க வேண்டும்.

(கடைசிப்பிறவி என்ற சிறுகதை சுந்தரிமணியனால் உலக முத்தமிழ் மாநாட்டின் ஆண்டு விழா மலருக்காக எழுதப்பட்டது)



ஏ எம் கஸ்புள்ளா

## என் தலைவலி கூடும்

நா கீழிருந்து
மேல் நோக்கி செல்கையில்
உதடுகள் இசைந்து கொடுக்கிறது

வெட்கம் உச்சந்தலையிலிருந்து
காலுக்காகி தரையில் கோலமிடுகிறது.

நகம் கடித்தும்
நிலம் பார்த்தும்

அவளும் ஏதோ
சொல்ல வருகிறாள்
என்னிடம் அல்ல
எழுதிய கவிதையில்

வாசித்தலில்
தடுமாறி நிற்கிறேன்

இடையில்
விடப்பட்ட எழுத்துக்களை
பூரணப் படுத்த
முடியாமல்

க. புனிதன்

## அன்பு தியானம்

சித்த வைத்தியம்
தெரிந்தவராய் இருந்திருந்தால்
சித்தராக மட்டும் இருந்திருப்பார்
அப்பம் திராட்சை ரசம்
தந்தவராய் இருந்திருந்தால்
அதிசயமானவராய் மட்டும்
இருந்திருப்பார்
வாடிய பயிரை கண்ட போது
வாடியவராய் இருந்தால்
பசிப் பிணி போக்குவராய் மட்டும்
இருந்திருப்பார்
என்றென்றும் அன்பு
நிறைந்தவராய்
மட்டும் இருக்கிறார் புத்தர்.



அன்புச்செல்வி சுப்புராஜூ

## மனமும்... புத்தியும்

பொறுமை... பொறுமை... பொறுமை
என்று தொடர்ந்து உச்சரித்துக் கொண்டே
இருக்கிறது மனது

எந்த பொறுமையை... எங்கே தேடுகிறாய்
அகத்திலா... புறத்திலா...
கொஞ்சம் சொல்லி விட்டுத் தேடேன்
கேட்கிறது புத்தி

ச்சீ... தொல்லை தராமல் தள்ளி நில்லு
உரத்துச் சொல்லியபடியே
பொறுமை... பொறுமை... என உச்சரிப்பைத்
தொடர்கிறது மனம்

சரியான பதில் சொன்னால்
நானும் உதவுவேன் தானே...
நீயே தனித்து அல்லாடு...
கத்திய புத்தி அப்புறமாய் திரும்பிக் கொண்டது

மனதிற்கும், புத்திக்கும் நடுவே
அமைதியாய் சம்மணமிட்டு அமர்ந்து
வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது
பொறுமை

ரோஷான் ஏ.ஜிப்ரி


## இருள் விழுங்கும் பொழுது!

ஆட்டுக்கறி கனவுடன்
கைகோர்த்துக்கொண்டது
காய்கறி வகைகளும்
தங்கத்தை பார்த்து
நீ என்ன“கரட்” என்கிறது“கேரட்”
ஒரு வேளைக்காய் மூன்று வேளையும்
அலைகின்றன தினக்கூலிகளின் கால்கள்

அடைமழை வெள்ளாவி வைக்க
சாயம்போய் வயல்நிலம்
வாழ்வு ஒரு தள்ளுவண்டியில்
தள்ளாடத் தயாராகும் பின்னந்தியில்
அவர்கள் பந்தி

வாழ்வோடுசேர்ந்து வறுபட்ட
தானியத்தினதும்,
பொரித்த படையலினதும் வாடையினை
வீதியில் அலைந்து
காற்று விற்றுத் தீர்க்கிறது
பஞ்சப் பாத்திரத்தில்
இன்றின் முழுமை
சூடேறிய எண்ணையில்
குளிக்கின்றது உள்ள முதல்

விற்றுத் தீரும் என்ற நம்பிக்கையில்
விளிம்பு நிலை வாழ்வு
ஊந்தித் தள்ளினாலும்
ஓட வாய்ப்பற்று மெதுவாய்
உருள்கின்றன சக்கரங்கள்
சமாளிப்பு என்பது மட்டும்
அவர்கள் வீட்டில்
குறைவற்ற கையிருப்பாய்
கொட்டிக்கிடக்க
வழமைபோன்று
அந்தப் பொழுது மெல்ல,மெல்ல
இருளுக்குள் இறங்குகிறது!



# என்னை விட்டுப் போகாதே...

தி.வள்ளி, திருநெல்வேலி.

நடுநிசி இரவு கனத்த இருளைப் போத்தியிருந்தது.என் எதிரே அந்த உருவம் தலை முதல் கால் வரை வெள்ளை நிற ஆடையை போத்திக்கொண்டு... தொட்டுவிடும் தூரத்தில்.. நான் அதை நோக்கி செல்லச் செல்ல என்னை விட்டு விலகி நடக்கிறது. நான் ஓட...எனக்கு முன்னே, என்னை விட வேகமாக ஓடுகிறது. இதோ தொட்டு விடலாம் என்று நினைக்கும் போது ரயில்வே கேட் குறுக்கிடுகிறது. ரயில்வே கேட் அந்தப்புறம் அந்த உருவமும் இந்தப்புறம் நானும்.... நடுவே ஓடும் ரயில்... ரயில் போன பிறகு பார்த்தால்

அந்த வெள்ளை உருவத்தை காணவில்லை..திரும்பலாம் என்று நினைக்கும்போது குபீரென்று பற்றிக் கொண்ட தீ என் கண்முன்னே சற்று தொலைவில்...அதிர்ச்சியில் வேர்த்துக் கொட்ட படக்கென எழுந்து உட்கார்ந்தேன். அவ்வளவும் கனவு. எதற்காக இந்த கனவு என்னைத் துரத்துகிறது. என்ன சொல்கிறது? குழம்பியது மனம்.. நிம்மதி தொலைந்து போயிற்று.

அம்மா... அவள் இந்த 25 ஆண்டுகளாக யார் வீட்டிற்கும் போகவேண்டும் என்று எண்ணியவளில்லை. எந்த சொந்தத்தையும் பெரிதாக நினைத்தவளுமில்லை. அவள் உலகமே நான்தான்.எனக்காக வாழ்ந்தவள்.. வாழ்கின்றவள். அப்பா இறந்த அந்த நாள் என் நினைவுக்கு வருகிறது.

அப்பாவைப் பற்றி சொல்லிக் கொள்ளும்படியாக இனிய நினைவுகள் எதுவும் மனதிலில்லை. அம்மாவும் எப்போதும் அப்பாவைப் சிலாகித்துப் பேசியதில்லை. எங்கள் உலகத்தில் எங்கள் இருவரைத் தவிர வேறு யாருக்கும் இடமுமில்லை.

எனக்கு அப்போது பத்து வயது.காலையில் வழக்கம்போல் பள்ளிக்கூடம் போனேன். ஒரு பதினோரு மணி இருக்கும் கும்பகோணம் மாமா..என் அம்மாவின் அண்ணன்.. டீச்சரிடம் வந்து ஏதோ சொல்ல, டீச்சர் என்னை ஒரு பரிதாப பார்வை பார்த்து“சுப்பிரமணி இங்க வா! நீ உங்க மாமா கூட வீட்டுக்கு போ” என்று அனுப்பி வைத்தது ஆச்சரியமாக இருந்தது.

மாமா ஒன்றுமே பேசாமல் என்னை வீட்டுக்கு அழைத்து வந்தார். அவர் கண்கள் கலங்கி இருந்தது போல தோன்றியது. வெளியே பந்தல் போடப்பட்டிருந்தது, நிறைய கூட்டம். கூடத்தின் நடுவே அப்பா நிறைய ரோஜா மாலைகளை சுமந்துகொண்டு பட்டு வேட்டியில் கிடத்தப்பட்டிருந்தார்.அம்மா பக்கத்தில் தரையில் படுத்திருக்க அவளை சுற்றி பெண்கள் எல்லோரும் பெருங்குரலில் அழுது கொண்டிருந்தனர்.

கும்பகோணம் மாமா..கிட்டா சித்தப்பா... இன்னும் ராஜாத்தி அத்தை..பாரு சித்தி..எல்லோரும் ஆளாளுக்கு பேச அம்மா மட்டும் ஒன்றும் பேசாமல் அழுது கொண்டிருந்தாள். ஏதேதோ சடங்குகள் என்னை செய்யச் சொல்ல, கடைசியில் அப்பாவை இடுகாட்டுக்கு கொண்டு போய் எரித்து விட்டு. மறுநாள் சாம்பல் கரைத்தும் ஆகிவிட்டது..

அப்பா இறந்த பதினொன்றாம் நாள் அம்மா ஒரு மாலையில் அழகாக பட்டுப் புடவையில் அலங்கரிக்கப்பட்டு,தலை நிறைய பூக்களும்,கை நிறைய வளையல்களுமாக அமர்த்தி வைக்கப்பட்ட போது என் மனது சந்தோசத்தில் துள்ளியது. அம்மாவை பார்க்க அழகாக இருந்தாள் அப்படியே ரவிவர்மா ஓவியம் போல.

என் சந்தோஷம் பத்து நிமிடம் கூட நீடிக்கவில்லை. கை வளையல்கள் உடைக்கப்பட்டு,நெற்றிப்பொட்டு கலைக்கப்பட்டு, மல்லிகைப்பூ உதிர்க்கப்பட்டு... வெள்ளைச் சேலை போர்த்தப்பட எங்கிருந்தோ ஒரு வேகம் வந்தது எனக்கு..“போங்க எல்லாரும் என் அம்மாவை விட்டு.அவ இப்படி தான் இருப்பா. பொட்டு வைக்கற அம்மா தான் எனக்கு வேணும். எங்கம்மா கலர் புடவை தான் கட்டனும்” என்று கத்தி ஓவென நான் அழ, அம்மா என்னை அணைத்துக் கொண்டாள்.

உள்ளே ஓடி போய் கதவை அடைத்துக்கொண்டவள்.. சற்று நேரம் கழித்து வெளியே வரும்போது, மெல்லிதாக ஒரு சிறிய பொட்டும்,எனக்கு பிடித்த ரோஜா வண்ண சேலையும் அணிந்து வெளியே வந்தாள்.

“என் பிள்ளை என்ன சொல்றானோ என்ன ஆசைப்படுறானோ.. அதுதான் எனக்கு வேதம். என் புருஷனுக்காக வாழ்ந்தாச்சு.. இனி என் வாழ்க்கை என் பிள்ளைக்காக தான்” என்றாள் வேகத்தோடு.

“நல்லா இருக்குதுடா நியாயம். குடும்பம் விளங்க வேணாமா? சுமங்கலி கோலம்??? புருஷன் போன பிறகு நல்லாதான் இருக்கும்” என்று அத்தை நொடித்தாள்.“ஏதோ அறியா புள்ள சொல்லுதுன்னா அதை பிடிச்சுகிட்டு.. சீவி சிங்காரிச்சுகிட்டு எந்த ஆம்பளைய மயக்க போற இனிமே..”

“அண்ணி போதும் நிறுத்துங்க.. எனக்கு உங்க யார் சகவாசமும் வேண்டாம்.. தயவுசெய்து கிளம்புங்க! என் பிள்ளையை எப்படி வளர்த்து ஆளாக்கனும்ங்கறது எனக்கு தெரியும். தயவுசெய்து நீங்க இதில் தலையிடாதீங்க”

“விருந்தாளியா வாங்க.. எத்தனை நாள் வேணாலும் தங்குங்க ஆனால் எனக்கும், என் பிள்ளைக்கும்,உங்க ஆலோசனைகள் எதுவும் வேண்டாம்“என்றாள் கறாராக..

“தாலியறுத்து காரியம் முடியல.. அதுக்குள்ள என்ன பேச்சு பேசுறா... இவளுக்கெல்லாம் இரக்கப்பட்டது தப்பு. அவ எப்படியோ அவள் வாழ்க்கையை பார்த்துட்டு போகட்டும் வாங்க போகலாம்” என்றாள் அத்தை கோபத்தோடு.

“இரு ராஜாத்தி ! அவதான் ஏதோ கோபத்திலேயும் சோகத்திலேயும் பேசுறா..அதெல்லாம் பெருசா எடுக்கக்கூடாது.. அவ என் கூட பிறந்தவ...கொஞ்சம் பொறுமையா இரு” என்று அத்தையை அடக்கியவர் தங்கையிடம்..

“என்ன செய்வதாக உத்தேசம் தனம். தனியா பெத்த புள்ளைய வச்சிகிட்டு இந்த ஊரில காலம் கழிக்க முடியாது. நீ பேசாம அங்க எங்க வீட்ல வந்து இரு“மாமா கூற.. அத்தை முறைத்தாள்.

அதற்குள் சித்தப்பா'' அவக ஜீவனத்துக்கு என்ன செய்வாக? படிக்க வைக்கிறேன்னு சொல்ற ஆளு எப்படி படிக்க வைப்பாக... வர்ற வரும்படி அம்மாவும், மகனும் சாப்பிடத் தான் காணும்..வீடு மட்டும் தான் சொந்த வீடு..?''

"ஏதோ பத்தாங்கிளாஸ் வரைக்கும் படிச்சிட்டான்னா அப்புறம் ஏதாவது ஒரு ஒர்க்க்ஷாப்பில வேலைக்கு சேத்துவிட்டுடலாம்.

ஆம்பள புள்ள தானே வேலை பாத்து அம்மாவை காப்பாத்த வேண்டியதுதான். யார் தான் எத்தனை நாள் தாங்க முடியும்?'' என்றாள் சித்தி மனசாட்சியே இல்லாமல்.

அதைக் கேட்டதும் பொங்கி எழுந்த அம்மா'' தயவுசெய்து எல்லோரும் விசேஷத்தை நல்ல படியா முடிச்சிட்டு கிளம்புங்க. உதவி வேணும்னு நான் உங்க யார் வீட்டு வாசலிலேயும் வந்து நிக்க மாட்டேன். என் பையனை எப்படி வளர்த்து ஆளாக்கனும்னு நான் முடிவு பண்ணிக்கிறேன். எங்க வாழ்க்கைய நாங்க பாத்துக்கிறோம். நான் உங்க யார்கிட்டயும் உதவி கேட்கல" என்றாள் கறாராக.

,அத்தையும், சித்தியும், மற்ற உறவுக்காரப் பெண்களும் கூடி அம்மாவை கிழி கிழி என்று கிழித்தார்கள். வாயில் வராத வார்த்தை எல்லாம் பேசினார்கள்..அம்மா எவ்வளவு வேதனைப்பட்டு இருப்பாள்.ஆனால் அவள் முற்றிலும் வைராக்கிய பெண்மணியாக மாறி விட்டாள். கண்களில் ஒரு சொட்டு கண்ணீர் கூட வரவில்லை.

உறவுகள் எல்லாம் போய்விட, எங்கள் வாழ்க்கை ஒரு நிம்மதியான உலகத்திற்கு வந்தது. அளவான தேவை.. தேவைக்கேற்ற பணம்.. நிம்மதியான வாழ்க்கை.

என் சந்தோஷத்திற்காக சின்ன பொட்டு வைத்து, பூப்போட்ட புடவை கட்டும் போது அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் பேசத்தான் செய்தார்கள். ஆனால் அவளுக்கு என் சந்தோஷமே பிரதானமாக இருந்ததால், எதையும் பொருட்படுத்தவில்லை.

அப்பாவுடைய பென்ஷன் பணம்.. தாத்தா கொடுத்த சிறிதளவு சொத்து.. எங்கள் இருவர் தேவைக்கு போதுமானதாக இருந்தது.அதுபோக அம்மா தன்னால் இயன்ற வேலைகள் செய்வாள். வத்தல், வடகம், தயாரிப்பது.. பொடிகள் தயாரிப்பது என்று வீட்டிலிருந்தே செய்யக்கூடிய வேலைகளைச் செய்து அக்கம் பக்கத்தில் விற்பனை செய்து சிறிது பொருளீட்டி வந்தாள்.

எவ்வளவு சிரமப் பட்ட காலத்திலும் மாமா வீட்டிற்கு... சித்தப்பா வீட்டிற்கு அவள் போகவேண்டும் என்று நினைக்கவே இல்லை.எப்போதாவது மாமா, அத்தை, சித்தப்பா,சித்தி யாராவது வந்தால் தக்கபடி உபசரித்து அனுப்பி விடுவாள். எதையும் மனதில் வைத்துக்கொள்ள மாட்டாள்.

நான் கேட்பதை கொடுப்பவள்...என் மேல் அன்பை பொழிபவள்.. படிப்பு விஷயத்தில் மட்டும் கறாராக இருந்தாள்.நான் பத்தாவது எட்டும்போது"அம்மா சித்தி சொன்னது இன்னும் என் மனசுல நிக்குது நான் வேணா வேலைக்கு போகட்டா... நீயேம்மா கஷ்டப்படுற"

அவ்வளவுதான் என் அம்மா கொதித்துப் போனாள்.'' நான் இதுக்காகவா எவ்வளவு பாடுபட்டு உறவுகளையெல்லாம் எதிர்த்து கொண்டு உன்ன படிக்க வைக்கிறேன். நீ படிச்சு காலேஜ் போகனும் அதுவும் மெடிக்கல் காலேஜ்'' என்றாள்.

எனக்கு தூக்கிவாரிபோட்டது'' அம்மா மெடிக்கல் காலேஜ்ல படிக்கிறதுக்கு அஞ்சு வருஷம் பீஸ் கட்டணும். நம்மால முடியுமா..''

"எத்தனை வருஷம் ஆனாலும் சரி! நீ படி.. நான் உன்னை படிக்க வைக்கிறேன்'' என்றாள் வைராக்கியத்தோடு.

"அம்மா நான் வேலைக்குப் போய்க் கொண்டே மாலை நேர வகுப்பில் சேர்ந்து படிக்கிறேன்'' என்று சொன்னதற்கு முடியவே முடியாது என்று சாதித்து விட்டாள்.

அம்மாவின் கனவை புரிந்து கொண்டு, நானும் நன்றாக படித்து நிறைய மார்க் வாங்கி, மெடிக்கல் காலேஜில் சேர்ந்தேன்..என்னுடைய ஒரு வருஷ பரிட்சைக்கு அப்பா சாப்பிட்ட வெள்ளித் தட்டை சத்தமில்லாமல் விற்று பீசை கட்டினாள்.ஒரு வருஷம் அவள் கழுத்தில் போட்டிருந்த சங்கிலி அடகுக் கடைக்குப் போனது. நான் இதை தெரிந்ததாகக் காட்டிக் கொண்டால் அவள் வருத்தப்படுவாள் என்று நானும் தெரியாதது போல் இருந்து விடுவேன்.

படித்து முடித்தேன். நான் இன்று ஒரு மருத்துவர்.

கல்லூரியில் எனக்கு புரபசராக இருந்த சீப் டாக்டர் என் குடும்ப நிலை பற்றி தெரியும் என்பதால் எனக்கு ஒரு நல்ல வேலை பெரிய மருத்துவமனையில் வாங்கிக் கொடுத்தார். அவர் தொடங்கி வைத்த ஆரம்பத்தை நான் பிடித்துக் கொண்டு மேலே வந்து இன்று இந்த நகரின் ஒரு பிரபலமான மருத்துவர். நல்ல பேரும் புகழும் வர அத்துடன் பணமும் வசதியும் வந்தது.

என்னுடைய எண்ணமே அம்மாவை நன்றாக வைத்துக்கொள்ள வேண்டும். அம்மாவை நல்ல வீட்டில் வசதியாக வாழ வைக்க வேண்டும் என்று

நினைத்ததால் இந்தப் பெரிய வீட்டை வாங்கினேன். அவளுடைய தேவையை கவனித்துக்கொள்ள தனியான ஒரு ஆளை நியமித்தேன். வயதின் காரணமாக அம்மாவால் முன்னைப் போல் முடியவில்லை.

"சீக்கிரம் கல்யாணம் பண்ணிக்க ராஜா" என்று வழக்கமான அம்மாக்களின் அரிப்பை இவளும் அரிக்க ஆரம்பித்தாள்.

"வேணாம்மா நமக்கு நடுவே எந்த பெண்ணுமே வேண்டாம். நம்முடைய வாழ்க்கைல நாம ரெண்டு பேர் மட்டுமே" என்று மறுத்து விடுவேன்..

வருகிற எந்தப் பெண்ணும் என் அம்மாவை கவனிப்பாளா என்பது சந்தேகமே. எனக்காக வாழும் என் அம்மா... அவளுக்காக நான் வாழ்வேன்... என்று முடிவாகச் சொல்லி விட்டேன்.

"அப்ப நான் இருக்கிற வரைக்கும் நீ கல்யாணம் பண்ணிக்க மாட்டே அப்படித்தானே?" என்றாள் அம்மா விளையாட்டாக.

ஒரு மெடிக்கல் கான்பிரன்ஸிற்காக டெல்லி போக வேண்டியதிருந்தது. ஏனோ மனம் சஞ்சலமாக இருந்தது அம்மாவிடம் சொல்ல..

"தம்பி நீ போயிட்டு வா! நான் அந்த நாலு நாள்ல மாமா வீட்டுக்கும்...சித்தப்பா வீட்டுக்கும் ஒரு தடவை போய் பாத்துட்டு வந்திடறேன்.எனக்கு முன்ன மாதிரி இல்ல.உடம்பு தளருது" என்று சொன்னாள். அதுவே எனக்கு மிகப்பெரிய ஆச்சரியமாக இருந்தது. இத்தனை நாட்களாக யார் வீட்டுக்கும் போக கூடாது என்று வைராக்கியமாக இருந்தவள் எல்லோரையும் பார்க்க விரும்புகிறாள்.

"யாரையும் போய்ப் பார்க்கத் தேவையில்லை" என்று கடுமையாக கூற நினைத்தவன்... மனதை மாற்றிக்கொண்டு"சரிமா போய்ட்டு வாங்க.. நான் வர ஒரு வாரம் ஆகும். அதற்குள் நீங்கள் எல்லா வீட்டுக்கும் போயிட்டு வந்துடுங்க. நம்ம கார்லேயே போங்க"

"சரி" என்று தலையாட்டினாள் அம்மா. அருகில் வந்து என் தலை கோதி விட்டு உச்சி வகிட்டில் முத்தமிட்டாள். கண்கள் கலங்கினால் போல இருந்தது.. ஏன் உணர்ச்சி வசப்படுகிறாள்..வயதாகும்போது வைராக்கியம் தளர்ந்து விடுகிறது என்று நினைத்துக்கொண்டேன்.

நான் போய் மூன்று நாட்கள் இருக்கும் நாலாவது நாள் மாமாவிடமிருந்து போன்..

"தம்பி நீ உடனே கிளம்பி வா! தனம் நெஞ்சு வலிக்குதுன்னு சொன்னா.. நான் பக்கத்துல இருக்குற ஆஸ்பத்திரியில சேர்த்திருக்கேன்" என்றார்.

"என்ன மாமா... என்ன ஆச்சு?" என்று பதறினேன்.

"ஹார்ட் அட்டாக் ன்னு சொல்றாங்கப்பா"

நான் உடனே பிளைட்டை பிடித்து ஓடி வந்தவன் நேராக மாமா ஊருக்கு விரைந்தேன். மாமா என்னைப் பார்த்ததும் அழுதுவிட்டார்.

"நான் தப்பு பண்ணிட்டேன்ப்பா உங்க அம்மாவை கவனிக்காமல் விட்டது தப்பு.அவ மனசு மாறி என்னை பாக்கணும்னு ஆசையோட ஓடி வரும்போதா அவளுக்கு இப்படி ஒரு நிலையா வரணும்?" வயதின் முதுமையில் மனதிலுள்ள எண்ணங்கள் மடைதிறந்த வெள்ளமாக வெளிவந்தது.

தங்கையும் அண்ணனைக் தன் இறுதிக்குள் காண வேண்டும் என்ற நினைப்பில் தான் பார்க்க வந்திருப்பாளோ என்று தோன்றியது.இவ்வளவு பாசத்தையும் மனதில் தேக்கி கொண்டு அவள் வைராக்கியமாக இருந்ததெல்லாம் எனக்காகத் தான் என்பது புரிய மனம் கனத்தது.

இருவரும் மருத்துவமனைக்கு விரைந்தோம். என்னைப் பார்க்கவே ஜீவனை கண்ணில் தேக்கி வைத்துக் கொண்டிருந்தவள், என் கையைப் பிடித்ததும்.. கண்ணில் இருந்த ஜீவன் விண்ணை நோக்கிப் பறந்தது.

கதறிதுடித்தேன். நான் மருத்துவராக இருந்தும், எத்தனையோ பேரை காப்பாற்றும் நான், என் அம்மாவை அன்று என்னால் காப்பாற்ற முடியவில்லையே...என் உலகமே அஸ்தமித்துப் போனது.

அம்மாவை அவள் சொந்த வீட்டிலிருந்து சகல மரியாதையுடன் அனுப்ப..முன்னால் போன ஆம்புலன்ஸ்க்கு பின்னாலே என் கார் செல்ல..இதோ என் முன்னே ஜீவனற்ற அவள் உடல் வெள்ளைத்துணியில் போர்த்தப்பட்டு. பின்னால் செல்லும் என்னால் அவளைப் பிடிக்க முடியவில்லை இதோ நான் கனவில் பார்த்த அதே இடம்... ரயில்வே கேட்... என் மனது திக்கென்றது.. ரயில் அந்த கேட்டை கடக்கிறது... இந்தப்பக்கம் என் கார் நிற்க...அந்தப்புறம் ஆம்புலன்சில் என் தாயை காத்திருக்க...ரயில்வே கேட்டை தாண்டி,கார் எதிரே சுடுகாடு, எரியும் பிணம்..

என் தாயின் இறுதி காலம் தான் எனக்கு கனவாய் வந்திருக்கிறது என்று அப்போது தான் புரிந்தது. இது முதலிலேயே தெரிந்திருந்தால் ஒரு நிமிடம் கூட என் தாயை விட்டு நான் பிரிந்திருக்க மாட்டேனே... இந்த ஏக்கம் இன்று வரை என் மனதை வாட்டுகிறது..

என்னுயிர் தந்தவள்..எனக்காக வாழ்ந்தவள்.. இன்னுயிர் நீத்து..இறுதியில் சாம்பலாய் என் கைகளில் தஞ்சமடைந்து விட்டாள்.அவளுடல் சாம்பலுடன் சேர்த்து என் கண்ணீரும் கடலில் கலக்கிறது.

◎

வட்டக்கச்சி வினோத்

# வாழ்க்கை ஒரு பேரூந்துப் பயணம்



எல்லோரும் பயணிக்கிறோம்
பக்கத்தில் இருப்பவர்
பயணத்தின் தன்மை தெரியாமலே

ஏறுகிறார்கள் இறங்கிறார்கள்
ஏதும் புரியாமல்
பயணம் தொடர்கிறது

சிலருக்கு இருக்கைகள் கிடைக்கிறன
சிலர் நின்றுகொண்டே பயணிக்கிறார்கள்
சிலர் பக்கததில் இருக்கும் இருக்கைகள்
காலியாகும் வரை காத்திருக்கிறார்கள்
சிலருக்கு கிடைத்த இருக்கைகள் பொதுமானதாக
இருக்கிறன
சிலருக்கு இருக்கைகள் பொதுமானதாக இல்லை
வழுக்கி விழுவதும் மீண்டும் எழுவதுமாக
பயணிக்கிறார்கள்
சிலர் பக்கத்து இருக்கையையும் அபகரித்து
இருக்கிறார்கள்
பயணம் இடைஞ்சலாகவே இருக்கிறது
மனிதர் அளவுகளை அளந்து அமைக்காத
பேரூந்து இருக்கையில் பயணிப்பது

முதியவர் நெருங்க நித்திரை நடிப்பாக
முயற்சியாளனுக்கு அதுவே ஓய்வாக

சிலருக்கு பயணத்தின் முடிவு தெளிவாகத்
தெரிகிறது
சிலரின் பயணம் தேடலாகவே தொடர்கிறது
மனிதர்கள் நிறைந்து வழிந்தாலும்
எமக்கு பொருந்தாத வேகத்தில் சென்றாலும்
யாருமே குரல் எழுப்பவில்லை
நல்லவர்களாக அமைதியாக உறைகிறார்கள்

பெண் என்பதற்காக சுரண்டுவதும்
பெண்ணாக சுரண்டுவதும்
கண்ணாலே கண்டாலும்
அமைதியாக நாங்கள் நல்லவராக
நடித்துக்கொண்டே பயணிக்க

பாதை வளைவுகள்
வாழ்க்கை முறிவுகளாக
தள்ளாட வைக்கின்றது

பயணம் முடியும் என்பதை
பகுத்தறிவு சொல்கிறது
முடியுமென தெரிந்தும்
ஆணவம் வெல்கிறது.



### ச. இராஜ்குமார்

அதிகாலை பனியில்
அரைடவுசர் அணிந்து கொண்டு
நிலத்தின் வரப்பு நோக்கி பாய்ந்தோடும்
நீரில் வரப்புகளை வேட்டி
வயலின் நடுவே வீசுகிறான் உழவன்..

வானும் முகிலும் தன்முகம் பார்க்கும் சேற்று
வயலில்
நாரை கூட்டத்தோடு சேர்ந்து வெள்ளை
கொக்குகளும்
நெளியும் புளுக்களை உண்ணும்..

ஆற்றை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கிறேன்
அம்மா சொன்ன பூளைப்பூவும்
ஓணான்கொடியும் ஆவாரம்பூவும் பறித்துவர
சொன்னால்
எந்த பூவை பறிக்க
அவரையும் துவரையும் பூத்திருக்கு
தும்பைப்பூவும் பூத்திருக்கு அங்கே பூசணிப்பூவும்
பூத்திருக்கு..

கணக்காய் கனகாம்பரமும்
கண்ணை கவரும் செங்காந்தள் பூவும் பூத்திருக்கு..

அல்லியும் மல்லியும் பூத்திருக்கு
ஆனந்த திடலிலே மனமும் திளைத்திருக்கு..


பறித்து கொண்டேன் அத்தனையுமல்ல அம்மா
சொன்னதை மட்டும் மற்றவையெல்லாம்
விட்டுவிட்டேன்
இப்போது சிரித்துக்கொண்டிருக்கின்றன
என்னைப்போலவே...!!

மலர்ந்த பூவில் தேனின் சுவை கூடும்
மகிழும் மனதில்தான் தேகம் சுகம் காணும்...!

சீ.பாஸ்கர் கவிதைகள்

# இயற்கை அன்னையின் கைகள்

ஒன்றாகவே நடந்து வீடடைந்தோம்
நானும் மழையும்
என்னை மட்டும் உள்ளே அழைத்து
தலையைத் துவட்டினாள்
வாசலில் காத்துக்கிடந்த அம்மா
கோபித்துக் கொண்டு வெளியிலேயே
நின்றிருந்த மழைக்கு ஆறுதல் சொல்லி
அரவணைக்கிறது காற்றில் அசைந்தாடும்
மரத்தின் கிளைகள்



# நெடும்பயணம்

எவ்வளவு நெடுந்தூரம்
அவள் கண்களில் விழுந்து
இதயம் பிடித்து
கன்னம் தாண்டி
உதடு வந்து சேர்வதற்குள்
போதும் போதும்
என்றாகி விடுகிறது
காதல் கரைசல்

கரைந்து போனது
என் 24 காரட் தங்க இதயம்
அவளின்
ராஜதிராவக கண்களில்
விழுந்தவுடன்
கண்ணீர் சிந்தும் செடிகள்
சாலை ஓரத்தில்
செடிகளை விற்கும் சிறுமி
தாகம் எடுத்து தண்ணீர்
குடிக்கும் போதெல்லாம்
வாடி இருக்கும் செடிகள் மீதும்
தெளிக்கிறாள்
பேரம்பேசி வாங்கியவரிடம்
செடிகளைக் கொடுக்கும்போது
அவளின் கைகளில் விழுகிறது
தண்ணீர் துளிகள்
யாருக்குத் தெரியும்
அந்தத் துளிகள் பிரிந்துசெல்லும்
ஏக்கத்தில் செடிகள் சிந்தும்
கண்ணீராகவும் இருக்கலாம்

# சிற்பம்

வனிதா ராமகிருஷ்ணன், மலேசியா



தொட்டுப் பார்த்து ரசித்தாள்; பூரித்தாள்; புன்னகைத்தாள். இனம் புரியா இன்பத்தை உணர்ந்தாள். விரல்களால் தொடத் தொட கண்கள் மெல்ல கரைந்தன. அந்த ஸ்பரிசம் உள்ளத்தில் சிலிர்ப்பைத் தந்தது. மனம் பழைய நினைவுகளை வருடியது.

“இந்து.. இன்றைக்கும் ஸ்கூலுக்கு லீவா?” அப்பா வசை பாட“அவதான் ரெண்டு நாளா தலை வலிக்கிதுனு அழறால.. கொஞ்சம் க்ளினிக்ல போய் பார்த்தாதான் என்ன?” அம்மா எதிர்ப்பாட்டுப் பாடினாள்.“சரி கிளம்புங்க, என்னனு பார்த்திட்டு வந்திடுவோம்”.. மகிழுந்து வழக்கமாகச் செல்லும் சிகிச்சையகத்தை நோக்கிச் சென்றது.

கண்களில் ஈரமும் தலையில் பாரமும், அவளது விழியில் ஏற்பட்டத் தொற்றுக்கான அறிகுறியாகும். மருந்து மாத்திரைகளையும், சொட்டு மருந்து புட்டிகளையும் அள்ளித் தந்ததோடு, மூக்குக் கண்ணாடியையும் போடச் சொல்லி பரிந்துரையும் வழங்கப்பட்டது. பத்து வயதில் இந்துமதியின் மங்கலான பார்வையைச் சரி செய்தது மூக்குக் கண்ணாடி.

“எந்நேரமும் வயலின் வாசிக்கிறதும், கதை படிக்கிறதும் போதுமாம்மா? பள்ளிப் பாடமெல்லாம் படிக்க மாட்டியாம்மா நீ?” பரிகாசம் செய்தார் அப்பா.“பாடமெல்லாம் முடிச்சுட்டேன் அப்பா.. இந்தக் கதை நல்லா இருக்கு. படிச்சு முடிச்சிட்டு, உங்களுக்குக் கதை சொல்றேன்” என்று செல்லமாய் அப்பாவைப் பார்த்துப் புன்னகைத்து விட்டு, மீண்டும் கதையிலுள்ள கதாபாத்திரங்களோடு கை கோர்க்கலானாள்.

பதின்ம வயது வரை புதிய புதிய கதைப் புத்தகங்களோடும், அதில் வரும் கதாப்பாத்திரங்களோடும் பயணித்தாள் இந்துமதி. குழந்தைகளின் சுட்டிக் கதைகளில் தொடங்கி, புராணக் கதைகள் வரை அவற்றில் வரும்

சூழல்களையும் பாத்திரங்களையும் ரசிக்க, ஆற்றலில் அவளோடு வளர்ந்து வந்த மூக்குக் கண்ணாடிகள் அவளுக்குத் துணை புரிந்தன.

தனது இருபத்தொன்றாம் வயது பிறந்தநாளன்று, ஏற்பட்ட அசம்பாவிதம் இந்துமதியை நிற்கதியாக்கியது. அவளது கல்லூரியை நோக்கி வந்து கொண்டிருந்த அப்பாவின் மகிழுந்து விபத்துக்குள்ளாகி, அவளை அனாதையாக்கியது. சற்றும் எதிர்பாரா அவ்விபத்து, அவளை எளிதாக இயல்பு வாழ்வுக்குத் திரும்ப விடவில்லை. அதே சமயம், நீண்ட நாளாக வதைத்து வந்த கண்ணில் ஏற்பட்டிருந்த தொற்று, அவளை மேலும் பாதித்தது. பெற்றோரின் இழப்பும், போதுமான பணமில்லா தவிப்பும் சற்று மங்கலான பார்வையை அவளுக்குப் பழக்கியது.

நிலை குலைந்து நின்றவளின் வாழ்வில் நிர்மலன் துணையாய் நின்றான். கல்லூரி நட்பு காதலாய் மலர்ந்து, எளிமையான திருமணத்தில் பூர்த்தியானது. இன்பமான இல்லற வாழ்வில் இரண்டு மொட்டுகள் பூத்தன. நிர்மலன் நல்ல கணவனாகவும், தகப்பனாகவும் இருந்தான். பார்வை குறைபாட்டை உணரா வண்ணம் நிர்மலனின் அரவணைப்பும் பிள்ளைகளின் அன்பும் அவளது வாழ்வில் ஒளி வீசின.

கண்களில் தொற்று தொடர்கதையாகவே, நிர்மலன் அவளுக்குத் பெருந்துணையாக இருந்தான். பல மூக்குக் கண்ணாடிகள் மாற்றிப் பார்த்தும் அவை அவளது பார்வையைச் சீர் படுத்தியதாகத் தெரியவில்லை. சில சமயங்களில் மூக்குக் கண்ணாடிகள் அணியாமலேயே இந்துமதி தட்டுத் தடுமாறி அன்றாட வேலைகளைச் செய்யப் பழகிக் கொண்டாள். வாசித்தலையும், இரவில் வாகனம் ஓட்டுதலையும் தவிர்த்து வந்தாள். வாழ்வில் பல காட்சிகளையும், கணவனோடு, பிள்ளைகளின் தோற்றத்தையும் அவளது மூளை மங்கலாகவே பதிவு செய்திருந்தது.

இதற்கிடையில் நிர்மலனுக்குப் பணியிடத்தில் மாற்றம் ஏற்பட்டது. பதவியைத் தக்க வைத்துக் கொள்ளும் நிலையில், நிர்மலன் புதிய வேலையிடத்தில் தங்கிப் பணி புரியும் சூழ்நிலை ஏற்பட்டது. இந்துமதி சற்றே சுணங்கினாலும், விரைவில் மீண்டும் மாற்றம் கேட்டுக் கொண்டு திரும்பி வர ஏற்பாடு செய்யும் எண்ணத்தில் புறப்பட்ட கணவனை வழியனுப்பினாள். தனது மகனையும் மகளையும் கவனித்துக் கொண்டு,சில பிள்ளைகளுக்கு வயலின் வகுப்பு நடத்தி நாட்களை நகர்த்தினாள் இந்துமதி.

“அம்மா! பாலைக் கிண்ணத்தில ஊற்றாம கீழே ஊத்துறீங்க” அறியா குழந்தை சொல்லிச் சிரித்தது. சில நாட்களாய், இந்துமதி தனது பார்வை மோசமடைந்து வருவதை உணர்ந்தாள். நடக்கும்போது பொருட்களின் மீது மோதிக் கொண்டும், தூரத்தை ஊகிக்க முடியாமலும், இரவில் வெளிச்சத்தைத் தாங்கிக் கொள்ள முடியாமலும் பல இன்னல்களைச் சந்தித்தாள்; தவித்தாள், புதிய இடத்தில் வேலை பளு அதிகமானதால், தொலைப்பேசி அழைப்புகளைக் கூட அடிக்கடி தவறவிடும் நிர்மலனை வரச் சொல்லி, அவனுக்கு மேலும் அலைச்சலையும் துன்பத்தையும் தர எண்ணவில்லை.

தனது ஏழு வயது மகன் கைப்பிடித்து வழிகாட்ட, தோழி ஒருத்தியின் ஆலோசனைப்படி, கண் சிகிச்சை நிபுணரின் சிகிச்சையகத்தை வந்தடைந்தாள் இந்துமதி. அங்கு, அவள் ‘கெரத்தோகோனஸ்’ கண்டிருப்பதைக் கண்டறிந்தனர். அக்கணம் அவளது ஆசைகளும் கனவுகளும் சிதைந்ததோடு, எதிர்காலமே இருண்டு போனதாய்த் தெரிந்தது. தனக்கேதும் ஏற்பட்டு விடுமோ என்ற எண்ணத்தை விட, இதனால் நிர்மலனும் குழந்தைகளும் தவிக்க நேரிடுமோ என்ற கவலையே மேலிட்டது.

சில நாட்களிலேயே அவளது வேதனைக்கு நிவாரணம் அளிக்கும் முயற்சியாக, கெரத்தோகோனஸால் ஏற்பட்ட பார்வை குறைப்பாட்டைச் சீர் செய்ய, மூக்குக் கண்ணாடிக்குப் பதிலாக, விழி வெண்படலத்தில் தொடுவில்லை அணிவிக்கப்பட்டது. அத்தருணம் அவள் அடைந்த பேரின்பத்தை வார்த்தைகளில் விளக்கி விட முடியாது.

இந்துமதி மகிழ்ச்சியின் உச்சத்தில் தவழ்ந்தாள். பார்ப்பவையாவும் ‘ஹெச்டி’ தொலைக்காட்சியில் தெரிவது போல இருந்தது. தன்னைச் சூழ்ந்திருந்த பொருட்களும் மனிதர்களும் மிகத் தெளிவாகக் காட்சியளித்தனர். தன் மகனையும் மகளையும் புதிதாய்க் காண்பது போல் அள்ளி அணைத்துக் கொண்டாள். முதன்முறை தான் பெற்ற செல்வங்களின் அழகினை ரசித்துருகினாள்.

மறுநாள் விடுமுறையில் வீடு திரும்பும் நிர்மலனை எதிர்ப்பார்த்துக் காத்திருந்தாள். மகிழ்ச்சியில் அன்றிரவு அவளை உறக்கம் தழுவ மறுத்தது. தொலைப்பேசியில் விடயத்தைக் கூறாமல், நேரில் வந்ததும் இன்ப அதிர்ச்சி தர எண்ணம் கொண்டிருந்தாள். தனது எல்லா சுக துக்கங்களிலும் பங்கு கொள்ளும் நிர்மலன், நிச்சயம் மட்டற்ற மகிழ்ச்சி அடைவான் என்பதனை அவள் அறிவாள்.

காலையிலிருந்து எதிர்ப்பார்த்திருந்த நிர்மலன், மாலையில் வீடு திரும்பினான். முதன்முறை தெளிவான பார்வையில் தன் கணவனைப் பார்த்து மகிழ்ந்ததோடு, அவனை அன்போடு கட்டிக் கொண்டாள். மகிழ்ச்சியைப் பகிர எத்தணித்தவளைச் சற்று அசௌகரியமாக உணர்ந்தவனாய், அவள் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டான்.

“வேல முடிஞ்சு நேரே வரேன், கச கசன்னு இருக்கு, குளிச்சிட்டு வறேன், சாப்பிட வெளிய போகலாம்” எனப் பேசிக் கொண்டே அறைக்குள் நுழைந்தான் நிர்மலன். இந்துமதிக்கு அவன் குழந்தைகளிடம் கூட ஒரு வார்த்தை பேசாதது சற்று ஏமாற்றத்தைத் தந்தது. மேசையில் தான் சமைத்த உணவுகளை எடுத்து வைத்தாள்.

“இந்து, இது நான் வேலைக்கு இங்கேயே வர ட்ரான்ஸ்வர் கேட்டிருக்கிற ஃபோர்ம், உன்னுடைய கண் பிரச்சனைகள சொல்லி ட்ரான்ஸ்வர் கேட்கிறதால உன் கையெழுத்து வேணும்”.. மேசையில் வைத்த பாரத்தைக் கையிலெடுத்தாள் இந்துமதி. இதயம் பட படவென அடிக்க, தலை சுற்றியது அவளுக்கு!

“சரி, சாப்பாடு வித விதம்மா இருக்கு, எங்க வாங்கினே இந்து?” தட்டைக் கையிலேந்தி மேசையில் அமர்ந்தான் நிர்மலன். அதிர்ச்சியை மறைத்துக் கொண்டு,“சமைச்சேன் நிர்மலன்” என்றாள் சன்னமாக.“ஹேய்! தெட்ஸ் நைஸ்.. ஆனா உனக்குத் தான் கண்ணு தெரியாதே, ஏன் கஷ்டப்படுறே இந்து? கடையில போய் சாப்பிட்டிருக்கலாம்” என்ற அவனது அக்கறை முதன்முறையாக அவளைக் காயப்படுத்தியது.

அன்று இரவு வரை எல்லாமே நாடகமாக அரங்கேறியது. அவளையும் பிள்ளைகளையும் அவன் அரவணைக்காமலிருந்தது, இந்துமதிக்கு வியப்பையும் வலியையும் தந்தது. எல்லோரும் படுக்கைக்குச் சென்ற பிறகு பாரத்தைக் கையிலெடுத்தாள்; படித்தாள். இனி எல்லாம் இனிமை என்று இருந்தவளின் கண்கள் கலங்கின.

விவாகரத்து! யாருக்கும் கேட்காமல் அழுதாள். ஒரே மாதத்தில் அத்தனை அன்பும் மறந்து போய்விடுமா? அறைக்குள் நிர்மலனின் திறன்பேசி ஒலித்தது. அவன் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்க, அவளது கேள்விகளுக்கு அதில் பதில் கிடைத்தது,“அந்தக் குருடியிடமிருந்து இந்த முறையாவது சைன் வாங்கிடுவீங்கல்ல?.. நாளைக்கு வந்திடுங்க, ஐ மிஸ் யூ” என்ற புலனத் தகவல், இந்துமதியின் இருதயம் ஒரு கணம் நின்றிடும் போல் இருந்தது; இடிந்து போய் அமர்ந்தாள். மேலும் படித்ததில், வேலையிட மாற்றமே, இந்த உறவுக்காக உருவாக்கப்பட்ட நாடகம் எனப் புரிந்து கொண்டாள்.

அதிகாலையில், திறன்பேசி ஒலித்தது. நிர்மலன் துணிமணிகளை எடுத்து வைத்தான்.“அதற்குள்ள கிளம்புறீங்களா?” இந்துமதி அதிசயித்தாள். பெருமூச்சிறைந்து“ஆமாம் இந்து, பாஸ் அழைச்சாரு, அவசர வேலை இருக்கு, அந்த ஃபோர்ம் சைன் பன்னிட்டியா?” என முகத்தில் எந்த வித சலனமும் இல்லாமல் கேட்டான் நிர்மலன். அவனது அவசரத்தைப் புரிந்து கொண்டவள், பாரத்தில் கையெழுத்திட்டு அவனை வழியனுப்பினாள். சுதந்திரப் பறவையாய்ப் பறந்தான் நிர்மலன்.

ஏமாற்றங்களை மீண்டும் மீண்டும் எண்ணிப் பார்த்து அழுது முடித்தாள். விவாகரத்து நடைமுறைகளுக்கு மனதைத் தயார் படுத்திக் கொண்டாள். எதிர்நீச்சல் போடுவதொன்றும் அவளுக்குப் புதிதல்லவே! வயலினுடன் கதைப் புத்தகங்களை மீண்டும் கையிலெடுத்தாள். நிறைய வாசிக்கலானாள். சில கதைகளை எழுதி இதழ்களுக்கு அனுப்பினாள். வருமானம் ஈட்டுவதோடு, பிள்ளைகளின் வளர்ச்சியிலும், கல்வியிலும் கவனம் செலுத்தினாள்.

வயலின் வகுப்புகள், வருமானம், கதைகள், கண் சிகிச்சை, என ஆண்டுகள் கடந்தோட, பிள்ளைகள் பள்ளிப் படிப்பை முடித்து மேற்கல்விக்குத் தயாராகினர். தனிமை மெல்ல அவளைத் தீண்ட, கதைப்புத்தகம் வெளியிடும் ஆசை துளிர் விட்டது. அதற்கான முயற்சியில் ஈடுபட்டாள். தொடர்ந்து வாசிக்கவும் எழுதவும் துவங்கியபோது, மீண்டுமொரு சோதனை அவளுக்காகக் காத்திருந்தது.

அவள் பயன்படுத்தி வந்த தொடு வில்லை விழி படலத்தில் உறுத்துதலை ஏற்படுத்தியது. இது வலியையும் வேதனையையும் தர, மருத்துவ நிபுணர் ‘பிக்கிபேக்கிங்’ முறை வழி இரு கண்களிலும் இரு தொடு வில்லையைப் பொருத்தினார். இருப்பினும் அது தற்காலிகத் தீர்வாகவே அமைந்தது. நாளடைவில் அவளது கண்கள் தொடு வில்லை பயன்பாட்டை ஏற்க மறுத்தன.

இந்துமதியின் கண்கள் மெல்ல இருளத் தொடங்கின. ஒரு குகையில் இருப்பது போன்ற முழுமையான இருளைப் பார்க்கத் தொடங்கினாள். புத்தகம் வெளியிடும் ஆசை காற்றில் கரைந்தது. முதுமையும், பக்குவமும் வழிகாட்ட பிள்ளைகளின் துணையுடன், தன்னைப் பார்வையற்றோர் சங்கத்தில் பதிந்து கொண்டாள். சங்கத்தினர் ஆலோசனைப்படி தனக்கு வழிகாட்ட, தடியைக் கையிலெடுத்தாள்.

வாசிப்பின்பால் கொண்ட ஈடுபாட்டால் புற்றெழுத்து என்கின்ற ‘ப்ரெய்ல்’ எழுத்துகளைக் கற்றுக் கொண்டாள். எழுத்துகளைத் தடவிப் பார்த்து, மீண்டும் வாசிக்கத் தொடங்கினாள். இளமையிலேயே பார்வையை இழந்த லூயி ப்ரெய்ல் தனது 15வது வயதில் பார்வையற்றவர்கள் தடவிப் பார்த்துப் படிக்க ஏற்ற வகையில் ப்ரெய்ல் எழுத்துகளை அறிமுகப்படுத்தியதைப் படித்துப் பிரமித்தாள்.

காலம் தன்னைச் செதுக்கியதில், சிதறி விழும் கற்களாய் இல்லாமல், சிற்பமானாள். தன் கனவை மீண்டும் உயிர்ப்பிக்க, இன்று புற்றெழுத்துகளிலான தனது கதைப் புத்தகத்தை வெளியிடுகிறாள் இந்துமதி.

◎

இரா.தனவந்தன், மஸ்கேலியா

# சித்தாவும் மகளும்....

நாய் பொம்மை
சாம்பல் நிறத்தில்
குட்டையான வாலோடு
மினுங்கும் கண்களுடன்...
கடைவீதியில் வாங்கிய
நாய் பொம்மையின ; கழுத்தை
இறுக்கிப் பிடித்தும்
கடித்தும்
வாலைபிடித்துத் ; தூக்கியெறிந்தும்
குழந்தை விளையாடியதைக் கண்டு பதறி
கயிற்றை அறுத்து
தலைத்தெறிக்க ஓடிய
என் வீட்டு நாய்
இன்னமும் வீடு திரும்பவில்லை.!
அவளுடன் நான்
சென்ற நாள்
அச்சத்தின் மீதூரும் பாம்புகள்
தென்னை மரத்திலேறி
இளநீரைத் துளையிட்டுக் குடிக்கும்
மரநாய்களுக்கு அச்சமூட்ட
மரத்தின் மீது வரையப்பட்டிருக்கும்
கருநிறப் பாம்புகள்
ரொம்ப வருடங்களாக
ஊர்ந்து செல்கின்றன
மரநாய்களின் அச்சத்தின் மீது
அதைப் பார்த்து
பதைத்தாள்
மகள்....



தொட்டுத் தூக்கிச் சொல்லி
பிணங்கி அழுகிறாள்.
தொட்டுத் தூக்கி
எழுப்பும் சில விநோத ஒலிகளை
மந்திரமெனக் கேட்டுச் சிரிக்கிறாள்,
ஞானி போல்..
அன்றலர்ந்த மலர் போல்,
அழுகையைச் சொற்களாக்கி
தனக்கான காணிக்கைகளைக் கேட்டுப் பெறும்
இந்தத் தெய்வம்
மனிதர்களைப் பொம்மையாக்கி விளையாட
ஆரம்பித்திடுகிறது.
பொம்மைகள் மீது இதற்கின்னும்
ஆர்வம் வரவில்லை.
எல்லா சுவரொட்டிகளும்
காணாமல்போனவர்கள் பற்றியதுதான..
தவிர
தொலைத்தவர்களை காணவில்லை.
காணாமல்போன தேதி அன்று
தொலைத்தவர்கள் என்ன
செய்துகொண்டிருந்தார்கள்?
என்ற எண்ணம்
தோன்றினாலும்.
மகளுக்காய்
நானும் மௌனம் காத்தேன்.
சித்தாவாய் நானும்
மகளுடன்
செல்லும் நாளும்..
பல விநோதங்களை
அங்கலாய்த்துத் தீர்த்தோம்.



மெய்யன் நடராஜ்

# கண்மறையும் மனிதர்கள்

காலியான பாத்திரத்தில் காற்றிருக்கும் மறவாதே!
காதலென்று வீசும்புயல் காற்றினையே எண்ணாதே!
போலியான புன்னகையைப் புனிதமென்று நம்பாதே!
போக்கிலியின் வாக்குதனை போதனையாய்க் கொள்ளாதே!
வேலியிங்கு பயிர்மேயும் விசித்திரத்தை மெச்சாதே!
வேர்முறித்து மரம்ரசிக்கும் விலங்கினத்தை ஒட்டாதே!
தாலியொன்று போடுமுன்பு தாரமென்று ஆக்காதே!
தாய்மொழியைக் கொன்றழித்துத் தத்துவமும் பேசாதே!

கூலியின்றி வேலைசெய்து குடும்பமது நடத்தாதே!
கூட்டாளி யாகிடினும் கொள்கைவிட்டுக் கொடுக்காதே!
சோலிபெற்று விட்டபின்பு சொதப்புதலும் செய்யாதே!
சொத்துசுகம் சேகரித்தே சுகமிழந்து நிற்காதே!
காலிலாத மனிதர்முன் கலைநடன மாடாதே!
காசிலாத நேரத்திலே கடன்வாங்கித் தொலைக்காதே!
நூலிலாமல் நெசவுசெயும் நோக்கம்தான் வைக்காதே!
நூறிலாமல் ஆயிரத்தில் நோட்டமுமே விடாதே!
உழைத்திடாமல் வாழுமாசை உள்ளந்தனில் வைக்காதே!
உழைப்பவர்தம் வியர்வையினை உதாசீனப் படுத்தாதே!
அழைப்பிலாமல் பந்தியிலே அமர்ந்திருந்து உண்ணாதே!
அழகுக்காக மணந்துவிட்டு அவசரமாய் புலம்பாதே!
பிழைதிருத்திக் கொண்டிடாதப் பிழைமீண்டும் செய்யாதே!
பிழைக்கவழி இல்லையெனப் புலம்பிநிதம் தவிக்காதே!
கழைத்துளைக்குள் நுழையும்வளி கீதமாகும் அறிவாயே!
காற்றிழுத்து முடிவதகுள் கற்றுவாழு மறவாதே!
கார்முகிலை தடைசெய்யக் காடழிப்புச் செய்யாதே!
கானலிலே விதைபோட்டு காத்திருப்புக் கொள்ளாதே!
நீர்க்கரைகள் சிதைத்துவிட்டு நிலவரட்சிக் குதவாதே!
நெஞ்சமதில் பொய்நிரப்பி நேர்மையென விற்காதே!
ஊர்விழுங்கத் தவமிருக்கும் ஊழல்கை உயர்த்தாதே!
உன்வாழ்வோ உன்கையில் உணர்ந்தொழுக மறவாதே!.
தேர்தலிலே நிற்பவரை தெய்வமென்று நம்பாதே!
தெரிந்திருந்தும் வாக்களித்து தெருவினிலே நிற்காதே!
வாலிபத்தின் முறுக்கினிலே வயோதிபத்தை வதைக்காதே!
வளர்குழந்தை மனதினிலே விசவார்த்தை விதைக்காதே!
பாலிலாமல் அழுங்குழவி பார்த்திருந்து ரசிக்காதே!
பாவமெலாம் புரிந்துவிட்டு பக்தவேசம் போடாதே!
வாலிலாத குரங்கினத்தின் வடிவமாக மாறாதே!
வசதியற்றப் பெண்ணிடத்தில் வரதட்சணைக் கேட்காதே!
கோலிலாது நடக்குமட்டும் கூடவருவார் யாருமே
கொஞ்சம்நீ தளர்ந்துவிட்டால் கண்மறைவார் புரிவாயே!

# அதே சிரிப்பு...

பட்டுக்கோட்டைராஜா

இளநீர் நேற்றும் அவர் வாங்கியதைப் பார்த்தேன். முப்பது வயதிருக்கும். நல்ல நிறம்.தேஜஸான முகம். இதழ்களில் நிலைத்த புன்சிரிப்பு. தினமும் தான் ஒரு இளநீர் குடித்துவிட்டு இன்னொன்றை மட்டையுடன் சீவி வாங்கிச் செல்வார். அந்த இன்னொன்று யாருக்கு என்பதுதான் என் மனசைக் குடைகிற கேள்வி. இப்படித்தான் தேவையில்லாமல் சில சமயம் மனசு என்னை அலைக்கழிக்கும்.

`யாருக்காய் இருந்தால் உனக்கென்ன?அதைத் தெரிந்து கொண்டு உனக்கு ஆகப் போவதென்ன?' என்று பலமுறை அறிவுறுத்தியும் மனசு சமாதானம் அடையவில்லை.

அவர் பக்கத்தில் சென்று அவரையே பார்த்திருந்தேன். டெலிபதி உணர்த்தி விட்டது.

``என்ன தம்பி, என்னையே பார்க்கிறீங்க?'''-என்று அவர் கேட்டார்.

``ஐயா,என்னைத் தப்பா நினைக்காமல் நான் கேட்கிற கேள்விக்கு நீங்க உண்மையான பதில் சொல்லணும்அது எனக்கு அவசியமில்லைதான்,ஆனாலும் நீங்க சொல்லணும்''

அவர் சிரித்தார்.இப்படியும் சில பைத்தியங்கள் அலைகின்றன என்று நினைத்திருப்பார்- ``சரி கேளுங்க.'' என்றார்.

``நீங்க தினமும் ஒரு இளநீர் குடிச்சிட்டு இன்னொன்று வாங்கிட்டுப் போறீங்க இல்லையா?...அந்த இன்னொன்று யாருக்கு? உங்க மகளுக்கா-மனைவிக்கா-அம்மாவுக்கா? இதுதாங்க என் மனசைக் குடைகிற கேள்வி.... நீங்க பதில் சொல்லாமப் போய்ட்டீங்கன்னா என் தலையே வெடிச்சிரும்!''

அவர் சிரித்தார்-``எனக்கு இன்னும் திருமணமாகலை தம்பி...இது என் அம்மாவுக்கு... அவங்களுக்கு நான் ஒரே பிள்ளை...என் மேல் அவங்களுக்கு உயிர்... இளநீர் அவங்களுக்கு ரொம்ப பிடிக்கும்!''-என்று சொல்லிவிட்டு நடந்தார்.

இன்று காலையில் அவரைக் காணவில்லை.முன்பே வாங்கிச் சென்று விட்டாரோ? இடத்தை மாற்றிவிட்டாரோ?. இளநீர் விற்பவனிடம் அடையாளம் சொல்லி விசாரித்தேன். அவன் கண்களால் எதிரிலிருந்த சுவரைக் காட்டினான்.

அங்கே ஒட்டப் பட்டிருந்த `கண்ணீர் அஞ்சலி' போஸ்டரில் சிரித்தது அவரேதான். அதே சிரிப்பு!

# யுகயுகன் கவிதைகள்

சிதைந்து வெளியயேறும்
உதிரப் பெருக்காய் வழியும்
கருவேற்றிய கனவுகளை
உறிஞ்சி உலர்ந்த நாப்கின்களை
எவரும் அறியாது
தீயிட்டு எரிக்கிறேன்
சடசடக்கிறது கனவின் ஓலம்
கழிவறைப் பீங்கானை
விடாப்பிடியாய்ப் பற்றிக் கொண்டு
அகல மறுக்கும் செங்கறையை
வம்படியாய் இழுத்துச் செல்கிறது
ஊதா நிற ஹார்பிக் திரவம்
நினைவின் இருள் மூடிய பள்ளத்தாக்கில்
நீந்திக் கொண்டேயிருக்கின்றன
விழிமூடா மீன்களென
நாம் கைகழுவிய பிறகும்
நம்மைக் கைவிடாத கனவுகள்.

❍

நடத்து!
இது உன் மேடை!
உன் நாடகம்!
அதன் அபத்தங்கள்குறித்து
நான் பேசப்போவதில்லை!
கொடுவாளுடன் நின்றவன்
கரங்களில்
எரிகணையைக் கொடுத்தது போல்
உனக்கு இவ்வாய்ப்பு வழங்கப்பட்ட போதே
தெரியுமெனக்கு.
அப்போதே முடிவு செய்து விட்டேன்
ஒன்று
என் கண்களைக்கட்டிக் கொள்வது
அல்லது
திரையை கிழித்துப் போடுவது.
இவ்வளவு குரூரமான இசையை
உன்னால் பாட முடியுமெனில்
உன் குரலை நெரித்துப் போட
என்னால் முடியாதா?
ஆடையை எரித்துவிட்டாயா?
அதன் கீழ் இன்னும்
தடித்த தோலிருக்கிறது பார்!
உரி!.. மேலும் உரி!
அதுவே என் விலங்கு.
தூசென்றா நினைக்கிறாய்!
தூசுதான்! நினைத்துக் கொள்!
நினைவில் கொள்!
அது
உலகை இருளாற் போர்த்தி
டைனசர்களை கொன்ற தூசு!
பொறிகள் உன் வசமிருக்கலாம்
மறந்து விடாதே!
அவற்றின் விசைகள் எம்மிடம்.
முடிவு செய்து விட்டாய்!
உன் முடிவைச் செய்வதில்
எனக்கென்ன மறுப்பு?
அதுவே எம் விருப்பம்.
ஆடை களைந்து
அரிதாரம் கலைத்துன்
சுயத்துக்கு திரும்பிக் கொண்டிருக்கிறாய்
நல்வரவாகுக!
இத்தருணத்திற்காகவே காத்துக் கொண்டிருந்தோம்
யாம்.

❍

வரைந்து முடித்த கோப்பையை
வீசி உடைத்தேன்
எங்கும் பரவுகிறது
தேநீர் வாசம் என்பவர்கள்
நரகம் செல்வீராக
வீசி உடைத்தேன்
எங்கும் பரவுகிறது
அறுந்த முலைப்பால் மணம் என்பவர்கள்
சொர்க்கம் செல்வீராக
வீசி உடைத்தேன்
எங்கும் பரவுகிறது
என் தூக்கம்
என் துக்கம்
என் மகிழ்வு
இன்னும்
இணையின் பிரிவு
காதலின் கண்ணீர்
கடன்காரனின் வசைச்சொல்
துரோகத்தின் காயக்குருதி
வன்புணர்வின் கசிவு
என்பவர்கள் இந்நகரத்துழல்வீராக
அவரவர் திரவம் நிரப்பி
பருகப் பணிக்குமிவ் வாழ்வு
ஒரு கோப்பை என்பவர்கள்
என்னுடன் சியர்ஸ் சொல்வீராக.

◎

மயிலிறகு மனசு ஷிபானா அஸீம், இலங்கை

# ஒரு பிரிவினை



யாரென்றாலும் சரி
ஒரு பிரிவினை
தடாலடியாக நிகழ்த்தாதீர்கள்

இனிப்பினை பருக்கிய அதே கரங்களாலேயே
கசப்பினை தர நினைப்பவர்கள்
யாரென்றாலும் சரி
உடனடியாக தராதீர்கள்
இனிப்பினை பழகிய நாக்கிற்கு
கசப்பினை
கொஞ்சம் கொஞ்சமாய்
பருக்குங்கள்

அன்பின் சொற்களை
வெறுப்பின் சொற்களாக
உடனடியாக மாற்றாதீர்கள்

அருகிலேயே இருந்த நீங்கள்
உடனடியாக இல்லாமலாகிவிடாதீர்கள்

யாரென்றாலும் சரி
பிரிவுகளை கொஞ்சம் கொஞ்சமாக
பழக்கிவிடுங்கள்

ஒருவரை
உங்கள் எல்லைகளிலிருந்து
இறப்பர் பந்தென
எட்டி உதைத்து வெளியேற்றிவிடாமல்
உங்கள் கரங்களினாலேயே அழைத்துப்போய்
வழியனுப்பி விடுங்கள்

இன்னும்
உன் கூடவேதானிருக்கிறேன்
இன்னும்
உன்னை நேசித்துக் கொண்டுதானிருக்கிறேன்

இன்னும் நானுன்னை நினைத்துக்
கொண்டுதானிருக்கிறேன்
என்றாவது ஒரு நாள்
திரும்பி வந்துவிடுவேன்
எனும் போலிப்பிரமைகளில்
யாரையும் காத்திருக்கச் செய்யாதீர்கள்

இருந்தது போல் சொல்லாமல்
சென்றவர்களை
ஒரேயடியாய் போய்விட்டார்களென
நம்ப முடிவதில்லை
யாராலும்

ஆகவேதான்
கூட்டத்தில்
ரயிலில் பேரூந்தில்
புதிய தொலைபேசி அழைப்பில்
எங்கோ
தூரத்தில் கேட்கும் குரலிலென
யாரேனும் எங்கேனும்
எவரையாவது தேடிக்
கொண்டுதானிருக்கிறார்கள்

அதனால்தான்
யாரென்றாலும் சரி
ஒருவரை பிரிய நினைத்தால்
சொல்லிவிட்டுப்போங்கள்
இனி ஒருபோதும்
திரும்ப வரமாட்டேனென.

ஜே.வஹாப்தீன்

# நானல்ல விலாங்கு



சுங்கானாகவும் வாழ்ந்திருக்கிறேன்
சிலரின் சுவையான முருங்கைக்காய்
பாலாணத்திற்காய் காய்ந்து கருவாடாகிக்
கிழிந்துமிருக்கிறேன்.
இந்த ஆறு அழகானது
இதில்தான் என் பாட்டனும் பாட்டியும்
குளித்ததாகக் கதைகேட்டிருக்கிறேன்.
இதில் நானும் நீந்துகிறேன்
ஒரு கெழித்திபோல
தப்பித்தவறியும்
யாரையும் குத்தியதில்லை.
ஆறு ஓடிக்கொண்டே இருக்கிறது
ஊருக்கு இதனால்தான் வரட்சியில்லை
முதலைகளையும் போட்டுத்தாட்டு வாழவைக்கும்
கருணை ஆற்றுக்குள்
ஒரு பொட்டியானாகியும் ஓடித்திரிந்த சரித்திரங்கள்.
கடலைக் கலக்கும் இலட்சியத்தோடு
முன்னோக்கி ஓடும்
ஓய்வெடுக்காத ஆற்றுக்குள்
நான் தோறாபோல் வாழ்ந்ததாக
பொருத்தமில்லாத பொய்சொல்லவிரும்பவில்லை.
சிலிந்தலைப்போல் கிடந்து
நான்
சில செங்கணையான்களிடம் உயிர் தப்பிய
போராட்டத்தில்
கக்கிஷப்படுத்திய
கொக்கிஸான்களுக்கு கக்கூசுக்குப்போன
சம்பவங்களும்
இந்த ஆற்றுக்குள் கரைந்து ஓடியிருக்கிறது.
உழுவை மீனாகி
ஆற்றை மகிழ்வித்த என்னை
சுண்டல் செய்து உண்டதில்
யாரிடமும் நான் நன்றிகளை எதிர்பார்க்கவில்லை.
எனது வாழ்க்கை யாரையும் கொல்லும்
அல்லது யாரையும் வெல்லும்

தலைப்பின் கீழ் எழுதப்பட்ட காவியமில்லை.
உயிரோடிருந்தால் ஆற்றை அழகுபடுத்தி
அதற்குள் மகிழ்தல்
யாராவது தூண்டிலில் என்னைக் கொன்றால்
யாருக்காவது உணவாகி மறைதல்
ஆமை மலம் கழித்து ஆற்றை அசிங்கப்படுத்தும்
குற்றச்சாட்டை
ஆரல் மீனாகிய என்னில் சுமத்திய
இந்த முதலையின் பற்கள் என்னைப்
பயமுறுத்துகின்றன.
இது விலாங்குகளின் பொற்காலம்
பாம்பிடமும் மீன்களிடமும்
நடித்துக் காலங்கடத்த
நானல்ல விலாங்கு
குரட்டை பனையானாய் தெரவுக்குள் கிடந்தாலும்
வாழ்வேன்
ஆற்றில் விலாங்காய் வாழ்வதைவிட.


❍

# வானம் வழிமறித்த பூமி

கடலாக மாறி
தண்ணீரை இறைக்கும் வானமே
பூமிக்கு வந்தாய் வழிகள் இல்லை.
ஒளி கொடுக்கும்
உன் முகத்தினைக்கண்டு
விழி எடுத்து
வழி படைத்த பூமியில்
வழி அனைத்தும் மறித்து
நீதான் கிடக்கின்றாய்..!
என்ன சபதமோ?
எங்கிருந்து கொட்டுகிறாயோ?
கதிரவனில்லா
உன் அழுமுகம்கண்டு
கண்ணீர்விடும் குடிசைகளுக்கு
ஆறுதல் கூறவா
தண்ணீர்ப்பயணம் வந்தாய்
வாசல் வெள்ளம்.
பாவம் பச்சைக்குழந்தைகள்
அவைகளின்
பசி நெருப்பு
நீர் மூட்டியதே.
குழந்தைகளை ஊட்டி வளர்க்கும்
குணத்துடைய அன்னையாய்
பச்சை வயல்களில் பாய்ந்த
பாசக்கார வானமே
நீராகி வருவாய்
ஆகாரம் தரும்
ஆதாரம் ஆவாய்.
கட்டுடைத்து
ஆற்று வாகனமேறி நீர்வர
உன்னை
அவசரமாய் அழைத்தது யார்?
வயல்மடிகளை குளமாக்கினாய்
பயிர்க்குழந்தைகளை
அதில் சிரிக்கும்
பாசக்கதிர்களை சடலமாக்கினாய்?
குடிசைக்குள் பசித்த
குழந்தகள் அழுவது
வீதிக்கு கேட்கிறது
வயலுக்குள் அழிந்த
பச்சைக் கதிர் மழலைகள்
அழுவது
யாருக்கு கேட்கிறது?
வானமே
நீர்தான் மனங்கறுத்து
கடலாகிறாய்
பின்னர்
பூமிக்கு வந்து
வழிகளை மறிக்கிறாய்.!
சேனை செய்யும்
ஒரு யானை தேசமே
வழியின்றி ஆனதே.
பானை வெறுமையாகி
வாசலில் மிதக்கிறது
நீர்தான் சுமக்க வந்ததோ?

வான் மழையில்
நீர் பயணம்....
வான் கதவு செய்திகள்
ஊர் முழுதும்...
போண் கொண்டு படமெடுத்தல்
வெள்ளத்தில்..
பாண் ஒரு துண்டேனும்
பாதிக்கப்பட்டோருக்கு
வழங்கும் உள்ளத்தில்...
வானமே
உன் மனசு வெளுத்தால்
நாளை ஒளிப்பால் பொழிவாய் நீ
குழந்தைகள் பசியடங்கும்.

◎



# கூத்தராற்றுப்படை குறிப்பிடும் நிகழ்த்துக் கலைஞர்களின் வாழ்வியலும் பண்பாடும்

ச.வாசுதேவன், தஞ்சாவூர்

## முன்னுரை

பண்பட்ட கால சூழலில் மக்களின் மகிழ்விற்காகவும் பண்பாட்டு விழுமியமாகவும் விளங்கியவை கலைகளாகும். கலைகளைத் தனது தொழிலாகக் கொண்டு நிகழ்த்தி வரும் ஆளுமையாளர்களாக இருப்பவர்கள் கலைஞர்கள். கலைஞர்களின் வாழ்வியல் பண்பாட்டின் உச்சமாக விளங்கிய காலம் சங்க காலம். தனித்தனிப் பாடல்களாக பாடப்பட்டவை பத்துப்பாட்டு எனும் தொகுதி உள்ளடங்கும் இதில் ஆற்றுப்படை இலக்கியங்களாக சுட்டப்படுபவை ஐந்து ஆற்றுப்படை நூல்களிலேயே அடி வரையறைகளால் பெரிய நூலான கூத்தராற்றுப்படை மன்னனிடம் இருந்து பரிசில் பெற்ற கூத்தன் மற்றொரு கூத்தனை ஆற்றுப்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டது. தொல்காப்பியம் ஆற்றுப்படைக்கான இலக்கணம் கூறும் பொழுது கூத்தர் என்னும் மரபு வழிக்கலைஞரில் இருந்து தொடங்குகிறார். தொல்காப்பியர் சுட்டும் ஆற்றுப்படை இலக்கணங்களுக்கு உட்பட்டு பெருங்கௌசிகனாரால் பாடப்பட்ட கூத்தராற்றுப்படையில் குறிப்பிடும் நிகழ்த்து கலைஞர்களின் வாழ்வியலையும் பண்பாட்டையும் திறம்பட விளக்குவது இக்கட்டுரையின் முதன்மை நோக்காகும்.

## கூத்தராற்றுப்படையும் கலைஞர்களும்

கூத்தராற்றுப்படை கூத்தர் பொருநர் பாணர் விறலியர் ஆகிய கலைஞர்களின் வகைகளை பட்டியலிட்டு குறிப்பிடுகின்றது. கூத்தரின் வாழ்வியல் தெளிவாக விளக்கப்பட்டு இருக்கின்றன. கூத்தர்கள் கலைகளையும், இசைக்கருவிகளை இசைப்பதையும் தங்களது அன்றாட வாழ்வியலின் பணியாகவே மேற்கொண்டுள்ளனர். கூத்தர்கள் கூத்து நிகழ்த்துபவர்களாகவும் கூத்தினை மன்னனிடம் நிகழ்த்தி காட்டி பரிசு பெறுபவர்களாகவும் வரையப்பட்டுள்ளனர். சங்க இலக்கிய செவ்வியல் மரபில் பண்களுக்கு என்றே தனி இடம் வழங்கப்பட்டு இருக்கிறது. கூத்தர்கள் நாடகம் நடிப்பவர்களாகவும் பாணர்கள் யாழ் மீட்டிப் பாடுபவர்களாகவும் விறலியர்கள் ஆடிப்பாடி மகிழ்விப்பவர்களாகவும் காண்பிக்கப்பட்டிருக்கிறார்கள். நிகழ்த்துக் கலைஞர்களின் பண்பாட்டு ஆவணப் பதிவாக மலைபடுகடாம் விளங்குகின்றது. கூத்தன் தான் கூற வரும் கருத்தினை முன்னமே திறம்படத் தொகுத்து விளக்குவதை.,

*ஆற்றின் அளவும் அசையுணர் புலமும்*
*வீட்டு வளன்சுரக்கும் அவன் நாடுபடுவல்வல்சியும்*
*மலையும் சோலையும்மாப் புகழ் காணமும்*
*தொலையா நல்லிசை உலகம் உடு நிற்ப...... (மலைபடு :)*

என்ற பாடல் அடிகள் எடுத்துரைப்பதைக் காணலாம். "கூத்தர் என்பவர் தனிக்கூத்திலும் கதை தழுவி வரும் கூத்திலும் வல்லவர்" என்கிறார் மா.ராசமாணிக்கனார். *(பத்துப்பாட்டு ஆராய்ச்சி, பக் : 45)* அவரே, "பொருநர் என்பவர் ஏர்க்களம், போர்க்களம் சென்று பாடும் கூத்தர்" எனவும் கூறுகின்றார். *(மேலது, பக் : 45)*

கூத்தரை மலைபடுகடாம் கொடிச்சியர், கோடியர் எனும் சொல் கொண்டு வழங்குகின்றது.

விறலியரின் குரல் திறத்தை.,

*"இரும்புது கஞலிய இன்குரல் விறலியர்" (மலைபடு : 358 அடி)*

என்கிறது மலைபடுகடாம். தொல்காப்பியம் ஆற்றுப்படைக்கான இலக்கணத்தைக் கூறுகின்றது. அவை.,

*"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்*
*ஆற்றிடைக் காட்சிஉறழத் தோன்றி*
*பெற்ற பெருவளம் பெறார்க் அறிகுரீஇ*
*சென்றபயனெதிர் சொன்ன பக்கமும்" (தொல். புறத் : 36)*

கூத்தராற்றுப்படையில் குறிப்பிடப்படும் கூத்தரும் விறலியும் முழவு, பெருவங்கியம், யாழ் போன்ற இசைக்கருவிகளைக் கொண்டு அரசனை வாழ்த்தி போற்றும் மரபினராக இருந்துள்ளனர் என்பதை.,

*"நெடுங்கடைத் துவன்றி முன்றிலை அணுகி*
*முரசு இருப்பவும் தூம்பு இமிரவும்*
*விறலியர் யாழின் நரம்போடு புணர்ந்து" (மலைபடு : அடிகள்)*

எனும் பாடல் அடிகள் உணர்த்துகின்றன. கூத்தராற்றுப்படை நிகழ்த்து கலைஞர்களின் வாழ்வியலை படம்பிடிப்பதோடு மட்டுமல்லாது அவர்களின் பண்பாட்டினையும் கலை மரபுப் பதிவுகளையும் ஆவணப்படுத்தி தன்னுள் பதிவுசெய்துள்ள கலைக்களஞ்சியமாகவும் விளங்குவதைக் காணலாம்.

கூத்தராற்றுப்படை குறிப்பிடும் இசைக்கருவிகளும் இசைக்கும் கலைஞர்களும்

கூத்தராற்றுப்படை மக்களின் வாழ்வியல் குறித்துப் கூறும்பொழுது பலவகைப்பட்ட ஓசையைப் பற்றியும் கூறுகின்றது. அதிலும் குறிப்பாக கொடிச்சியர்(கூத்தர்) பாடல் பாடி புலியால் ஏற்பட்ட காயத்தை ஆற்றும் பண்பாட்டின் விழுமியத்தையும் குறிப்பிட்டுள்ளது. மலைபடுகடாம் கூத்தரை கோடியர் என்ற பெயரால் வழங்குகின்றது. இசைக்கருவிகளை இயங்கள் என்னும் சொல்லைக் கொண்டு பதிவுசெய்கின்றார் டாக்டர் மா.ரா *(பத்துப்பாட்டு ஆராய்ச்சி, பக் : 529)*

பெரிய வகையான இசைக்கருவிகளை நெடும்பல்லியங்கள் என்றும், சிறிய வகையான

இசைக்கருவிகளை குறும்பல்லியங்கள் என்றும் அழைப்பர். (மேலது, பக் : 529) ஆயகலைகள் அறுபத்து நான்கில் இசைக்கருவிகள் மூன்றாவதாக உள்ளது. சமணர் நூல்களில் ஆடவர் கலைகள் எழுபத்திரண்டு என்றும் பெண்களுக்கு உரிய கலைகள் அறுபத்து நான்கு என்றும் கூறப்பட்டுள்ளன. (தமிழ்ப் பண்பாட்டு வரலாறு, பக் : 492)

நன்னன் சேய் நன்னனை கூத்தர்கள் காணச் செல்லும்போது அவர்கள் இசைக்கருவிகளை மூட்டை கட்டி எடுத்துச் சென்றனர் என்றும் அக்கருவிகளை நான்கு வகையாக வகைப்படுத்தி உரையாசிரியர்கள் உரைகண்டுள்ளனர் எனபது தெளிவு. அவை., தோற்கருவி, துளைக்கருவி நரம்புக்கருவி, கஞ்சக்கருவி.

**கூத்தராற்றுப்படை குறிப்பிடும் தோற்கருவிகள்**

தோற்கருவிகள் என்பவை ஆவின்,மறி, கலைமான் ஆகிய விலங்குகளின் தோலால் செய்யப்படும் இசைக்கருவிகளாகும். நன்கு இறுகி வார்பிடிக்கப்பட்ட மத்தளம் எல்லா கருவிகளுக்கும் அடிப்படையானது. சிறுபறை (ஆகுளி) சல்லிகை, கரடிகை (தட்டைப்பறை) மாக்கினை, ஒரு கண் மாக்கினை என்னும் பறை, பதலை, எல்லரி, முழவு, உடுக்கை, பம்மை (பம்பை) போன்ற கருவிகளைப் பற்றிய குறிப்புகள் உள்ளன.

இவ்விசைக்கருவிகள் பற்றி.,

"விண்ணதி ரிமிழிசை கடுப்பப் பண்ணமைத்துத்
திண்வார் விசித்த முழவோ டாகுளி
நுண்ணுருக் குற்ற விளங்கடர்ப் பாண்டில்"
(மலைபடு, 2 - 4 அடிகள்)

எனும் பாடலடிகள் கூறுகின்றன. மத்தளம் இரண்டு பகுதிகளைக் கொண்டது. ஒரு பகுதி கண், மறுபகுதி தொப்பை(வயிறு). சமகாலத்தில் தெருக்கூத்துக்குப் பயன்படும் முக்கியமான இசையாக்கருவியாகவும் மத்தளம் (மிருதங்கம்) உள்ளது.

கூத்தராற்றுப்படை குறிப்பிடும் துளைக்கருவிகள்

துளைக்கருவிகள் என்பவை, காற்றின் இயக்கத்தால் ஒலி தரும் கருவிகள். காற்றினை அடிப்படையாகக் கொண்டது. இவ்இசைக்கருவிகள் பண்ணுக்குப் பயன்படும் பண்கருவிகளாகும். பண்கள் திணையை மையமிட்டதாகும். திணைசார் மக்களின் பயன்பாட்டிற்கு உரியது. துளைக்கருவிகள் பற்றிய நுட்பமான விடயங்களை இசைத்தமிழ் இலக்கிய இலக்கணங்கள் வகைப்படுத்தினாலும் மலைபடுகடாம் பல்வேறு கருவி வகைகளை குறிப்பிடுகின்றன.

குழல், வங்கியம், தூம்பு, நெடுந்தூம்பு, குறுந்தூம்பு, நெடுவங்கியம் (யானையின் துதிக்கையினை ஒத்தது), ஊது கொம்பு (மாட்டின் கொம்பினை அடிப்படையாகக் கொண்டது) ஆகிய இசைக்கருவிகளின் வகைகள் பற்றிய பதிவுகள் உள்ளன.

"கண்ணிடை விடுத்த களிற்றுயிர்த் தூம்பி
இளிப்பயிர் இமிருங் குறும்பரந் தூம்பொடு
விளிப்பது......"(மலைபடு, 6 – 8 அடிகள்)

கூத்தராற்றுப்படை குறிப்பிடும் நரம்புக் கருவிகள்

நரம்பினைக் கொண்டது நரம்புக்கருவிகளாகும். நரம்புக் கருவிகளை இந்நூல் குறிக்குமிடத்து யாழ் எனும் ஒரு கருவியை மட்டும் பதிவு செய்கின்றது. யாழின் இயல்புகளைப் பற்றி விரிவாகக் கூறுகின்றது. பெருங்கௌசிகனார் இசைத்தலை தொடுதல் என்னும் சொல்லைக் கொண்டு கையாண்டுள்ளார். யாழ் நான்கு வகைகளை உடையது. அவை பேரியாழ், சகோடயாழ், செங்கோட்டியாழ், மகரயாழ். இதில் பேரியாழ், சீறியாழை மட்டும் மலைபடுகடாம் குறிப்பிடுகின்றது. யாழ் பாணர்களின் வாசிப்புக் கருவியாக உள்ளது. இசையையும் கூத்தையும் வளர்த்துப் போற்றிய குடியினர் பாணர் என்கிறார் முனைவர் நர்மதா. (ஆடற்கலையும் தமிழ் இசை மரபுகளும், பக் : 24) யாழ் பண்கருவியாகும். யாழை வருணிக்கும் இந்நூல் மற்ற இசைக்கருவிகளைக் காட்டிலும் இக்கருவிக்கு முக்கியத்துவம் அளிக்கின்றது. யாழை பொன்நிறம் பூட்டப்பட்ட தோலைக் கொண்டு போர்த்தியுள்ள நிலையைக் காணமுடிகின்றது. யாழின் தன்மைக்கேற்ப நல்யாழ் என்னும் சொற்றொடரை பல இடங்களில் ஆற்றுப்படை குறிப்பிடுகின்றன. அவை.,

"மருதம் பண்ணிய கருங்கோட்டுச் சீறியாழ்
நரம்புமீ திறவா"..... (மலைபடு, 534 – 535 அடிகள்)
என்றும்.,

களங்கனி அன்ன கதழ்ந்து கிளர் உருவின்

வணர்ந்து ஏந்து மருப்பின் – வள் உயிர்ப் பேரியாழ்....
(மலைபடு, 36 – 37 அடிகள்)

என்றும் பதிவுகள் உள்ளன.

கூத்தராற்றுப்படை குறிப்பிடும் கஞ்சக் கருவிகள்

கஞ்சக் கருவிகள் என்பவை பித்தளை, உலோகங்கங்களால் ஆக்கப்படுவது. பித்தளையை (கஞ்சம் – வெண்கலம்) தகடாக வடித்து உருவாக்கப்படுவது இக்கருவி. இதனை தாளம் என்பர். கூத்துக் கலைஞருக்கு மத்தளமும் தாளமும் இருகண்களாகும். தாளத்தை மலைபடுகடாம் பாண்டில் என்று குறித்துள்ளது. இதனை உலோகத்தாளம் என்பார் நச்சினார்க்கினியர். (மலைபடு, பக் : 59) இதனை.,

*நுண் உருக்கு உற்ற விளங்கு அடர்ப் பாண்டில்"*
*(மலைபடு, 4 அடி)*

*என்கின்றது.*

*முடிவுரை*

*கலைஞர்களுக்குப் பண்பாடும், கலையியலும் அன்றாட வாழ்வில் கடைபிடிக்கும் தலையாய தொழிலாக விளங்கின. கூத்தறாற்றுப்படையே அதற்கு சான்றாதாரம். தமிழ்ப் பண்பாட்டுப் பெட்டகமான பத்துப்பாட்டில் கூத்தறாற்றுப்படை கூறும் நிகழ்த்துக் கலைஞர்களின் வாழ்வியல் தனித்துவ செவ்வியல் தன்மை பெற்றிருப்பினும், இசையை மருந்தாகக் கொண்டு காயம் ஆற்றுதல் (இன்றைய பாடம் போடும் முறை), பாட்டுப் பாண்பாடு, இசைக்கருவிகளின் அளவு, செய்முறைத்தொழில் நுட்பம், பண்களை கையாளும் திறம் ஆகியவற்றை நோக்குங்கால் சங்ககால கூத்தராற்றுப்படை குறிப்பிடும் கலைஞர்களின் நீட்சியே சமகாலத் தெருக்கூத்துக் கலையின் தொடர்ச்சியாக உள்ளது என்பதை இவ்ஆய்வுக் கட்டுரை தீர்க்கமாய்க் கூறுகின்றது.*

## துணைநூற்பட்டியல்

*சங்க இலக்கியம் மலைபடுகடாம் (பத்துப்பாட்டு – 2), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் வெளியீடு, சென்னை.*

*ஆடற்கலையும் தமிழிசை மரபுகளும், தொ.ஆ சிற்பி பாலசுப்பிரமணியம், முதல் பதிப்பு : 2021, சாகித்திய அகாதெமி வெளியீடு, சென்னை.*

*தொல்காப்பியம் தெளிவுரை, உ.ஆ ச.வே. சுப்பிரமணியன், 15 ம் பதிப்பு : 2019, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.*

*சங்க இலக்கியம் (பாட்டும், தொகையும்), எஸ். வையாபுரிப்பிள்ளை, முதல் பதிப்பு : 2012, முல்லை நிலையம், மதுரை*

*பத்துப்பாட்டு ஆராய்ச்சி, டாக்டர் மா.இராசமாணிக்கனார், இரண்டாம் பதிப்பு : 2019, சாகித்திய அகாதெமி வெளியீடு, சென்னை*

*தமிழ்ப் பண்பாட்டு வரலாறு, தொ.ஆ பேரா. சண்முகசுந்தரம், காவ்யா வெளியீடு, பதிப்பு : 2022, சென்னை*

*மலைபடு கடாம், உ.ஆ ப.சரவணன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், முதல்பதிப்பு : 2022, சென்னை.*

கனகசபாபதி செல்வநேசன்

# பயணம்

*காலப் பயணத்தில்*
*ஆழ்மாய்ப் பதிந்த*
*சுவடுகள்*
*புற்களின் விரிப்பில்*
*வகுந்தெடுத்த*
*நினைவுக் குறிப்புகள்*
*பட்டாம் பூச்சிகளின்*
*குதூகலிப்பு*
*ஒன்றை ஒன்று*
*துரத்தி விளையாடும்*
*தும்பிகளின் சாகசம்*
*பாதங்கள் கிழிக்கும்*
*முட்களின் வன்மம்*
*கொக்கரிக்கும் கோழியின்*
*ஆரவாரம்*
*பார்வைகள் சல்லாபிக்கும்*
*காதலின் மௌனம்*
*வியர்வை நனைத்த*
*விடியலின் விழுதுகள்*
*அடக்குமுறை கிழித்த*
*உதிரத்தின் படிமங்கள்*
*விளக்குமாற்றில்*
*கிழிபட்டுக் கந்தலான*
*முகமூடிகளை*
*இழுத்துச் செல்லும்*
*மூஞ்சூறுகளின்*
*கர்வம்*
*என்பவற்றுடன்*
*தொடரும்*
*பயணத்தின் நீட்சியில்*
*தலைமுறைகள்*
*கடந்து செல்கின்றன.*
*வரையறையற்றுத்*
*தொடரும்*
*தாகத்தின் வேண்டுதல்*
*கடலோடு களமாடி*
*கடாரம் வென்றவனின்*
*வருகைக்காகக்*
*காத்திருக்கிறது*
*சோழர்களின் தேசம்.*


# முந்தைய இதழ்கள்


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
● வைகாசி - 2022


● சித்திரை - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்



காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
● மார்கழி – 2021


● மாசி - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
ஆடி 2019


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
ஐப்பசி 2019


● தை - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
மொழிபெயர்ப்புச் சிறப்பிதழ்


காற்றுவெளி
மொழிபெயர்ப்புச் சிறப்பிதழ் - 2020


● பங்குனி - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்